

கல்கி
ALKI
.5.1971
0 காசு



KMS-2 PREM ASSOCIATES-TAM


PORTLAND
CEMENT
ACC
50 BAGS TO A TONNE
நிலையான உறுதி
எஸிஸி
தி அஸோஸியேடட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்.
தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆஃப் இந்தியா லிமிடெட்.

கல்கி

பொருளடக்கம்

விரோதிகிருது, வைகாசி 9 ○ மே 23, 1971

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்:	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00



'கோபு' என்று அன்போடு அழைக்கப்படும் மணமகன் சிரஞ்சீவி கோபாலகிருஷ்ண காந்தி. இரு மகாபுருஷர்களின் பேரன். அவர் காந்தி அடிகளின் புத்திரரும், பண்புச் செல்வருமான ஸ்ரீ தேவதாஸ் காந்தி அவர்களின் குமாரர். அவரது அன்னையார் லக்ஷ்மி அவர்கள் பூஜ்ய ராஜாஜியின் செல்வப் புதல்வி. திண்டிவனத்தில் ஸப் - கலெக்டராகப் பணிபுரியும் கோபாலகிருஷ்ண காந்தி ஐ. ஏ. எஸ்ஸின் கரம் பிடித்த பாக்யவதி சௌபாக்கியவதி தாரா, பம்பாயில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் உயர்பதவி வகிக்கும் ஸ்ரீ எம். ஏ. அனந்த் அவர்களின் புதல்வி; பிரபல தொழிலதிபரும் மைசூர் ராஜ்யப் பிரமுகருமான ஸ்ரீ எம். ஏ. ஸ்ரீநிவாசனின் பேத்தி. இத்திருமணம் பம்பாயில் மே மாதம் 6ந் தேதி வெகு சிறப்புடன் நடந்தேறியது. மே ஒன்பதாம் தேதி மாலை சென்னையில் கல்கிப் பூங்காவில் நடந்த வரவேற்பு வைபவத்துக்கும் பூஜ்ய ராஜாஜியும் மற்றும் ஏராளமான நண்பர்களும் வருகை தந்து சிறப்பித்தனர். வாழ்க மணமக்கள்! வாழ்க தாரா - கோபு! ★

மனம் பொங்கும் திருமண விற்பனை!





மலர் 30

இதழ் 43

கிழக்கு வங்காளத்தின் விடுதலைப் போர்

க. சந்தானம்

சென்ற மார்ச் 26ம் தேதி முதல் எட்டு வாரங்களாகக் கிழக்கு வங்காளத்தில் விடுதலைப் போர் நடைபெற்று வருகிறது. ஒருபுறம் இக்காலத்திய பெரும் போர்ச் சாதனங்கள், டாங்கிகள், பீரங்கிகள், யுத்த விமானங்களோடு நெடுநாள் தேர்ச்சிபெற்ற பாகிஸ்தானிய ராணுவப் படை. மறுபுறம் விடுதலை உணர்ச்சியையே முக்கிய சாதனமாகக் கொண்ட தொண்டர் படை. முன் காலங்களில் ஜெங்கிஸ் கானும், நாதர் ஷாவும், சமீப காலங்களில் ஹிட்லரும் ஸ்டாலினும் நகரங்களை நாசமாக்கிப் பல்லாயிரம் மக்களைப் படுகொலை செய்ததாகப் படித்திருக்கிறோம். பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகான் அவர்களையெல்லாம் பெரிதும் மிஞ்சிவிட்டார் என்பதில் சந்தேகமில்லை. சில நாட்களுக்கு முன் தங்கள் ராணுவ ஆட்சியை மீண்டும் நிலைநிறுத்திவிட்டதாக நிரூபிப்பதற்குச் சில மேல்நாட்டுப் பத்திரிகை நிருபர்களைக் கிழக்கு வங்காளப் படைத் தலைவர்கள் சில இடங்களுக்கு அழைத்துச் சென்றனர். அவர்களே விடுதலைப்போரில் குறைந்தது ஐந்து லட்சம் மக்கள் ராணுவத்தாரால் கொல்லப்பட்டிருப்பார்கள் என்று மதிப்பிட்டிருக்கின்றனர். பாரதத்துக்கு இதுவரையில் சுமார் முப்பது லக்ஷம் அகதிகள் வந்து குவிந்திருக்கின்றனர். அமெரிக்கக் காங்கிரஸ் வெளிநாட்டு விவகாரக் கமிட்டி முன் செனடர் கென்னடியும், மற்றவர்களும் கிழக்கு வங்காளத்தில் செய்யப்பட்ட படுகொலைகளைப்பற்றி மிக்க உணர்ச்சியுடன் பேசியிருக்கின்றனர். வியட்நாமிலும் நைஜீரியாவிலிருந்து பிரிந்து போவதற்காகக் கலகம் செய்த பயாப்ராவிலும் பல வருஷங்களில் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைக் காட்டிலும் அதிகக் கொடுமைகளை இந்த இரண்டே மாதங்களில் கிழக்கு வங்காள மக்கள் அனுபவித்திருக்கிறார்கள் என்று கூறினர். பிரிட்டனில் மக்கள் சபையிலும் இந்த அக்கிரமங்களைக் கடுமையாகக் கண்டித்திருக்கின்றனர்.

கிழக்கு வங்கத்தில் நடைபெறும் சம்பவங்களைப் பற்றி உலகுக்கு எவ்விதத் தகவலும் தெரியக்கூடாதென ராணுவ ஆட்சியினர் நடவடிக்கை எடுத்து வந்திருக்கின்றனர். போர் தொடங்கிய மறுநாளே எல்லாப் பத்திரிகை நிருபர்களையும் வெளியேற்றி விட்டு அங்குள்ள பத்திரிகைகளையும் மூடி விட்டனர். மேற்கு பாகிஸ்தானில் பத்திரிகைகள் இந்தச் சம்பவங்களைக் குறித்த எவ்விதச் செய்திகளையும் பிரசுரிக்கக்கூடாதெனத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இத்தடைகளை மீறிக் கிடைத்திருக்கும் விவரங்களே இவ்வளவு கொடூரமாக இருக்குமாயின், உண்மை பன்மடங்காக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. எத்தனை வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டும், தீக்கிரையாகியும் நாசமாகியிருக்கின்றன! எத்தனை பொதுக் கட்டிடங்கள், பாலங்கள், மின்சார நிலையங்கள் போன்ற பொதுச் சொத்துக்கள் நாசமாகியிருக்கின்றன! இவற்றால் ஏற்பட்ட நஷ்டங்களை மதிப்பிடுவதற்கு வழியேயில்லை.

கிழக்கு வங்காளத்தின் விடுதலைத் தலைவர் முஜிபுர் ரஹ்மானைப் பற்றிய செய்தி இப்பொழுதுதான் கிடைத்திருக்கிறது. பாகிஸ்தான் ராணுவத்தார் அடக்குமுறையை ஆரம்பித்த மார்ச்சு 26ம் தேதி அன்றே அவர் தம் குடும்பத்தாரையும் சகாக்களையும் மறையும்படி கூறிவிட்டுத் தம்மை அதிகாரிகளிடம் ஒப்புவித்து, 'என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள், நிராயுதபாணிகளான எனது மக்களை வீணாகத் துன்புறுத்தாதீர்கள்' என்று கூறிவிட்டாராம். அதன்பின்னர் அவரை மேற்குப் பாகிஸ்தானுக்குக் கொண்டு போனதாகவும், அங்கே அவர் உண்ணாவிரதம் இருந்ததாகவும், மீண்டும் டாக்காவுக்குக் கொண்டு போய்ச் சிறையில்

வைத்திருப்பதாகவும் வதந்திகள் பிரசுரிக்கப்பட்டன. அவற்றின் உண்மையைப் பற்றி பாகிஸ்தான் அதிகாரிகள் எதையும் கூற மறுத்துவிட்டனர். ராவல்பிண்டியில் ஒரு ராணுவ கோர்ட்டில் அவரை விசாரணை செய்யப் போவதாகவும் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டது.

அவர் உயிரோடிருந்தால் அவரை விடுதலை செய்வதற்குப் பாரத அரசாங்கமும், அமெரிக்கா, ருஷியா, பிரிட்டன் போன்ற மற்ற வல்லரசுகளும் தங்களாலானவைகளைச் செய்வார்களென்று எதிர்பார்க்கலாம். அவர் கதி எப்படியானாலும், உலகில் தனது நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டுத் தியாகம் செய்த பெரும் தலைவர்களின் முன்னணியில் அவர் சரித்திரப் புகழ் பெற்றுவிட்டார் என்பதில் ஐயமில்லை.*

எவரும் எதிர்பாராமல் யாஹ்யா கான் மக்களிடம் அரசை ஒப்புவிக்கப் போவதாகக் கூறி, அதற்காகப் பாகிஸ்தானின் எல்லாப் பாகங்களிலும் தேர்தல் நடத்தியபோது அவரது நல்லெண்ணத்தை முஜிபுர் ரஹ்மான் ஓரளவு நம்பினது சகஜமே. தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய சபை மூலம் கிழக்கு வங்காளத்துக்குக் கூடியவரையில் சுதந்திரம் பெறவே அவர் விரும்பினார். கிழக்கு வங்காள மக்கள் ஏகோபித்து அவரது அவாமி லீகுக்கு ஆதரவு அளித்ததால் பாகிஸ்தான் மக்கள் சபையிலும் கிழக்கு வங்காள ராஜ்ய சபையி

தனது தலைமையில் ஒரு போலி ஜனநாயகத்தை ஸ்தாபிக்கலாம்' என்று யாஹ்யா கானும், அவருடைய ராணுவ ஆலோசகர்களும் திட்டம் போட்டிருக்க வேண்டுமென்று இப்பொழுது தெளிவாகிறது. தங்கள் திட்டம் தோற்கவே, மக்களால் ஆதரிக்கப்பட்ட அவாமி லீக் கட்சியையும் அதன் தலைவரையும் பலாத்காரமாக அடக்குவதென்று தேர்தல் முடிவுகள் வெளியானவுடன் நிச்சயித்திருக்க வேண்டும். தந்திரமாகப் படைகளைக் கிழக்கு வங்காளத்தில் குவிக்கும் வரையில் மக்கள் சபையைக் கூட்டப் போவது போல் பாவனை செய்து, முஜிபுர் ரஹிமானுடன் ஆலோசனை செய்வது போல் பாசாங்கு செய்து திடீரென்று அடக்குமுறையைத் தொடங்கியது உலக சரித்திரத்திலேயே மிகவும் நீசத்தனமான செய்கையாகும்.

விடுதலை இயக்கத்தை அடியோடு அடக்கிவிட்டதாகவும், ராணுவ ஆட்சிக்குக் கிழக்கு வங்காள மக்கள் கீழ்ப்படிந்துவிட்டதாகவும் பாகிஸ்தான் அரசாங்கம் பிரசாரம் செய்து வருகிறது. கோடிக்கணக்கான மக்களின் ஆதரவைப் பெற்றதோர் இயக்கத்தை அவ்வளவு எளிதில் நசுக்கிவிட முடியாது. பல மாதங்களோ, வருஷங்களோ ராணுவ ஆட்சி நடைபெறலாம். முடிவில் கிழக்கு வங்காளம் விடுதலை அடைந்தே தீரும். தனி அரசாங்கமாகுமா, இத்தனை கொடுமைகளையும் மறந்து பாகிஸ்தானின் இதர பாகங்களோடு

என்ன தண்டனை அளிக்கப்படும் என்று நாம் எவருமே ஊகிக்கலாம். இருந்தாலும் நம்மில் சிலர் இனியேனும் பாகிஸ்தான் சர்க்காருக்குப் பகுத்தறிவு உதயமாகலாம் என்று நம்புகிறோம். ''பாகிஸ்தானைக் காக்க வேண்டும்'' என்பதாக உலவி வரும் பிரசார கோஷம் நடைமுறையில் உண்மையாக வேண்டுமாயின் அதற்கு வழி பழிவாங்குவது அல்ல; போராட்டமும் அல்ல. பாகிஸ்தான் என்ற கூட்டு அமைப்பின் கீழ் சுய ஆட்சி உரிமை கொண்ட கிழக்கு வங்கம் இயங்குவதற்கு அங்கீகாரம் அளித்து, அமைதி வழி மூலமே பாகிஸ்தானைக் காக்க முடியும். இதுவரை முஜிபுர் ரஹ்மானுக்கு மரண தண்டனை தராதது ஒரு நல்ல விஷயம். ஏனெனில் பாகிஸ்தானை உண்மையில் காக்கக்கூடிய சமாதான வழிக்கு முஜிப் கருவியாக இருக்க முடியும். மனக் கசப்பும், ஆசாபங்கமும், விம்பும் கொண்ட அண்டை நாடாகப் பாகிஸ்தான் இருப்பதை விட, அதற்கு அடக்கம் கற்பிக்கப்பட்டு அது பணிவுடன் இருந்தால் நமக்கு நல்லது.

✽

பின்வரும் செய்தியறிக்கை, நிகழ்ச்சிகள் இன்றுள்ள ரீதியிலேயே நீடித்தால் என்ன நேரும் என்பதை எடுத்துக் காட்டுகிறது:

> பங்களா தேஷ் ராணுவ நடவடிக்கையால் உருக்குலைந்திருக்கும் பாகிஸ்தானின் பொருளாதாரத்தை மீண்டும் உயர்த்த கம்யூனிஸ்ட் சீனம் முன்வந்திருப்பதாகத் தெரிய வருகிறது. கிழக்கு வங்கத்தின் பொருளாதாரச் சீரமைப்பைப் பெரு மகிழ்ச்சியுடன் தாம் ஏற்பதாகச் சீனப் பிரதமர் சூ-என்-லாய் ஜனாதிபதி யாஹ்யா கானுக்குத் தெரிவித்திருக்கிறாராம். இப்போரில் நாசமாக்கப்பட்ட இருபத்தேழு சணல் தொழிற்சாலைகளையும் மற்ற தொழிலகங்களையும் மீண்டும் கட்டிக் கொடுப்பதாகச் சீனம் வாக்குறுதி தந்திருக்கிறது. கிழக்கு வங்கத்தில் வீடு வாசல் இழந்தவர்களின் புனரமைப்பில் உதவி புரிவதாகவும், கிழக்கு வங்கத்துக்குப் புத்துருவம் தரும் அபிவிருத்தித் திட்டத்தை வகுப்பதாகவும் சீனம் முன்வந்திருக்கிறதாம்.

✽

அடியிற் காணும் செய்தி மகிழ்வூட்டுவதாக இல்லை:

> பட்னா, மே 12—
> காரியாலய வேலையில் பிஹார் சர்க்கார் அதிகாரி ஒருவர் ஆங்கிலத்தை உபயோகித்தார் என்பதால் அவர் 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டிருக்கிறார் என அதிகாரபூர்வமாகத் தெரிகிறது. சர்க்கார் அலுவல் முழுவதற்கும் ஹிந்தியையே உபயோகிக்க வேண்டும் என பிஹார் அரசாங்கம் சமீபத்தில் முடிவெடுத்தது. மேற்படி அதிகாரியை சஸ்பெண்ட் செய்து உத்தரவு பிறப்பித்த முதன் மந்திரி ஸ்ரீ கர்பூரி தாகூர், ஆங்கிலத்தை உபயோகித்த அதே குற்றத்துக்காக மேலும் பன்னிருவருக்குக் கண்டனம் அனுப்பியுள்ளார்; முப்பது பேரிடம் விளக்கம் கேட்டிருக்கிறார்.

இந்த இலட்சணத்தில்தான் சிலர் ஹிந்தியையே அகில இந்தியாவுக்கும் ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்!

✽

சர்க்கார் உத்தியோகங்களில் ஏறக்குறைய சரிபாதியைப் பின்தங்கிய வகுப்பினருக்கு ஒதுக்கிவிடுவதால் நாட்டில் வேலையின்மைப் பிரச்னையைத் தீர்த்துவிட முடியாது. சாலை போடுவது, குடிநீர் விநியோக விஸ்தரிப்பு, சிறிய வீடுகள் கட்டுவது போன்ற திறந்த வெளித் திட்டங்களிலேயே ஏராளமான மனித சக்தியைப் பயனாக்கிக் கொள்ள இடமுண்டு.

''பின்தங்கிய வகுப்பினர்'' என்று பெயரிட்டு ஸ்தானம் ஒதுக்குவது சிரமமான காரியம். ''ஹரிஜனங்கள்'' என்று சொன்னால் குறிப்பிட்ட பகுதியினரை வரையறுத்து அடையாளம் கண்டு கொள்வது போல், ''பின்தங்கிய வகுப்பினர்'' என்ற பொதுப் பெயரில் முடியாது. பல வகுப்பினர் தாங்கள் பின்தங்கியிருப்பதாகவே காட்டிக் கொண்டு லாபமடையப் போட்டி போடுவார்கள்.

தொழிலதிபர் மறைவு

திரு வி. எஸ். லோகநாத முதலியாரின் மறைவில் தமிழ் நாட்டின் தொழில் துறை, பெரும் நஷ்டம் அடைந்துள்ளது. பெரிய தொழில்களைத் திறம்பட நிர்வகிக்கும் அசாதாரண சாமர்த்தியமும், சிறிய தொழில்களைப் பெரியனவாக வளர்த்துப் போஷிக்கும் ஆர்வமும், எத்தனை தொழில்களை நடத்தினாலும் ஒவ்வொன்றிலும் கவனம் குறையாது பார்த்துச் சீராக்கும் திறனும் திரு லோகநாத முதலியாரைத் தொழில்



உலகில் சிறப்பிடத்துக்கு உயர்த்தியிருந்தன. இந்தியா சிமெண்ட்ஸ், திருவாங்கூர் சிமெண்ட்ஸ், டபிள்யூ எஸ். இன்ஸு-லேட்டர்ஸ் லிமிடெட், தாராபூர் கம்பெனி ஆகிய பிரபல தொழிலகங்கள் அவரது நிர்வாகத் திறனுக்குச் சான்றாகும். திரு லோகநாத முதலியார் பல கல்வி ஸ்தாபனங்களுக்கு நன்கொடைகள் வழங்கிப் பெருமை பெற்றவர். அவரது குடும்பத்துக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்ன சேதி?

பழைய ஐ.ஜி.யும் புதிய ஐ. ஜி யும்

தமிழகம் கூடியமட்டும் அமைதிகரமாக இருப்பதற்கு ஒரு காரணம் பொதுவாகத் தமிழ் மக்கள் வன்செயல், கலாட்டா, அராஜகம் இவற்றில் ஈடுபடுவதில்லை என்பது; இன்னொரு காரணம் தமிழகத்தின் போலீஸ் இலாகாவின் மேல் மட்டங்களில் பதவி வகிக்கும் அதிகாரிகளின் நிர்வாகத் திறன். இன்ஸ்பெக்டர் ஜெனரலாகச் சிறப்புப் பணியாற்றிய திரு ஆர். எம். மகாதேவன், மாநிலத்தில் அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் மகத்தான பொறுப்பை வெகு நன்றாக வகித்தார். சமீபத் தேர்தலின்போது பயங்கரக்



திரு மகாதேவன்



திரு அருள்

கலவரம் மலிந்து நடக்கக்கூடும் என்ற பீதி பரவலாயிருந்த காலத்தில் அவர் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கணிசமான அளவுக்குச் சூழ்நிலையைத் திருப்திகரமாக ஆக்கினார். அவருக்கு நமது நன்றி உரித்தாகும். ஐ. ஜி. பதவியிலிருந்து விலகி வேறு பதவி ஏற்கும் அவருக்கு நல்வாழ்த்துக்கள் கூறுகிறோம்.

ஐ. ஜி. பதவிக்கு இன்று வந்துள்ள திரு எப். வி. அருள் அவர்களைத் தமிழகம் ஏற்கெனவே நன்கு அறியும். அவரது திறமை காரணமாகவே மத்திய அரசு அவரைத் தங்களுக்குக் கொடுத்து உதவும்படி கோரியது. புதுதில்லியில் தமது புகழை உயர்த்திக் கொண்டு தமது சொந்த இடத்துக்கு இப்போது திரும்பி வந்து விட்டார். அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். விவேகமும் கட்டுப்பாடும் மிகுந்த அவருடைய பதவிக் காலத்தில் ராஜ்யத்தில் அமைதி ஓங்கட்டும்.

மௌனகுரு ஸ்வாமிகள்

சித்த புருஷராகவும் பரம பக்தராகவும் தங்காலில் வாழ்ந்துவந்த ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு ஸ்வாமிகள் சித்தியடைந்து விட்டார்கள். ஸ்வாமிகளின் பூர்வோத்தரத்தையோ பிராயத்தையோ உள்ளபடி அறிந்தவர் யாருமில்லை. குறைந்தது அவருக்கு 125 வயதிருக்கலாம் எனப்படுகிறது. சாமானிய மானுடர்களைப் பற்றிச் சொல்லுவது போல் அவரது சரிதம் தெரியாவிட்டால் என்ன? வெளி உலகுக்கு அவரைத் தெரிந்த நாளாக அவர் அன்பின் சரிதத்தை வாழ்ந்து காட்டினார். பச்சிலை மூலிகைகள் தந்து பலரது உடற்பிணி போக்கினார். பரமனது நினைவை உண்டாக்கிப் பலரது மனப் பிணி நீக்கினார். மௌனத்தின் மூலமே அரிய உபதேசங்கள் அளித்து வந்தார். ஸ்ரீ திருப்புகழ் ஸ்வாமிகள் வள்ளிமலையை விட்டிறங்கிய பின், ஸ்ரீ மௌனகுரு ஸ்வாமிகள் அங்கு குகையில் பதினெட்டு ஆண்டுகள் தங்கியிருந்தார். பிறகு வேலூரிலிருந்து இருபதாவது மைலில் உள்ள தங்காலில் ஆசிரமம் அமைத்துக் கொண்டிருந்தார். இன்று மோனப் பெரும் பொருளில் மூழ்கிவிட்டார் மௌனகுரு ஸ்வாமிகள்.

கட்டட யுகம்!

மக்களுக்கு உண்மையான நலன் பயக்கும் திட்டங்களில் அரசாங்கத்துக்குக் கருத்து இல்லை. கண்ணுக்குமுன் பிரம்மாண்டமாகத் தெரியும் அவசியமற்ற இனங்களிலேயே பெரிய செலவு செய்கிறார்கள். இப்படிப்பட்ட ஆடம்பரத் திட்டங்களை மத்திய சர்க்காரும் ஆதரித்து நிதி வழங்குகிறது. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி, பெரும் கட்டடத் திட்டங்களில் இறங்குவதையும், கட்டட கண்ட்ராக்டர்களுடன் கட்சி யஜமானர்கள் கூடாநட்பு கொள்வதையும் சகஜமாகக் காண்கிறோம். அரசியலிலும் பணமே பேசத் தொடங்கி விட்டது! லைசென்ஸ்தாரர்கள், கட்டட காண்ட்ராக்டர்கள் ஆகியோர்களுடன் தொடர்பு கொண்ட ஒரு தொழிலே அரசியலோ என்னும்படியாகி விட்டது!

திருமண மண்டபத் திருப்பணி

சமீப காலமாகச் சென்னை பல்லாவரத்தின் அருகில் உள்ள வைணவத் தலமாகிய திருநீர்மலையில் நடக்கும் கலியாணங்களின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே வருகிறது. எனவே அங்கு ஒரு வசதியான கலியாண மண்டபம் எழுப்ப அன்பர்கள் நன்முயற்சி மேற்கொண்டுள்ளனர். இத்தலத்தில் திருமங்கை ஆழ்வார் அணிமாமலர் மங்கையை மங்களாசாஸனம் செய்திருப்பதால், 'அணிமாமலர் மங்கை கலியாண மண்டபம்' எனப் பெயரிட விருக்கிறார்கள். தி. நகர் பிரபல டாக்டர் ஸ்ரீ பி. பி. அண்ணங்கராசாரியாரின் தலைமையில் நடக்கும் இந்த நற்பணிக்கு ஸ்ரீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார் ஸ்வாமிகள் அடிக்கல் நாட்டியிருக்கிறார். கலியாண மண்டபத்தின் வருவாயிலிருந்து வேதமும் பிரபந்தமும் கற்பதற்கு உதவி செய்யப்படும் என்பது பாராட்டுக்குரியது. இந்த நல்ல காரியத்துக்குப் பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: திரு ஏ. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், பொருளாளர், அணிமாமலர் மங்கை கலியாண மண்டபக் கமிட்டி, 14, ரங்கநாதன் ரோடு, நேரு நகர், குரோம்பேட்டை, சென்னை-44.

மகுடபதி



அமரர் கல்கி

ஏழாம் அத்தியாயம்
பயங்கரச் சிரிப்பு

மோட்டார் வண்டியில் இருந்தோர் கள்ளிப்பட்டிக் கார்க்கோடக் கவுண்டரும் சிங்கமேடு தங்கசாமிக் கவுண்டரும்தான்.

பெரியண்ணன் அவர்களைக் கண்டதும் பயப்பிராந்தியடைந்தது, தனக்கு ஏதோ தீங்கு வந்துவிடப் போகிறதே என்பதற்காக அல்ல. செந்திருவை எண்ணித்தான் அவன் பயந்தான். அவனை இங்கே பார்த்தால் இவர்கள் என்ன செய்கிறார்களோ, என்னமோ? போதாததற்கு மகுடபதி இந்தச் சமயம் பார்த்து வந்து சேர்ந்தானே? இவர்கள் வேறு விதமாகச் சந்தேகிக்கலாமல்லவா? அறியாத பெண்ணின் பேச்சைக் கேட்டுப் புறப்பட்டு வந்தது பிசகாய்ப் போயிற்றே? — குழந்தைதான் சொல்லிற்று என்றால் அறுபது வயதான எனக்குக்கூடவா புத்தி இல்லாமல் போக வேண்டும்? — கவுண்டர் சென்னைப் பட்டணத்துக்கல்லவா போவதாகச் சொன்னார்? வருவதற்கு ஒரு வாரம் பிடிக்கும் என்றாரே? இங்கே எப்படி இருக்கிறார்?— இம்மாதிரி எண்ணங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு அவன் உள்ளத்தில் எழுந்தன. கையில் லாந்தரைப் பிடித்தபடி அசையாமலும் பேசாமலும் அவர்களைப் பார்த்தபடியே நின்றான்.

பெரியண்ணனைப் பார்த்ததில் இரண்டு கௌண்டர்களுக்கும் கூட ரொம்ப ஆச்சரியம் உண்டாயிற்று என்பது அவர்களுடைய முக பாவத்திலிருந்து நன்றாகத் தெரிந்தது. சற்று நேரம் அவர்களும் அவனுடைய முகத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

தங்கசாமிக் கவுண்டர், ''யார், பெரியண்ணனா? இதென்ன தமாஷ்? நீ எங்கே வந்து சேர்ந்தாய்?'' என்று கேட்டுக் கொண்டே காரிலிருந்து கீழே இறங்கினார்.

அருகில் சென்று அவன் முகத்தைப் பார்த்ததும், ''என்னப்பா, இது? ஏன் இப்படிப் பேயடித்தவன் மாதிரி விழித்துக்கொண்டு நிற்கிறாய்?'' என்றார்.

இதற்கும் பெரியண்ணன் பேசாமல் நின்றான். கார்க்கோடக் கவுண்டரும் இறங்கி வந்து ''ஒருவேளை மகாத்மா காந்தியிடம் பக்தி முற்றிப்போய் சத்தியாக்கிரகம் பண்ணவே வந்து விட்டான் போலிருக்கு'' என்றார்.

''ஏனப்பா, அப்படியா? நீ சத்தியாக்கிரகம் பண்ணப் போறயா, அல்லது உன்னைத்தான் கிரகம் பிடிச்சிருக்கா?''

இப்படிச் சொன்ன தங்கசாமிக் கவுண்டர் திடீரென்று ஏதோ நினைவு வந்தவர் போல், ''கவுண்டா! வீட்டிலே எல்லாரும் சுகந்தானே? உடம்பு காயலா ஒன்றுமில்லையே?'' என்று கலங்கிய குரலில் கேட்டார்.

''எல்லாரும் சுகந்தானுங்க'' என்று மெலிந்த குரலில் பெரியண்ணன் சொன்னான்.

''அப்படியானால் நீ எங்கே வந்தே?''

பதில் இல்லாமல் போகவும், இரு கவுண்டர்களும் உள்ளே நுழைந்தார்கள்.

மேல் மச்சில் வெளிச்சம் தெரிந்தது. ஆள் நடமாடும் சத்தமும், கதவு சாத்தும் சத்தமும் கேட்டது. கவுண்டர்களின் ஆச்சரியம் அதிகமாயிற்று.

''பெரியண்ணா! மச்சு மேலே யார்?''

பதில் இல்லை.

''இது என்ன உனக்குப் பிரம்மஹத்தி பிடித்து விட்டதா? மேலே யார், சொல்கிறாயா, இல்லையா?''

பெரியண்ணன் தடுமாறிக் கொண்டு, ''குழந்தை'' என்றான்.

''எந்தக் குழந்தை?'' என்று தங்கசாமிக் கவுண்டர் வியப்புடன் கேட்டார்.

''எனக்கு எல்லாம் தெரிந்து போய் விட்டது'' என்றார் கார்க்கோடக் கவுண்டர். தங்கசாமிக் கவுண்டரின் காதோடு ஏதோ சொன்னார்.

தங்கசாமிக் கவுண்டரின் கண்ணில் தீப்பொறி பறந்தது. ''என்ன? இருக்கவே இருக்காது!'' என்றார்.

''பெரியண்ணா! எந்தக் குழந்தை? பட்டணத்துக் குழந்தையா?''

''ஆமானுங்க.''

அவ்வளவுதான்; அதற்கு மேல் தங்கசாமிக் கவுண்டர் அங்கே நிற்கவில்லை. தடதட வென்று மச்சுப் படிகளின் மேல் ஏறினார். கார்க்கோடக் கவுண்டரும் பின்தொடர்ந்து ஏறினார். பெரியண்ணன் லாந்தரைக் கீழே வைத்துக் கதவைத் தாளிட்டு விட்டுத் தள்ளாடிக் கொண்டே ஏறினான். அவன் மனம் ஒரே குழம்பலாய்க் குழம்பிற்று. செந்திருவை அங்கே அழைத்து வந்ததற்கு ஏதாவது பொய்க் காரணம் கண்டுபிடிக்க அவன் விரும்பினான். ஆனால் யோசனை ஒன்றும் ஓடவில்லை. அவன் தலை சுழன்றது.

ஒருவர் பின் ஒருவராக இரண்டு கவுண்டர்களும் வருவதைப் பார்த்ததும், செந்திரு கதி கலங்கியவளாய்ச் சமுக்காளத்திலிருந்து எழுந்து நின்றாள். சித்தப்பாவை அவள் ஒருவாறு எதிர்பார்த்தாள். அவருக்கு என்ன சமாதானம் சொல்லி எப்படித் தப்புவது என்று யோசித்துக் கொண்டிருந்தாள். கார்க்கோடக் கவுண்டரும் சேர்ந்தாற் போல் வருவதைக் கண்டதும், எல்லா யோசனையும் போய் விட்டது. பக்கத்து அறையில் மகுடபதி இருக்கிறான் என்பதை நினைத்ததும் அவள் வயிற்றையும் நெஞ்சையும் என்னவோ செய்தது. மயிலாப்பூரில் அவளுடைய வீட்டுக் கூடத்தில் பழனியாண்டவர் படம் ஒன்று மாட்டியிருக்கும். தினம் அப்படத்துக்கு அலங்காரம் செய்து தீபாராதனை காட்டுவதுண்டு. குழந்தை செந்திரு அப்படத்தின் முன்னால் நமஸ்காரம் செய்து ''ஸ்வாமி! பழனி ஆண்டவனே! பரீட்சையில் எனக்கு நல்ல மார்க் வரவேணும்; முதலாவதாக நான் தேற வேண்டும்'' என்று வேண்டிக் கொள்வாள். இப்போது திடீரென்று அந்தப் படத்தின் ஞாபகம் வந்தது! 'ஸ்வாமி ஆண்டவனே! இந்த ஆபத்திலிருந்து நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்' என்று வேண்டினாள்.



தங்கசாமிக் கவுண்டர் அவளை வியப்புடனும் ஆங்காரத்துடனும் உற்றுப் பார்த்தபடி அருகில் வந்தார்.

''செந்திரு, நீயா இந்தக் காரியம் செய்தாய்? என்ன நெஞ்சு அழுத்தம் உனக்கு! பாவி!...''


கவுண்டரின் உதடுகளும் மீசையும் படபடப்பினால் துடித்தன.

''பாவி! உன் அப்பாவின் பெயரை இப்படியா நீ கெடுக்கணும்? மருதாசலக் கவுண்டரின் மகளா நீ? ஆகா! அண்ணன் மட்டும் இப்பொழுது உயிரோடிருந்தால்...''

தகப்பனாரின் பெயரைக் கேட்டதும் செந்திருவுக்குத் திடீரென்று மனோதைரியம் உண்டாயிற்று. அவள் ஒரு புது மனுஷியானாள். தன்னுடைய தகப்பனாரே ஆவி ரூபத்தில் வந்து தனக்குப் பின்னால் நிற்பதாக அவளுக்குத் தோன்றிற்று. தனக்கு அபாயம் நேராமல் அவர் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கை உண்டாயிற்று.



''கவுண்டர் பெரியண்ணனை உதறித் தள்ளி விட்டு மேலே போய்ச் செந்திருவின் மேல் பிரம்பை வீசினார்......



வல்லவனுக்கு வல்லவன் !

கிழக்கு ஜெர்மனி எஃகுத் தொழில் ஆராய்ச்சி நிறுவனம், மேற்கு ஜெர்மனி நிறுவனம் ஒன்றுக்குத் தனது படைப்பின் மகிமையை விளக்கும் பொருட்டுப் பொருளொன்றை அனுப்பி வைத்தது.

ஒரு பலகையின் இரு ஓரங்களில் அடிக்கப்பட்ட ஆணிகளுக்கிடையே ஓர் எஃகுக் கம்பியைப் பிணைத்துக் கண்ணுக்குப் புலனாகாத அளவு மெல்லியதான அதைப் பார்ப்பதற்கு உதவியதாக மைக்ரோஸ்கோப் ஒன்றையும் அனுப்பி வைப்பதாக ஒரு கடிதத்தை எழுதியிருந்தது.

சில நாட்களில் மேற்கு ஜெர்மனியிலிருந்து கிழக்கு ஜெர்மனிக்கு அவர்கள் அனுப்பியபொருள் அப்படியே திரும்பி வந்தது. அத்துடன் இணைக்கப்பட்டிருந்த கடிதம் சொல்லிற்று: "ஐயா, உங்கள் நாட்டு சிறப்புப் பற்றிப் பெருமை கொண்டோம். தாங்கள் அனுப்பிய எஃகுக் கம்பியில் ஒரு துளைபோட்டு அனுப்பி யிருக்கிறோம். தயவுசெய்து ஏற்றுக் கொள்ளுங்கள்!"

.. "தேஜ்"

திடீரென்று ஆவேசம் வந்தவள் போல் அவள், "அப்பா பேச்சை ஏன் எடுக்கிறீர்கள், சித்தப்பா! அப்பா உயிரோடு இருந்தால் என் கதி இப்படியாகியிருக்குமா? தலை நரைத்த கிழவருக்கு என்னைக் கல்யாணம் கட்டிக் கொடுக்க யோசிச்சிருப்பாரா?" என்றாள்.

தங்கசாமிக் கவுண்டருக்கு அப்போது வந்த கோபத்தில் அவருடைய உடம்பெல்லாம் நடுங்கிற்று. திரும்பி அவர் கள்ளிப்பட்டிக் கவுண்டரைப் பார்த்தார். கள்ளிப்பட்டிக் கவுண்டரின் முகத்தில் விஷம் நிறைந்த ஒரு புன்னகை காணப்பட்டது. மற்றபடி கோப தாபம் ஒன்றுமில்லை. அவர் சிங்கமேட்டாரைப் பார்த்து, "ஏன் இவ்வளவு பதற்றப் படுகிறீர்கள்? இதை அவளாகச் செய்ய வில்லை. யாருடைய துர்ப்போதனையின் பேரிலேயோ நடந்திருக்கிறது. உட்கார்ந்து சாவகாசமாக விசாரியுங்கள்" என்றார்.

இப்படிச் சொல்லிவிட்டு அவர் ஹாலின் வீதிப் பக்கத்துச் சுவரில் இருந்த ஜன்னலண்டை போய் ஜன்னல் கதவுகளைச் சாத்தினார். பிறகு, மச்சுப் படிகளின் வழியாகக் கீழே இறங்கிப் போனார்.

சிங்கமேட்டுக் கவுண்டர் மேஜைக்குப் பக்கத்திலிருந்த நாற்காலியில் போய்த் தொப்பென்று விழுந்தார். அளவில்லாத கோபத்தினால் அவருடைய உடம்பு தளர்ந்து போயிருந்தது. தூரத்தில் நடுங்கிக் கொண்டு நின்ற பெரியண்ணனைப் பார்த்து, "கவுண்டா, இங்கே வா!" என்றார்.

பெரியண்ணன் மேஜையண்டை மெதுவாக வந்து நின்றான்.

"எதற்காக இங்கே வந்தீர்கள்? என்ன எண்ணத்துடன் வந்தீர்கள்? யாருடைய தூண்டுதலைக் கேட்டு வந்தீர்கள்? நிஜத்தை உள்ளதை உள்ளபடி சொல்லிவிடு: இல்லாவிட்டால் இங்கிருந்து உயிரோடு திரும்பிப் போகமாட்டாய்" என்றார்.

பெரியண்ணன் மனத்துக்குள், 'என் உயிரோடு போவதாயிருந்தால் பாதகமில்லையே? இந்தக் குழந்தையையும் அல்லவா மாட்டி வைத்துவிட்டேன்?' என்று நினைத்துக் கொண்டான்.

அவன் செந்திருவைப் பார்த்தான். செந்திரு, "என்ன பயம் பாட்டா? உயிருக்கு மேலே ஒன்றுமில்லையே? இந்த மாதிரி உயிர் வைத்துக் கொண்டு வாழ்கிறதைவிடச் செத்துப் போவதே நல்லது. எல்லாவற்றையும் சொல்லிவிடு" என்றாள். இப்படிச் சொல்லிவிட்டு அவள் சமுக்காளத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

இதற்குள் கள்ளிப்பட்டிக் கவுண்டர், மச்சுப்படி ஏறி மறுபடியும் மேலே வந்தார். அவருடைய ஒரு கை முதுகுப் பக்கம் போயிருந்தது. அந்தக் கையில் ஒரு கயிற்றுச் சுருளும் ஒரு கொடிப் பிரம்பும் இருந்தன. இன்னொரு கையில் டார்ச் லைட் ஒன்று இருந்தது. பெரியண்ணன் இதையெல்லாம் பார்த்துவிட்டான். இதற்கு முன்னால் ஒரு போதும் அறிந்திராத ஒருவித நோவு அவனுடைய அடிவயிற்றில் உண்டாயிற்று.

இரண்டு கவுண்டர்களையும் அவன் மாறி மாறிப் பார்த்துத் தடுமாறலுடன் "தெரியாத்தனமாய் நடந்து போச்சுங்க! என்னை என்ன வேணுமானாலும் செய்துக்குங்க! குழந்தையை மன்னிச்சிடுங்க! உங்கள் காலிலே விழுந்து கேட்டுக்கறேன்!" என்றான்.

செந்திருவுக்கு இது கொஞ்சமும் பிடிக்கவில்லை என்பது அவளுடைய முகத் தோற்றத்திலிருந்தே தெரிந்தது.

"என்ன, பாட்டா! உனக்குப் பைத்தியமா? எதற்காக என்னை மன்னிக்க வேண்டும்? நான் என்ன தப்பு செய்து விட்டேன், மன்னிப்பதற்கு?" என்றாள்.

கிழவன் அவளைக் கொஞ்சம் கோபமாய்ப் பார்த்து, "செந்திரு! நீ அறியாக் குழந்தை! உனக்கு ஒன்றும் தெரியாது. சற்றே நீ பேசாமலிரு" என்றான். அப்போது அவனுடைய பார்வை சாத்தியிருந்த அறைக் கதவின் மேல் போயிற்று.

அது கள்ளிப்பட்டிக் கவுண்டரின் கூரிய பார்வையிலிருந்து தப்பவில்லை. அவர் மேஜைக்குப் பக்கத்திலிருந்த

நாற்காலி ஒன்றில் உட்கார்ந்திருந்தார். இன்னொரு காலி நாற்காலியின் மேல் கயிற்றுச் சுருள், பிரம்பு, டார்ச் லைட் இவை இருந்தன. மேஜையின் மேல் முழங் கையை ஊன்றியபடி மற்ற மூன்று பேரையும் அவர் கவனித்துக் கொண்டிருந்தார்.

சிங்கமேட்டுக் கவுண்டரைப் பார்த்து அவர், "அறியாப் பெண் படபடப் பாய்ப் பேசினால் அதற்காக நீங்களும் கோபித்துக் கொள்ளலாமா? எங்கே கிளம்பி வந்தார்கள், என்னத்திற்காக என்று கேளுங்கள்" என்றார்.

பெரியண்ணன் உடனே, "குழந் தைக்குச் சிநேகிதப் பெண் இந்த ஊருக்கு வந்திருக்கிறதாம். அவசர மாய்ப் பார்க்க வேணுமென்று கடிதம் வந்ததாம். உடனே கிளம்பித்தான் ஆகவேண்டுமென்று பிடிவாதம் பிடித் தது. நானும் தெரியாத்தனமாய் அழைத்துக் கொண்டு வந்துவிட்டேன். செய்தது பிசகுதான்" என்றான்.

செந்திரு அப்போது, "சித்தப்பா! நான் நிஜத்தைச் சொல்லிவிடுகிறேன். எனக்கு இந்த வயதில் கல்யாணம் கட் டிக் கொள்ள இஷ்டமில்லை. அதற் காகத்தான் புறப்பட்டு வந்தேன். நீங்கள் என்னைக் கொன்றாலும் சரிதான். என் மனம் மட்டும் மாறாது" என்றாள்.

கள்ளிப்பட்டிக் கவுண்டர், தங்க சாமிக் கவுண்டரின் காதோடு ஏதோ சொன்னார்.

"இது நீயாகச் சொல்கிறாயா? வேறு யாருடைய போதனையின் பேரிலா வது சொல்கிறாயா?"

"யாரும் எனக்குப் போதிக்கவில்லை: நானாகத்தான் சொல்கிறேன்."

"இங்கே கிளம்பி வந்தது நீயாகத் தான் வந்தாயா? யாராவது வரச் சொன்னதுண்டா?"

"நானாகத்தான் வந்தேன்."

கார்க்கோடக் கவுண்டர் "போய்" என்று சொல்லிக் கொண்டு நாற்காலியி லிருந்த பிரம்பை எடுத்து, மேஜையின் மேல் சிங்கமேட்டுக் கவுண்டர் பக்கத் தில் வைத்தார்.

இதைக் கவனித்த செந்திரு கோபா வேசத்துடன், "சித்தப்பா! நான் துர்ப்போதனைக்காளாக வில்லை. உங்க ளுக்குத்தான் துர்மந்திரிகள் இருக் கிறார்கள். அதனால்தான் உங்களுக்குக் கடன் வந்தது. அதற்காக என்னை விற்கப் பார்க்கிறீர்கள்" என்றாள்.

தங்கசாமிக் கவுண்டர் மேஜை மீது இருந்த பிரம்பை எடுத்துக் கொண்டு செந்திருவை நோக்கிப் போனார். பெரி யண்ணன் அவருக்கு முன்னால் வந்து தரையில் விழுந்து காலைப் பிடித்துக் கொண்டான். கவுண்டர் அவனை உத றித் தள்ளிவிட்டு மேலே போய்ச் செந் திருவின் மேல் பிரம்பை வீசினார். அவ ளுடைய உடலில் அடி களீரென்று விழுந்தது. செந்திரு 'வீல்' என்று கத்திக் கொண்டு கீழே விழுந்தாள். இன்னும் பல அடிகளை எதிர்பார்த்து அவள் கண்ணை இறுக மூடிக் கொண்டு பல்லையும் கடித்துக் கொண்டாள்.

ஆனால், மேலே அடி விழவில்லை. ஏனெனில், அச்சமயம் கதவு தாழ்ப் பாள் திறக்கும் சத்தம் கேட்டது.

"பாவிகளா! சண்டாளர்களா! அநாதைப் பெண்ணை அடிக்காதீர்கள்! என்னை அடித்துக் கொன்று விடுங்கள்" என்று கத்திக் கொண்டு மருடபதி திறந்த அறையிலிருந்து ஓடி வந்தான்.

கள்ளிப்பட்டிக் கவுண்டர் கலகல வென்று சிரித்தார். அந்தச் சிரிப்பின் தொனி பயங்கரமா யிருந்தது. பெரி யண்ணன் உடம்பு வெடவெடவென்று ஆடிற்று.

(தொடரும்)

பந்தநல்லூர் பரதநாட்டிய பாணி யின் நேர் வாரிசுகளான சொக்கலிங்கம் பிள்ளை, சுப்பராயப்பிள்ளை ஆகியோரிடம் லலிதா சுப்பிரமணியம் நாட்டியப் பள்ளி யில் பரதம் பயின்று, சான்றிதழும் பெற்ற குமாரி பத்மினி சுந்தரத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் சென்னை மியூஸியம் தியேட்டரில் மிக விமரிசையாக நடைபெற்றது. அபிநய பாவங்களும் அடவு வகைகளும் சுத்த மாக இருந்தன. பத்மினியின் தாயார் ஸ்ரீமதி சியாமளா சுந்தரத்தின் பின் னணிப் பதங்களும் முதல் தரம். பத்மினி யின் வருங்கால முன்னேற்றத்துக்கு இவ்விரண்டு அம்சங்களுமே ஆதாரம். அரங்கேற்றத்தையொட்டி விசேஷ மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. முன்னாள் நீதிபதி திரு எம். அனந்த நாராயண னும், திரு ஓ. வி. அழகேசனும் குமாரி பத்மினிக்கு வாழ்த்துரை வழங்கினர்.





போகுமிடமெல்லாம்
பொங்கிடும் அழகு
பொலிந்திட அணிவீர்...

மபத்லால் சேலைகள்

மபத்லால் சேலைகள், சீராடும் பேரணி;
சிந்தை குளிர்ந்திடும் பிரிண்ட்கள்;
விந்தை மிகுந்திடும் வண்ணங்கள்;
உன்னதமான காட்டன், 100%
போலியஸ்டர் மற்றும் கலவைத்
திருசுகள்!

ஸ்டாண்டர்ட், பம்பாய் • ஸ்டாண்டர்ட் (நியூ சில்க்), பம்பாய் • ஸ்டாண்டர்ட், தேவாஸ் • மபத்லால் ஃபைன், கல்யாண்; யூனிட் நம்பர் 1 • மபத்லால் ஃபைன் (சாஸன்), பம்பாய்; யூனிட் நம்பர் 2 மபத்லால் ஃபைன் (நியூ யூனியன்), பம்பாய்; யூனிட் நம்பர் 3 • நியூ ஷோராக், அகமதாபாத் நியூ ஷோராக், நடியாத் • சூரத் காட்டன், சூரத் மிஹிர் டெக்ஸ்டைல்ஸ், அகமதாபாத்

MYARS-M-151 TM



"மௌனச் சிறை சிதைகிறது"

ஒரு சில குழந்தைகள்தாம் பிறவியிலேயே ஊமைகளாக, அதாவது பேசும் சக்தி அற்றவர்களாகப் பிறக்கின்றன; ஆனால் செவிடாகப் பலப் பல குழந்தைகள் பிறக்கின்றன. இக்குழந்தைகளின் குறையை இரண்டரை வயது முதல் நான்கு வயதுக்குள் கண்டு பிடித்து மருத்துவ சிகிச்சை மூலம் காது கேட்காததைத் திருத்தவோ, அப்படி மருத்துவத்தின் மூலம் முடியாவிட்டால் உடனே ஒரு பேச்சுப் பயிற்சிப் பள்ளியில் சேர்த்துப் பேசக் கற்றுக் கொடுக்கவோ முயல வேண்டும்.

எந்தக் குழந்தையும் பிறவியில் முழுச் செவிடாக இருப்பது இல்லை. ஒரு சிறிதளவேனும் கேட்கும் சக்தி யிருக்கும். அதை ஹியரிங் எய்ட் (Hearing aid) மூலம் பயன்படுத்திக் கொண்டு விசேஷப் பயிற்சி அளிக்க வேண்டும். இரண்டரை வயது முதல் நான்கு வயது வரை உள்ள அந்தக் காலம் வரைதான் குழந்தையின் வருங்கால வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைகிறது. குழந்தை தன்னைச் சுற்றியுள்ள உலகில் தீவிர அக்கறை செலுத்தி உடனிருப்பவர்களையும் அவர்கள் செய்கைகளையும் கூர்ந்து கவனித்து அதுபோலெல்லாம் தானும் செய்ய முயலுகிறது. அம்முயற்சியின் விளைவாகத்தான் குழந்தை மற்றவர் போலப் பேசவும், நடக்கவும் உணவருந்தவும் ஆரம்பிக்கிறது.

காது கேட்காத ஒரு குழந்தை, மற்ற புலன்களில் ஊனம் இல்லாததால், தன்னைச் சுற்றி உள்ள உலகைக் கவனித்து, மற்றக் குழந்தைகளைப் போல் தானும் நடக்கவும், சாப்பிடவும், விளையாடவும் கற்றுக் கொள்கிறது. ஆனால் செவிடாக இருப்பதால், தன்னைச் சுற்றி உள்ளவர்களின் பேச்சும், தான் இருக்கும் உலகின் ஒலிகளும், அதன் காதுகளில் விழுவதில்லை. அதனால் அக் குழந்தை பேச்சையோ, ஒலியையோ கேட்டுத் திரும்பச் சொல்ல முடிவதில்லை. காலக் கிரமத்தில் ஊமையாய் நின்று போகிறது.

இப்படிக் கேட்டதைக் கிரகித்து, திரும்பச் சொல்லும் இந்த விசேஷ சக்தி, குழந்தைக்கு நான்கு வயதுக்குள் போற்றி வளர்க்கப் படாவிடில், உபயோகமின்மையால், தேய்வடைந்து ஐந்து வயதிலேயே நசித்துவிடுகிறது.

காது கேளாததால் ஊமையான சிறு குழந்தைகளுக்காக மயிலையில் 114, மோப்ரேஸ் ரோடில், ஒரு புது முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்பள்ளியின் பெயர் ''லிட்டில் வுட்ஃபோர்ட்'' (Little Woodford.)

இங்கிலாந்தில், ''woodford'' என்ற இடத்தில் காது கேட்காத சிறு குழந்தைகளுக்குப் பேச்சுக் கற்றுக் கொடுக்கும், உலகப் புகழ்பெற்ற ஒரு பள்ளி நடக்கிறது. அப்பள்ளியின் போதனா முறையையே இப்பள்ளியும் பின்பற்றுகிறது. இங்குள்ள இரு ஆசிரியைகளில் ஒருவர் இங்கிலாந்தில் மேற்சொன்ன பள்ளியில் பயிற்சி பெற்றவர்.


இந்தப் பள்ளியில் குழந்தைகளின் எண்ணிக்கை பத்து.

ஆசிரியைகளைச் சந்தித்து, அவர்கள் போதனா முறையின் விவரங்களைத் தெரிந்து கொண்டேன். இப்பள்ளியில் நடக்கும் சாதனை மிக முக்கியத்துவம் வாய்ந்தது. செவிடாக இருப்பதால் ஊமையாகும் சிறு குழந்தைகளுக்குப் பேச்சு அளிக்கும் ஒரு பெரும் இயக்கமாக இது வளரக் கூடும்.

இப்பள்ளிப் பயிற்சியில் குழந்தைக்கு ஹியரிங் எய்ட் மிகவும் அவசியம். இதைக் கொண்டுதான் பயிற்சி தொடங்க முடியும். இந்தப் பள்ளியில் குழந்தைகளைச் சேர்க்கும் பெற்றோர்களுக்கு, தங்கள் குழந்தைகளுக்கு 'ஹியரிங் எய்ட்' வாங்கிப் போடுவதைத் தவிர வேறு பணச் செலவில்லை. பள்ளிக் கூடத்துக்குக் கட்டணமில்லை.

இப்பணியில் இவர்களுடன் சேர்ந்து உழைக்க யாரேனும் முன்வந்தால், அவர்களை ஆர்வத்துடன் வரவேற்கத் தயார் என்று இந்த ஆசிரியைகள் கூறுகிறார்கள். அவர்கள் பயிற்சி பெற்று, இப்பள்ளியை விரிவாக்க உதவினால், காது கேளாததால் ஊமையான பலப் பல குழந்தைகளைப் பேச வைக்க முடியும். நம் நாட்டைப் போல, பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில், இந்த மாதிரி ஆக்கப் பணிக்கு அரசாங்க உதவியை நம்பிக் காத்திருப்பதில் பயனில்லை. சமூகத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட யாவரும் கூட்டு சேர்ந்து, இப்பணியை விரிவாக்கி, இயன்ற இடமெல்லாம் பள்ளி தொடங்கிப் பெரு முயற்சி செய்ய வேண்டும். பள்ளி நடத்தவும் பெரும் பொருள் தேவையில்லை. ஒரு சிறிய இடம், ஒரு கரும் பலகை இருந்தால் போதும். ஆனால் நிச்சயம் தேவைப்படுவதோ

காது கேட்காத குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கப்படுகிறது.







"ஸ்டெனோ வேலைக்கு மனுப் போட்டிருக்கியே; கடிதங்களை யெல்லாம் ஒழுங்கா டைப் செய்வியா?"

"ஓ! வேணும்னு மாதிரிக்கு ஒரு லீவு லெட்டர் டைப் செய்து கொண்டு வருகிறேன், பாருங்க!"

□ □ □

இது டைப்பிஸ்ட்டுகளுக்கு வசதிமிக்க நவீன நாற்காலி. மேற்கு ஜெர்மானிய தயாரிப்பு

- யூ. பி. எஸ்.

சலியா உழைப்பும் சேவா மனப்பான்மையும் ஆர்வமும்தாம்.

தற்பொழுது இந்தப் பள்ளியில் மேலும் குழந்தைகளைச் சேர்த்துக் கொள்ள இடமில்லை. ஏனெனில், இந்தப் பள்ளி மற்றப் பள்ளிகளைப் போல் அல்ல. ஓர் ஆசிரியை ஒரு சமயத்தில் நான்கு குழந்தைகளுக்கு மேல் பயிற்சி அளிக்க மேற்கொள்ள முடியாது. இப்பொழுதே இப்பள்ளியில், பத்து குழந்தைகளுக்குப் பொறுப்பு ஏற்றிருக்கிறார்கள்.

தற்பொழுது, இப்பள்ளியில் மேலும் குழந்தைகள் சேர இடமில்லை என்றாலும், தாய்மார்களே தங்கள் குழந்தைகளுக்கு நல்வாழ்வு அளிக்க இவ்வாசிரியைகள் வழிவகை செய்து தரத் தயாராக இருக்கிறார்கள். தாய்மார்கள் வந்து இந்தப் பள்ளியின் போதனை முறையைத் தெரிந்து கொண்டு வீட்டிலேயே தங்கள் குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்கலாம். இந்த ஏற்பாடு ஆசிரியைகளே நேரில் அளிக்கும் பயிற்சி அளவுக்குப் பயன் தராது தான், எனினும் இரண்டரை வயது முதல் நான்கு வயது வரை என்ற அந்த மிக முக்கியமான கால வரம்பில் குழந்தைகளின் சக்தி பயன்படுத்தப்படாமல் அவர்கள் ஊமையாகி விடுவதைத் தவிர்க்கலாம்.

இவ்வாசிரியைகள் முடிவாக வலியுறுத்திக் கூற விரும்புவது இவைதாம் :

பொதுவாக ஒரு குழந்தையை யாராவது கூப்பிட்டாலோ அல்லது வேறுவித சத்தங்கள் ஒலித்தாலோ, அதைக் கேட்டதற்கு அந்தக் குழந்தை ஏதேனும் அறிகுறி காட்டாவிட்டால் — அதாவது குழந்தைக்குக் காது கேட்கவில்லையோ என்ற ஐயம் ஏற்பட்டால், உடனே காது வைத்தியரிடம் எடுத்துச் செல்ல வேண்டும்.

வைத்தியரும் ஐயத்தை உறுதிப்படுத்தினால், குழந்தையை உடனே பேச்சுப் பயிற்சிப் பள்ளிக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இரண்டரை வயதிலிருந்தே பயிற்சியை ஆரம்பிக்க வேண்டும். அந்த வயதுக்குப்பின், பயிற்சியைத் தொடங்கத் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் பயிற்சியின் காலத்தை நீடிக்கும். குழந்தையின் எதிர்காலத்தையும் பாதிக்கும். நான்கு வயதுக்குப்பின் தொடங்கினால், பலன் கிடைப்பது மிகவும் கடினம்தான். குழந்தையின் இயற்கையான குரலும், பேச்சைக் கிரகிக்கும் சக்தியும், அவ்வளவு காலம் உபயோகப்படுத்தப்படாததால், மறைந்து போய்விட்டிருக்கும்.

பெற்றோர் அயராத உழைப்பாலும், அன்பாலும் காது கேளாத தங்கள் குழந்தையின் எதிர்காலம் பாழாகாமல் மாற்றி அமைக்க முடியும். பெற்றோரின் உதவியால், குழந்தை சிறிது சிறிதாகப் பேசக் கற்றுக்கொண்டு, நாளடைவில், பெரும் அளவில் தன் ஊனத்தைச் சமாளித்து, சமுதாயத்தில் மற்றவர்களுடன் சமமாகப் பழகமுடியும்.

— தனுஸ்

கவிதை பிறந்த கதை

போனால் வராத விஷயம் இளம் பிராயம்தானே? அந்தப் பருவத்தில் நடந்த சுவையான சம்பவங்களைப் பெரியவர்களான பின்பும் மறக்க முடியுமா ?

தமிழறிஞர் திரு கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கும் இப்படி ஒரு நீங்காத நினைவு. அதனை அவரே சொல்கிறார் :

"என்னுடைய பாட்டியின் தாயார் ஒருவர் இருந்தார். அவர் நன்றாகச் சித்திரம் வரைவார், விதம் விதமான கோலங்களை அழகாகப் போடுவார், அருமையாகக் கதைகள் சொல்லி எங்களைத்



தூங்க வைப்பார். நாட்டு மருந்துகள் தயார்செய்து ஒரு மருத்துவராகவும் விளங்கி வந்தார். அதுமட்டுமா? பனை ஓலைகளினால் விதவிதமான பொருள்களும் செய்வார். ஆனால் இத்தகைய பல்கலைப் பாட்டிக்கு எழுதப் படிக்கத் தெரியாது!

"இத்தனை திறமையுள்ள எங்கள் பாட்டி இறந்து விட்டாள். ஆனால் சின்னஞ் சிறு பிராயத்திலே அவளிடத்தில் நாங்கள் கொஞ்சிக் குலாவிப் பழகிய நாட்களை இன்றும் நினைத்துக் கொள்ளுகிறேன். எங்கள் மீது மிக்க அன்பு செலுத்தி ஆளாக்கிய அந்த அருமைப் பாட்டியை நினைத்துக் கொண்டேன். பாட்டுப் பிறந்தது:

" 'பாட்டி! தலைவலி' என்று
சொன்னேன் அவள்
பட்டென்று கக்கை அரைத்துப்
போட்டாள்;
கேட்ட வியாதிக்குக்
கிரை கெழுத்து
கிராம்பு கடுக்காய் மருந்
துரைப்பாள்.

வீட்டில் எவருக்குக்
காய்ச்சலானாலும்
விடிவதற்குள் அவள்
சொஸ்தம் செய்வாள்;
'நாட்டு மருந்துக்கும் புத்தகம்
எதுக்கு?
நான்சொல் சரக்கினைக்
கேட்டி'டென்பாள்."

இப்படிப் பாட்டியின் அருமை பெருமைகளைச் சொல்லி வரும் கவிஞர், பாட்டி கதை சொல்லித் தூங்க வைத்த கதையையும் கவிதையில் வடிக்கிறார்:

" 'பாட்டி! பாட்டி! ஓர்கதை
சொல்லமாட்டாயா?
படுத்துக்கொள் வோம்'
என்று சொல்லிவிட்டால்
நீட்டி இனித்த சுவைக்கதை
எத்தனை
நேரஞ்சொல் வாள்....."

"அரிய மனுவழி இப்பாட்டியைப் போல்வார் அகப்பட மாட்டார்கள்; கூடைப் பெட்டி கீற்று முடைவதில் பேர் பெற்றவன் எங்கள்



பாட்டியம்மா!" என்று கவிஞர் பெருமையோடு சொல்லும்போது, பாட்டியிடம் அவருக்குள்ள அன்பு நன்கு வெளிப்படுகிறதல்லவா?

"**தி**ருமணமாகி எனக்கு ஐந்து ஆண்டுகளாகியும் குழந்தை இல்லை. என் தங்கை மகன் ஒருவன் இருந்தான். பெயர் ராமு. கறுகறுப்பானவன். கட்டிப் பயல். புத்திசாலி. மூன்று வயதிருக்கும். அவனுக்குத் தேவாரம் சொல்லிக் கொடுப்பேன். எப்பொழுதும் என்னுடனேயே இருப்பான். வெளியே சென்றால் கூட வருவேன் என்று அடம் பிடிப்பான். பரஸ்பரம் அன்பு செலுத்தி வந்தோம்.

"ஆனால் ஒரு நாள் அந்த இளம் பிஞ்சு ஜுரத்தால் பாதிக்கப்பட்டு இறந்து போனானே! என் செய்வேன், இதயமே வெடித்துவிடும்போலிருந்தது. அல்லும் பகலும் என்னுடனேயே இருந்த அந்த இளம் பாலகன் காலன் கையில் சிக்கிவிட்டானே!"



• கவிஞர் இதனைச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவர் கண்கள் கலங்குகின்றன. "அவன் பிரிவு இந்தக் கவிதை எழுதத் தூண்டியது" என்கிறார் கவிஞர்:

"நெஞ்சு வெடித்துவிட்ட
போது வார்த்தை
நீளத் தெரிப்பதற்கு
வார்த்தை வருமோ?
பிஞ்சுப் பருவத்திலே
அறிவு நிறைந்த
பிள்ளை பறிகொடுத்த
துக்கந் தினையாம்
"கொஞ்சம் உளர்ந்திறந்து
சொல்லுவ தென்றால்
குமுறி இதயம்பிளந்து
நிற்று விடுமே
பஞ்சை உலகத்திலிலே
மானிட னுக்கும்
பாசம் பொருள்நிலைக்க
மார்க்கம் இல்லையே!"

பாட்டுப் பாடிப் புலவர் மனம் ஏங்குகிறது. அன்புருவான அந்த இளம்பிள்ளை பிரிந்து விட்டதால், "இன்னைக்குச் சோபை இல்லை. சித்திரம் இல்லை; இனமும் பராவுகின்றதோத்திரமில்லை; உண்ணும் உணவிலே நற்சுவை இல்லை; உயிர்க்கும் உயிர்ப்பினிலே குளிர்ச்சியும் இல்லை" என்கிறார்.

பூவா அரும்பைக் கிள்ளி விட்ட அந்த யமனைச் சாடுகிறார்:

"வெட்ட வெளியினிலே
தோன்றி அழியும்
மின்னலைப் போலஒளி
விட்டு மறைந்தான்
பொட்டை யமனுக்கொரு
கருணை இல்லையோ?
பூவா அரும்பை அந்தோ!
கிள்ளி விட்டானே!"

பேட்டி: பி. வி. கி.

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

முப்பத்துநான்காம் அத்தியாயம்

"போய் விடுங்கள்!"

"ஐயோ! பிசாசு!" என்ற பீதி நிறைந்த குரல் வந்த திசையை நோக்கி வந்தியத்தேவன் விரைந்து ஓடினான். ஓடும்போதே அவன் உள்ளத்தில், "இது மணிமேகலையின் குரல் அல்லவா? இவள் எதற்காக இந்நேரத்தில் இங்குவந்தாள்? எதைப் பார்த்துவிட்டு இப்படி அலறினாள்? பிசாசு என்பது ஒன்று இருக்க முடியாது. பின் என்னவாயிருக்கும்? குரலில் உண்மையான பயம் தொனித்ததே? அவளை இப்போது நாம் அணுகிச் செல்வதிலிருந்து ஏதாவது தொல்லை ஏற்படுமோ? அவளுடைய தமையனோ நம்மைக் கடித்துத் தின்றுவிட வேண்டுமென்றிருக்கிறான். ஆதித்த கரிகாலர் வெறிகொண்டிருக்கிறார். பழுவூர் ராணி மனத்தில் என்ன வஞ்சம் வைத்திருக்கிறாளோ, ஒன்றும் தெரியவில்லை!...." என்ற எண்ணங்கள் துரிதமாகத் தோன்றி மறைந்தன. இப்படி உள்ளத்தில் கலக்கம் இருந்தபடியால் அவன் கவனக்குறைவு அடைந்திருந்தான். திடீரென்று ஒரு பன்னீர் மரத்தின் வேர் தடுக்கித் தரையில் விழுந்தான். மேல் துணியின் தலைப்பு பக்கத்திலிருந்த பூம் புதரில் சிக்கிக் கொண்டது. விழுந்தவன் சமாளித்து எழுந்து உட்கார்ந்து அங்கவஸ்திரத்தை மெள்ள எடுக்க முயன்றான். எத்தனையோ பகைவர்களும் சதிகாரர்களும் செய்ய முடியாத காரியத்தை இந்தச் சிறிய மரத்தின் வேர் செய்து விட்டதே, நம்மைக் கீழே தள்ளி விட்டதே. இது ஏதேனும் அபசகுனத்துக்கு அறிகுறியோ, அல்லது நம்மை ஆபத்துக்கு உள்ளாக்காமல் இந்த மர வேர் தடுத்து ஆட்கொள்கிறதோ என்று எண்ணி[illegible] வந்தியத்தேவன் தனக்குத் தானே புன்னகை புரிந்து கொண்டான்.

அச்சமயம், "அம்மா! அம்மா! எங்கே இருக்கிறீர்கள்?" என்ற குரல் கேட்டது. அது சந்திரமதியின் குரல்.

"இங்கேதானடி இருக்கிறேன். அல்லிக் குளத்தின் அருகில் இருக்கிறேன்! சீக்கிரம் வா!" என்றது மணிமேகலையின் குரல்.

காலடிச் சத்தங்கள் கேட்டன; காலில் அணியும் நூபுரங்களின் இனிய ஒலிகளும் கேட்டன.

அல்லிக் குளம் என்று மணிமேகலை கூறியது அந்தப் பூங்காவனத்தின் மத்தியில் செய்குன்றத்தின் அருகில் இருந்த சிறிய பளிங்குக்கல் தடாகத்தைத்தான். அந்தக் குளம் அல்லிப் பூவின் வடிவத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அதில் சில அல்லிக் கொடிகளும் செங்கழு நீர்க் கொடிகளும் இருந்தன. அச்சமயம் சில மலர்களும் இருந்தன. இந்த அல்லிக் குளத்தை முன்னமே வந்தியத் தேவன் பார்த்திருந்தான். அதன் அருகிலேதான் அவனும் விழுந்திருக்க வேண்டும்! நல்ல வேளையாக, அப்பெண்கள் இருவரும் அவனைக் கவனிக்கவில்லை. பகல் வேளையாக இருந்து அவர்கள் அவன் விழுந்ததைப் பார்த்திருந்தால் கலகலவென்று சிரித்து அவனுடைய மானம் போகும்படி செய்திருப்பார்கள். இப்போது மணிமேகலையின் துணைக்குச் சந்திரமதி வந்து விட்டபடியால், அந்தப் பெண்களுக்குத் தெரியாமலேயே அவன் அங்கிருந்து நழுவிப் போய் விடலாம்.

இதற்கிடையில் அந்தப் பெண்களின் பேச்சு அவன் காதில் விழுந்தது.

"அம்மா! எதைக் கண்டு பயந்தீர்கள்? ஏன் அப்படிக் கூச்சலிட்டீர்கள்?" என்றாள் சந்திரமதி.

"அடியே! அந்த மதில் சுவரைப் பாரடி! அதன்மேலே ஏதோ தெரிந்தது. தலையில் சடையும் முகத்தில் தாடியும் மீசையுமாக ஓர் உருவம் தெரிந்தது. அது கழுத்தில் — சொல்லப் பயமாயிருக்கிறதடி! — மண்டை ஓட்டு மாலை ஒன்று அணிந்திருந்தது! நான் கூச்சலிட்டதும் அது மறைந்து விட்டது!" என்றாள் மணிமேகலை.

"நன்றாயிருக்கிறது, இளவரசி! தங்களுடைய மனப் பிராந்திதான் அது!

பேயும் இல்லை, பிசாசும் இல்லை! இவ்வளவு உயரமான மதில் சுவரின் மேல் யாரும் வந்து உட்கார்ந்திருக்கவும் முடியாது'' என்றாள் சந்திரமதி.

''இல்லையடி! என் மனப்பிராந்தியில் அப்படிப் பேய் பிசாசு ஒன்றும் தோன்றுவது வழக்கமில்லை....''

''ஆமாம்! மன்மதனையொத்த வடிவழகரின் முகந்தான் உங்கள் கனவிலும் நனவிலும் தோன்றுவது வழக்கம்!''

''சீச்சீ! இப்போது கூட உனக்கு விளையாட்டா?''

''பின், எப்போது விளையாடுவது? முன் மாலை நேரத்தில் பூங்காவனத்தில் அல்லிக் குளத்தினருகே வந்து காத்திருக்கிறீர்கள்! முல்லை மலர்களின் மணம் கம்மென்று வீசுகிறது... ஆனால், பாவம், என்ன செய்வது? தாங்கள் வல்லத்து இளவரசரை எதிர்பார்த்துக்கொண்டிருக்க, மீசையும் தாடியும் உள்ள பிசாசு வந்து சேருகிறது!''

''போதும் போதாததற்கு நீயும் வந்து சேருகிறாய்!''



"என்னைப் பார்த்து விட்டுத்தான் அந்தப் பிசாசு பயந்து ஓடிவிட்டதோ, என்னமோ? கடம்பூர் அரண்மனைப் பணிப் பெண் சந்திரமதியைக் கண்டால் பேய் பிசாசுகள், பூதங்கள், வேதாளங்கள் எல்லாம் பயந்து ஓடும் என்பது உலகப் பிரசித்தியாயிற்றே!"

"சந்திரமதி! உன் வேடிக்கைப் பேச்செல்லாம் இப்போது வேண்டாம். உண்மையாகவே நான் அந்த மதிள் சுவரின்மேல் கோரமான ஓர் உருவத்தைப் பார்த்தேன். நீ நம்பாவிட்டால், வேண்டாம்! நீ போன காரியம் என்ன ஆயிற்று என்று சொல்லு!"

"போன காரியம் பலிக்கவில்லை, இளவரசி!"

"ஏன்? ஏன்?"

"காஞ்சி இளவரசரும் கடம்பூர் இளவரசருந்தான் அங்கே கூடிக் கூடிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். வல்லத்து இளவரசரைக் காணவே காணோம்..."

"ஒரு வேளை அவரையும் எங்கேயாவது அனுப்பி வைத்து விட்டார்களா, என்ன?"

"அப்படியும் தெரியவில்லை. தங்கள் தந்தையும் பல்லவருந்தான் மலையமான் அரசரை எதிர்கொள்ளப் போயிருக்கிறார்கள். இடும்பன்காரியைக் கேட்டேன். இன்று சாயங்காலம் கரிகாலர் வல்லத்தரசர் மீது ஏதோ எரிந்து விழுந்தாராம்!...."

"அவருக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்கிறது. எல்லார் பேரிலும் எரிந்து விழுகிறார். பிறகு?...."

"'இன்றைக்கு இனிமேல் என் முகத்தில் விழிக்காதே! நாளைப் பொழுது விடிந்த பிறகு வா!' என்று சொல்லி அனுப்பி விட்டாராம்!"

"பின்னர் அவர் எங்கே போயிருப்பார்?" என்றாள் மணிமேகலை.

"இந்த மாளிகை மதிள்சுவருக்குள்ளேதான் எங்கேயாவது அலைந்து கொண்டிருக்க வேண்டும். அதனால் தான் சொன்னேன்; ஒரு வேளை அவரே பிசாசு போல் வேஷம் போட்டுக் கொண்டு தங்களைப் பயமுறுத்தினரோ என்று."

"இல்லை; இந்த அரண்மனையில் வேஷக்காரர்கள் பலர் இருப்பது எனக்குத் தெரியும். ஆனால் அவர் வேஷம் போட்டு ஏமாற்றுகிறவர் அல்ல...."

"இப்படித்தான் நம்மைப் போன்ற அபலைப் பெண்கள் புருஷர்களை நம்பி ஏமாந்து போவது வழக்கம்."

"அப்படியே இருக்கட்டும். நீ மறுபடியும் போய்த் தேடிப் பார்! அரண்மனை மதிளுக்குள்ளே தானே எங்கேயாவது இருக்க வேண்டும்? இடும்பன்காரியையும் தேடிப் பார்க்கச் சொல்லு!"

"இளவரசி! அந்த இடும்பன்காரியைக் கண்டால் எனக்குப் பிடிக்கவே யில்லை. விழித்து விழித்துப் பார்க்கிறான். அவனிடம் எனக்குப் பயமாகக் கூட இருக்கிறது......"

"பேய் பிசாசுக்குப் பயப்படாதவள் இடும்பன்காரிக்குப் பயப்படுகிறாயே? போனால் போகட்டும். அவனிடம் ஒன்றும் சொல்லாமல் இருப்பதே நல்லது. நீயே இன்னொரு தடவை போய்த் தேடிப் பார்த்து விட்டு வா!"

"அதுவரையில்...."

"நான் இங்கேயே இருக்கிறேன்."


"மறுபடியும் அந்தப் பிசாசு இங்கு வந்தால்?...."

"உன் பெயரைச் சொல்லி விரட்டி அடித்து விடுகிறேன்!"

சந்திரமதி அங்கிருந்து போவதற்கு அறிகுறியான நூபுரத்தின் மெல்லிய ஒலி கேட்டது.

மேற்கூறிய சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த வந்தியத்தேவனுடைய மனத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றின. சுவரின் மேலிருந்து எட்டிப் பார்த்த 'பிசாசு' யாராயிருக்கும் என்று யோசித்தான். ஆழ்வார்க்கடியான் காளாமுகனுடைய வேடம் தரித்து வந்து தன்னைக் காப்பாற்றியது அவன் நினைவுக்கு வந்தது. ஒரு வேளை அந்த வீர வைஷ்ணவனாகவே இருக்குமோ? தஞ்சாவூரிலிருந்து தனக்கு ஏதேனும் முக்கியமான செய்தியுடன் வந்திருக்கிறானோ? இங்குள்ளவர்களுக்கு அடையாளம் தெரியாமலிருக்க அப்படி வேஷம் தரித்து வந்திருக்கிறானோ?

மணிமேகலை தன்னைப் பார்க்க இவ்வளவு ஆவல் கொண்டிருப்பதின் காரணம் என்ன? எதற்காகத் தோழியை அனுப்பித் தேடி அழைத்துக் கொண்டு வரச் சொல்கிறாள்? அவள் விஷயத்தில் மணிமேகலையின் மனோநிலை அவனுக்கு ஒருவாறு தெரிந்திருந்தது. அதனாலேயே அவள் அருகில் அதிகமாக நெருங்காமலிருந்து வந்தான். கந்தமாறனுடைய பகைமையை இன்னும் தூண்டிவிடாமலிருக்கவும் விரும்பினான். ஆயினும், இப்போது நந்தவனத்தில் வந்து தனிமையாக உட்கார்ந்து கொண்டு அவனை அழைத்து வரச் சொல்லியிருக்கிறாள். ஏதோ முக்கியமான காரியம் இல்லாவிட்டால் இவ்வளவு துணிச்சலான காரியத்தில் இறங்கியிருக்க மாட்டாள். பாவம்! அவளுக்கும் ஏதாவது சங்கடம் நேர்ந்திருக்கிறதோ, என்னமோ? அல்லது



இந்திய ஜப்பானிய கலாசார நல்லுறவுக் கழகத்தைச் சமீபத்தில் தமிழகக் கல்வி மந்திரி திரு நெடுஞ்செழியன் ஆரம்பித்து வைத்தார். இந்த நல்லுறவுக் கழகத்தின் தலைவர் என்பீல்டு இந்தியா பிரதம நிர்வாக அதிகாரி திரு எஸ். விசுவநாதன். இந்த இந்திய ஜப்பானிய கலாசார நல்லுறவுக் கழகம் ஜப்பானிய மொழியைச் சென்னை நகர மக்களுக்குக் கற்றுக் கொடுக்க முன்வந்திருக்கிறது.

நந்தினி அவளிடம் ஏதாவது செய்தி சொல்லியனுப்பியிருக்கலாம். கடவுளே! இங்கே, இந்தக் கடம்பூர் அரண்மனையில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் மனத்தில் ஏதோ ஒன்றை மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சற்று முன்னால் மணிமேகலை கூறியது ரொம்ப உண்மை. எல்லாருமே வஞ்சக வேஷதாரிகள். இவர்களுக்கு மத்தியில் இந்தப் பேதைப் பெண் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகிறாள். பழுவூர் ராணி இந்தப் பெண்ணை எந்தத் தீய காரியத்துக்குப் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கிறாளோ, தெரியவில்லை. ஆம்; மணிமேகலையின் மனத்தில் ஏதோ சந்தேகம் தோன்றியிருக்க வேண்டும். ஏதோ ஓர் அபாயத்தை அவள் எதிர்பார்த்திருக்க வேண்டும். ஆகையினாலேயே அவள் தன்னுடைய உதவியை நாடுகிறாள்.

அந்தக் கள்ளங் கபடமற்ற பேதைப் பெண் முன்னொரு சமயம் தனக்குச் செய்த உதவியை வந்தியத் தேவன் நினைத்துப் பார்த்துக் கொண்டான். அவளுக்கு உண்மையாகவே ஏதேனும் துன்பம் நேர்ந்திருந்து தன்னுடைய உதவியைக் கோருவதாயிருந்தால், அதை மறுப்பது நன்றி கொன்ற பாதகம். எப்படியிருந்தாலும் உண்மையைத் தெரிந்து கொள்ளுவதற்கு இது ஒரு நல்ல சந்தர்ப்பம். சந்திரமதி போய்விட்டாள்; மணிமேகலை தனியாக இருக்கிறாள். யார் கண்டது? அவளுடைய உதவி அவனுக்கு மறுபடியும் தேவையாயிருக்கக் கூடும். அவளுடைய சகாயத்தினால் இந்தச் சூழ்ச்சி குடிகொண்ட அரண்மனையை விட்டுப் போக முடிந்தால்கூட நல்லதுதான். எதற்கும் அவளிடம் இச்சமயம் போய்க் கேட்டு உண்மையைத் தெரிந்து கொள்ளலாம்....

அல்லிக் குளத்தின் கரையிலிருந்த பளிங்குக் கல் மேடையில் மணிமேகலை உட்கார்ந்திருந்தாள். மேகங்கள் சூழ்ந்திருந்த வானத்தில் ஆங்காங்கு சில நட்சத்திரங்கள் சுடர்விட்டு ஒளிர்ந்தது போல் அல்லிக் குளத்திலும் அடர்த்தியாகப் படர்ந்திருந்த இலைகளுக்கு மத்தியில் மலர்கள் தலைதூக்கி நின்றன. சுற்றிலும் சூழ்ந்திருந்த இருளில், இரவில் பூக்கும் மலர்களின் வெண்மை நிறம் நன்கு எடுத்துக் காட்டப்பட்டது. அல்லிக் குளத்துக்கு அப்பால் முல்லைப் புதர்களில் பாதி மலர்ந்த பூக்களும் மொட்டுக்களும் நீல நிற விதானத்தில் முத்துக்களைப் பதித்தது போல் காட்சி தந்தன.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மணிமேகலை தனக்குப் பின்னால் காலடிச் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். மிகச் சமீபத்தில் வந்திருந்த உருவத்தைக் கண்டு அவசரமாக எழுந்த போது கால் தடுமாறிப் பின்னாலிருந்த குளத்தில் விழப் போனாள்.

''ராஜகுமாரி! நான்தான்!'' என்று கூறிக் கொண்டே வந்தியத்தேவன் மணிமேகலையைத் தாங்கிப் பிடித்துக் கொண்டான்.

மணிமேகலையின் உடல் சிலிர்த்தது. இயற்கையாக ஏற்பட்ட கூச்சத்தினால் அவனுடைய கரங்களைப் பற்றி அப்பால் தள்ளிவிட்டுத் தன்னை விடுவித்துக் கொள்ளப் பார்த்தாள். ஆனால் அதற்கு

வேண்டிய பலம் அப்போது அவளுடைய கரங்களில் இல்லை!

அந்த முயற்சியில் மறுபடியும் பின்னாலேதான் சாயும்படி நேர்ந்தது.

வந்தியத் தேவன் இன்னும் கெட்டியாக அவளைப் பிடித்துத் தாங்கி முன் பக்கமாகக் கொண்டு வந்தான்.

மணிமேகலை ஒரு பெருமுயற்சி செய்து தன்னைச் சுதாரித்துக் கொண்டு, "விடுங்கள்! என்னைத் தொடாதீர்கள்!" என்று கோபக் குரலில் கூறினாள்.

வந்தியத்தேவன் அவளை விட்டு விட்டு "ராஜகுமாரி! மன்னிக்க வேண்டும்!" என்றான்.

மணிமேகலை இன்னமும் படபடப்பு நீங்காத தழுதழுத்த குரலில், "தங்களை நான் எதற்காக மன்னிக்க வேண்டும்?" என்று கேட்டாள்.

"திடீரென்று வந்து தங்களைத் திடுக்கிடச் செய்ததற்காகத்தான்!"

"வந்ததுதான் வந்தீர்கள்! எதற்காக என்னைத் தொட்டுப் பிடித்துக் கொள்ள வேண்டும்?" என்று மணிமேகலை கேட்ட குரலில், அவள் தன்னை நன்றாகச் சுதாரித்துக் கொண்டு விட்டாள் என்பது வெளியாயிற்று.

"தாங்கள் குளத்தில் விழாமல் பிடித்துக் கொண்டேன்!"

"அழகாயிருக்கிறது! அன்று ஏரியில் விழுந்து நான் முழுகித் தத்தளித்தபோது இவ்வளவு பரிவு காட்டவில்லையே? இந்த முழங்கால் அளவு தண்ணீர் உள்ள குளத்தில் நான் விழாமல் காப்பாற்றுவதற்கு வந்து விட்டீர்களே?"

"அது என் குற்றந்தான்!"

"நீங்கள் ஒரு குற்றமும் செய்யவில்லை. குற்றமெல்லாம் என்னுடையதுதான்!"

"அது எப்படி? தாங்கள் குற்றம் எதுவும் செய்யவில்லை. என் பேரில் ஏதோ கோபத்தினால் இவ்விதமாகச் சொல்லுகிறீர்கள்!"

"முன்னொரு நாள் தாங்கள் வேட்டை மண்டபத்துக்குள்ளிருந்து திடீரென்று நான் இருந்த அறையில் புகுந்தீர்கள். அன்றைக்கும் என்னைத் திடுக்கிட வைத்தீர்கள். அப்போதே நான் கூக்குரலிட்டுத் தங்களை என் தந்தையிடம் பிடித்துக் கொடுத்திருக்க வேண்டும்!"

"அன்றைக்கு என்னைப் பெரும் அபாயத்திலிருந்து காப்பாற்றினீர்கள். அதை என்றைக்கும் நான் மறக்கமாட்டேன்."

"அதற்குப் பதில் தாங்கள் நன்றி செலுத்திய விதத்தை நானும் மறக்க மாட்டேன். நன்றி கெட்டவர்களிலே தங்களைப் போல் நான் பார்த்ததே இல்லை...."

"இளவரசி! இது பெரிய அபாண்டம்! எந்த விதத்தில் நான் நன்றி கெட்டவன்? சொல்லுங்கள்!"

"தங்களை யாரோ கொலைகாரர்கள் துரத்தி வருவதாகப் பொய் சொன்னீர்கள். நான் வேட்டை மண்டபத்துக்குப் போய்ப் பார்த்துவிட்டு வருவதற்குள் என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே திருடனைப் போல் ஓடிவிட்டீர்கள்!"

"திருடனைப் போல் ஓடிவிட்டேன் என்று சொன்னீர்கள்?"

"திருடனைப் **போல்** என்று கூறியது தவறு; திருடனேதான்!"

"இளவரசி! அன்று நான் எவ்வளவு இக்கட்டான நிலைமையிலிருந்தேன் என்பது தங்களுக்குத் தெரியாது...."

"தெரியாதவளுக்குத் தாங்கள் தெரியப்படுத்தியிருக்கலாமே? யார் வேண்டாம் என்று தடுத்தார்கள்?"

"தங்கள் தோழி சந்திரமதிதான். தாங்கள் வேட்டை மண்டபத்துக்குள் சென்றதும் சந்திரமதி இன்னொரு வாசல் வழியாக வந்து விட்டாள். அவள் கண்களில் படாமல் இருப்பதற்காக யாழ்க் களஞ்சியத்தில் மறைந்துகொண்டேன்."

"பிறகு அங்கிருந்து மாயமாய் மறைந்து போய் விட்டீர்கள்."

"இல்லை; மச்சுப்படி ஏறி மாடங்களையெல்லாம் தாண்டி மதில் சுவர் மேலும் ஏறிக் குதித்துத்தான் போனேன். இளவரசி! அன்று என்னை யாராவது கண்டுபிடித்திருந்தால், நான் ஏற்றுக் கொண்டிருந்த காரியமும் கெட்டிருக்கும்; தங்களுக்கும் வசைச் சொல் ஏற்பட்டிருக்கும்...."

"இந்தப் பேதைப் பெண்ணைப் பற்றித் தங்களுக்கு எவ்வளவு கவலை?"

"உண்மையாகவே கவலைதான்!"

"அப்படியானால், இங்கே தாங்கள் திரும்பிவந்து இத்தனை நாள் ஆயிற்றே? சொல்லாமல் ஓடிப் போன காரணத்தைச் சொல்லியிருக்கலாமே?....."

"அதற்குச் சந்தர்ப்பத்தைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்...."

"ஏன், ஐயா, வெறும் வார்த்தை? நான் இருக்கும் திக்கையே தாங்கள் திரும்பிப் பார்ப்பது கிடையாதே?"

"சகோதரி!...."

"நான் தங்கள் சகோதரி அல்ல!"

"தாங்கள் என் சிநேகிதன் கந்தமாறனுடைய சகோதரி; ஆகையால் எனக்கும் சகோதரி."

"கந்தமாறன் என்னுடைய சகோதரன் அல்ல; தங்களுக்கு அவன் சிநேகித

னும் அல்ல. நம் இருவருக்கும் அவன் கொடிய பகைவன்....."

"இளவரசி! அதுதான் தங்களுக்குத் தெரிந்திருக்கிறதே! சில நாட்கள் முன் வரையில் கந்தமாறன் என் உயிருக்குயிரான நண்பனாக இருந்தான். இப்போது அடியோடு மாறிப் போயிருக்கிறான். பார்த்திபேந்திரன் எப்போது என் தலைக்கு உலை வைக்கலாம் என்று பார்த்துக் கொண்டிருக்கிறான். ஆனித்த கரிகாலரோ நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுகிறார். இந்த நிமிஷம் அன்பாகப் பேசுகிறார்; அடுத்த நிமிஷம் எரிந்து விழுகிறார். எப்போது என்ன ஆபத்து வருமோ என்று எதிர்பார்த்துக் காலங் கழிக்கிறேன். இந்த நிலைமையில் என்னுடைய நன்றியைச் செலுத்துவதற்காகத் தங்களை நான் தேடி வந்தால்.."

"ஐயா! தங்களைக் காப்பாற்றிக் கொள்வதில் தாங்கள் இவ்வளவு ஊக்கமாயிருப்பது பற்றி நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.....!"

"இளவரசி! என்னைப் பற்றி நான் கவலைப்படவில்லை. என் உயிரைப் பற்றியும் கவலைப்படவில்லை. தங்களுக்கு என்னால் தீங்கு எதுவும் நேராமலிருக்க வேண்டுமே என்றுதான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்."

"கவலைப்பட்டு உருகிக் கொண்டே இருக்கிறீர்கள். ஆண் மக்கள் எல்லாருமே வஞ்சகர்கள் என்று சந்திரமதி சொல்லுவாள். அது உண்மை என்று இப்போதுதான் நிச்சயமாகிறது."

"யார் என்ன சொன்னாலும் சரிதான்; என் உயிர் உள்ளவரை தங்களை நான் மறக்க மாட்டேன்! தாங்கள் எனக்குச் செய்த உதவியையும்மறக்கமாட்டேன்!"

மணிமேகலை சிறிது சிந்தனையில் ஆழ்ந்திருந்துவிட்டு, "ஐயா! இப்போது தாங்கள் சொன்னதை இன்னொரு தடவை சொல்லுங்கள்!" என்றாள்.


"ஆயிரம் தடவை வேணுமானாலும் சொல்கிறேன். என் உயிர் உள்ளவரையில் தாங்கள் செய்த உதவியை மறக்க மாட்டேன்!" என்று வந்தியத்தேவன் உறுதியுடன் கூறினான்.

"ஆயிரம் தடவை சொன்னால்மட்டும் என்ன பயன்? அதை நிறைவேற்ற முயற்சி எடுக்க வேண்டும் அல்லவா?"

"எந்த விதத்தில் முயற்சி எடுப்பது? சொல்லுங்கள், இளவரசி!"

"தங்கள் உயிர் உள்ளவரையிலே தானே எனக்கு நன்றி செலுத்துவீர்கள்? ஆகையால், தங்கள் உயிரை முதலில் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். தங்களுக்காக இல்லாவிட்டாலும், எனக்காகக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்!"

சிங்க வரவேற்பு!



முக்கியமான பிரமுகர்கள் விஜயம் செய்யும் போது, தமிழ் நாட்டில் மாலையைக் கொண்டு மாலை போட்டு வரவேற்பதுண்டு.

சிங்கத்தைக் கொண்டு வந்து, அதன் கர்ஜனையின் மூலம் வெளிநாட்டவரை வரவேற்றிருக்கிறார் ஒருவர்!

சில ஆண்டுகளுக்குமுன் அமெரிக்க விண்வெளி வீரர்கள் எதியோப்பியாவுக்கு வருகை தந்த போது, அடிஸ் அபாபா விமான கூடத்தில், மன்னர் செலாஸி சிங்கத்துடன் காத்து நின்றார்! விமானத்தைவிட்டு விண்வெளி வீரர்கள் இறங்கியபோது, மிருகேந்திரன் உயர்ந்த மேடையிலிருந்து கர்ஜனை புரிந்து, வரவேற்றதாம்!

ஆதாரம்: "லைப்"
தகவல்: ஏ. சுவாமிநாதன்

"இளவரசி! இது என்ன?...."

"ஐயா! உண்மையைச் சொல்லுங்கள்! சற்று முன்னால் நானும் என் தோழியும் பேசிக் கொண்டிருந்ததைத் தாங்கள் கேட்டுக் கொண்டிருந்தீர்களா?"

"மன்னிக்க வேண்டும், இளவரசி! 'ஐயோ! பிசாசு!' என்று தாங்கள் கூவியதைக் கேட்டு ஓடி வந்தேன். அதற்குள் தங்கள் தோழி சந்திரமதி வந்துவிட்டாள். உங்களுடைய பேச்சைக் கேட்கும்படி நேர்ந்துவிட்டது......"

"தங்களை எப்படியாவது தேடிப் பிடித்து அழைத்து வரும்படி அவளை நான் அனுப்பியது தெரியும் அல்லவா?"

"காதில் விழுந்தது; அதனாலேதான் தங்களை அணுகி வந்தேன்...."

"இல்லாவிடில் என் அருகில் வந்திருக்க மாட்டீர்கள். அடடா! என்ன கரிசனம்? போனால் போகட்டும். தாங்கள் எவ்வளவு கல்நெஞ்சராயிருந்தாலும் என் மனம் கேட்கவில்லை. தங்களுக்கு ஆபத்து என்றால், நான்

பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.''

''இளவரசி! என்னுடைய ஆபத்தான நிலைமை எனக்குத் தெரிந்தேயிருக்கிறது. எனக்குத் தெரியாத புதிய ஆபத்து ஏதேனும் வரப் போகிறதா ?''

''ஐயா! இந்த அரண்மனையைவிட்டுத் தாங்கள் உடனே போய்விடுங்கள்!''

''என்னைப் புறங்காட்டி ஓடச் சொல்கிறீர்களா ?''

''போர்க்களத்தில் புறங்காட்டி ஓடக் கூடாது. சதிகாரர்களிடமிருந்து தப்பிச் செல்வதில் குற்றம் என்ன?''

''யார் சதிகாரர்கள்?''

''வேறு யார்? கந்தமாறனும் பார்த்திபேந்திரனுந்தான்.''

''அவர்களுக்குப் பயந்து நான் இந்த அரண்மனையை விட்டு ஓட முடியாது.''

''என் நமையனால் தங்களுக்குத் தீங்கு நேர்வதை அறிந்து, நான் அதைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது.''

''இளவரசி! கந்தமாறனுடைய காரியங்களுக்குத் தாங்கள் எப்படிப் பொறுப்பு ஆவீர்கள்?''

'' என் காரணமாகவே அவனும் பார்த்திபேந்திரனும் தங்களுக்குத் தீங்கு இழைக்கப் பார்க்கிறார்கள்....''

''தங்களுக்காக நான் துன்பம் அடைந்தால் அது என் பாக்கியம். தாங்கள் செய்த உதவிக்குப் பிரதி செய்ததாக எண்ணிக் கொள்வேன்....''

''நந்தினி தேவி கூறியது சரிதான்!''

''ஆகா! பழுவூர் ராணி தங்களிடம் என்ன சொன்னாள்?''

''உங்களிடம் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும்படி சொன்னால், கேட்கமாட்டீர்கள்; —வேறு யுக்தி செய்ய வேண்டும் என்றார். ஐயா! தயவுசெய்து தாங்கள் என்னுடன் வாருங்கள். பழுவூர் ராணி தங்களை ஏதோ ஓர் அவசர காரியமாகப் பார்க்க வேண்டுமாம்.''

''அந்த அவசரமான காரியம் என்னவென்பது தங்களுக்குத் தெரியும் அல்லவா ?''

''தெரியும்; பழுவேட்டரையர் கொள்ளிடத்தைத் தாண்டும் போது படகு கவிழ்ந்து போய்விட்டதாக ஒரு செய்தி வந்திருக்கிறது.....''

''நானும் கேள்விப்பட்டேன்.''

''தாங்கள் உடனே போய் அதைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொண்டு வரவேண்டுமாம். அவ்விதம் தங்களிடம் பழுவூர் ராணி நேரில் கேட்டுக் கொள்ளப் போகிறார்.''

வந்தியத் தேவன் சிறிது யோசித்துவிட்டு, ''இதையெல்லாம் என்னிடம் முன்னால் கூறவேண்டாம் என்று பழுவூர் ராணி எச்சரிக்கவில்லையா?'' என்றான்.

''ஆமாம்!''

''பின், ஏன் இதைப்பற்றி என்னிடம் சொன்னீர்கள் ?''

''என் மனம் குழம்பியிருப்பதுதான் காரணம். ஐயா! சில நாட்களுக்கு முன்னால் வரையில் நான் கள்ளங் கபடறியாத பெண்ணாயிருந்தேன். யாரைப் பற்றியும் எந்தவிதமான சந்தேகமும் கொண்டதில்லை. யாரைப் பற்றியேனும் என் தோழிகள் குறை சொன்னாலும் நம்புவதில்லை. இப்போது எல்லாரையும் சந்தேகிக்கிறேன்; எல்லாவற்றையும் சந்தேகிக்கிறேன்.''

''என் முகத்தில் விழித்த நேரத்தினால் ஏற்பட்ட விபரீதம் போலிருக்கிறது.''

''ஒரு விதத்தில் அது உண்மைதான். பழுவூர் இளைய ராணி தங்களை அழைத்து வரும்படி எனக்குச் சொல்லி அனுப்பினார். அவருடன் பேசும்போது ஒரு சந்தேகமும் தோன்றவில்லை. எல்லாம் சரியென்று தோன்றியது... இப்பால் வந்ததும் அவர் பேரிலேயே சந்தேகம் ஏற்படுகிறது.''

'' என்ன சந்தேகம், இளவரசி ? நந்தினிதேவியின் பேரில் தங்களுக்கு என்ன சந்தேகம்?''

'' அவரும் சேர்ந்து தங்களுக்குத் தீங்கு செய்ய எண்ணுகிறாரோ என்றுதான்.''

''இந்தச் சந்தேகம் ஏன் வந்தது ? அவர் எனக்கு என்ன தீங்கு செய்ய முடியும் ?''

''அதுவும் என்னால் சொல்ல முடியாது. ஆனால் அவருடைய நடவடிக்கைகளும் யோசித்துப் பார்த்தால் சந்தேகம் உண்டாக்குகின்றன. அடிக்கடி ஒரு நீண்ட வாளைக் கையில் வைத்துக் கொண்டு ஏதேதோ பேசிக் கொண்டிருக்கிறார்......''

'' ஒரு பெண்ணின் கையில் உள்ள வாளைக் கண்டு நான் அஞ்சுவதில்லை. அதைக் காட்டிலும்....''

''முகத்திலுள்ள கண்களாகிற வாள்களுக்கு அஞ்சுவீர்கள். எல்லாரும் சொல்லும் கதைதான் இது. ஐயா! நந்தினி தேவியின் வாளுக்கு மட்டும் தங்களை நான் பயப்படச் சொல்லவில்லை. முதன் முதலில் தாங்கள் வேட்டை மண்டபத்திலிருந்து நான் இருந்த அறைக்குள் வந்ததை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.....''

''நன்றாக ஞாபகம் இருக்கிறது.''

''கொலைகாரர்கள் சிலர் தங்களைத் தொடர்ந்து வந்ததாகச் சொன்னீர்கள்.

முதலில் அதை நான் நம்பவில்லை. பிறகு வேட்டை மண்டபத்துக்குள் போய்ப் பார்த்தேன். அங்குள்ள மிருகங்களுக்குப் பின்னால் சிலர் மறைந்திருப்பதாகத் தோன்றியது. அவர்கள் தங்களைக் கொல்ல வந்தவர்களா, அல்லது தங்களுடனேயே வந்தவர்களா என்று அப்போது என்னால் நிச்சயிக்க முடியவில்லை. அதனாலேயே அதைப்பற்றி நான் யாரிடமும் சொல்லவில்லை. அவர்களைப் பற்றிச் சொன்னால், தங்களைப் பற்றியும் சொல்ல வேண்டியதாகும் அல்லவா?''

''எனக்குத் தாங்கள் செய்த பெருதவி எவ்வளவு என்பதை இப்போதுதான் நன்கு உணர்ந்து கொள்கிறேன்.''

''அதற்காக நான் அந்த விஷயத்தை இப்போது சொல்லவில்லை. சற்று முன்னால் நந்தினி தேவி தங்களை அழைத்து வரும்படி என்னை அனுப்பினார். உடனே, ஏதோ அவரிடம் கேட்பதற்காகத் திரும்பிப் போனேன். கதவைத் தாளிட்டுக் கொண்டிருந்தார். உள்ளே, வேட்டை மண்டபத்திலிருந்து பேச்சுக் குரல்கள் இலேசாகக் கேட்டன. ஐயா! என் சந்தேகத்தைத் தங்களுக்கு இப்போது சொல்லி விடுகிறேன். வேட்டை மண்டபத்தில் யாரோ ஆட்கள் வந்து ஒளிந்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. அவர்களுக்கும் பழுவூர் ராணிக்கும் ஏதோ சம்பந்தம் இருக்க வேண்டும் என்றும் சந்தேகிக்கிறேன்.''

வந்தியத் தேவன் இப்போதுதான் நிலைமையின் முக்கியத்தை நன்கு உணர்ந்தான். இன்று ஏதோ விபரீத சம்பவம் நிகழப் போகிறது என்பதாக அவன் உள்ளுணர்ச்சி அவனுக்குச் சொல்லிக் கொண்டே யிருந்தது. மணிமேகலை கூறிய செய்திகள் அவன் உள்ளுணர்ச்சியை உறுதிப்படுத்தின.

''இளவரசி! எனக்குத் தாங்கள் ஓர் உதவி அவசியம் செய்ய வேண்டும்!''

''என்னவென்று சொல்லுங்கள்!''

''வேட்டை மண்டபத்துக்கு, வெளியிலிருந்து சுரங்கப் பாதை மூலமாக வரும் வழி ஒன்றிருக்கிறது. இப்போது நந்தினி தேவி இருக்கும் அறை வழியாகப் போவதற்கும் ஒரு வாசல் இருக்கிறது. இவற்றைத் தவிர மூன்றாவது வழி ஒன்றும் இருக்கிறதல்லவா ?''

''ஆமாம்; வேலைக்காரர்கள் போவதற்கென்று ஒரு வழி இருக்கிறது. அரண்மனைக்குப் புதிதாக வரும் விருந்தாளிகளை அந்த வழியாகத்தான் என் தந்தை அழைத்துப்போவது வழக்கம்.''

''இளவரசி! அந்த வழியாக என்னை இப்போதே வேட்டை மண்டபத்துக்கு அழைத்துப் போங்கள்!''

''எதற்காக?''

''அங்கே வந்து ஒளிந்திருப்பவர்கள் யார், அவர்கள் என்ன நோக்கத்துடனே வந்திருக்கிறார்கள் என்று கண்டு பிடிப்பதற்குத்தான்....''

'' தங்களை அபாயத்திலிருந்து தப்புவிக்க வந்தேன். அபாயத்துக்கே இட்டுச் செல்லும்படி கேட்கிறீர்கள்....''

''என் இடையில் எப்போதும் கத்தி இருக்கிறது, இளவரசி! தெரியாமல் வரும் அபாயத்தைக் காட்டிலும் தெரிந்த அபாயத்தை எதிர்ப்பது எளிது. அபாயத்தை நாமே எதிர்கொண்டு போவது இன்னும் மேலானது.''

'' ஒரு நிபந்தனைக்குச் சம்மதித்தால் தங்களை வேட்டை மண்டபத்துக்கு அழைத்துப் போவேன்.''

'' அது என்ன?''

''நானும் தங்களுடன் வருவேன்; என் இடையிலும் ஒரு சிறிய கத்தி வைத்துக்கொண்டிருக்கிறேன்'' என்று மணிமேகலை தன்னுடைய கத்தியை எடுத்துக் காட்டினாள்.

வந்தியத்தேவன் அதற்குச் சம்மதம் கொடுத்தான்.

''அப்படியானால் சீக்கிரம் என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள். சந்திரமதி இங்கே என்னைத் தேடி வருவதற்குள் போய்விட வேண்டும்'' என்றாள்.

நந்தவனத்தைக் கடந்து வந்தியத்தேவனை மணிமேகலை அழைத்துச் சென்றாள். பிறகு, மாளிகையின் ஓரமாகச் சுவர்களின் கரிய நிழல் அடர்ந்திருந்த இடங்களின் வழியாக அழைத்துச் சென்றாள். பிறகு மாளிகையில் புகுந்து ஜன சஞ்சாரம் இல்லாத தாழ்வாரங்கள், நடை பாதைகள் வழியாக அழைத்துச் சென்றாள். பின்னர், கதவு சாத்தப்பட்டிருந்த ஒரு வாசற்படியின் அருகில் வந்தாள். அங்கேயே வந்தியத்தேவனை நிற்கச் செய்துவிட்டு விரைந்து சென்று ஒரு கை விளக்கை எடுத்து வந்தாள். கதவைத் திறந்து உள்ளே விளக்கைத் தூக்கிக் காட்டிய போது வரிசையாகப் படிக்கட்டுக்கள் அமைந்த குறுகிய நடைபாதை காணப்பட்டது. இருவரும் அப்படிகளில் இறங்கிச் சென்றார்கள். சிறிது நேரம் சென்ற பிறகு, முன்னால் சென்ற மணிமேகலை சட்டென்று நின்று, மெல்லிய குரலில், ''நில்லுங்கள் ! ஏதோ காலடிச் சத்தம் போலிருக்கிறது. தங்களுக்குக் கேட்கிறதா?'' என்றாள்.

(தொடரும்)

பக்தி எதற்காக?

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

மிகவும் கிரமமாக நடந்து வரும் இந்தப் பிரபஞ்சத்தைச் சிருஷ்டித்து நடத்தி வருகிறவனாக ஒரு கடவுள் இருந்தேயாக வேண்டும் என்கிறேன் நான். ''ஒரு காரியம் செய்தால் அதற்கு ஒரு விளைவு இருந்தே தீருகிறது. இவ்வாறு நம் காரியங்களைப் பார்த்து அதற்குப் பலனைத் தருபவன் அந்த ஆண்டவனே!'' என்கிறேன். 'இருந்தால் இருக்கட்டுமே, அவனிடம் எதற்காகப் பக்தி செலுத்த வேண்டும்?' என்று நீங்கள் கேட்கலாம். 'நம்மைக் கேட்டுக்கொண்டா அவன் நம்மைப் படைத்தான்? அவன் நம்மைப் படைத்ததால் நமக்குக் கஷ்டங்கள்தான் இருக்கிறது!' என்று ஆட்சேபிக்கலாம்.

''கஷ்டங்களைத் தீர்க்கவும் அவனால் முடியும். அதற்காக பக்தி செலுத்துங்கள்'' என்று நான் சொன்னால் நீங்கள் அதையும் ஆட்சேபிக்கலாம். 'நாம் பிரார்த்தனை செய்தால்தான் அவன் கஷ்டத்தைப் போக்குவான் என்றால், உங்கள் ஸ்வாமி நீங்கள் சொல்வது போல் கிருபாசமுத்திரமாக இருக்க முடியாதே' எனலாம். 'இன்ன காரியத்துக்கு இன்ன விளைவு என்று அவன் தான் பலனைத் தருகிறான் என்கிறீர்கள். அப்படியானால் நம் பாபத்துக்காக அவனே தண்டனையாகக் கஷ்டத்தைத் தரும்போது, அதை மாற்றும்படி நாம் பிரார்த்தனை செய்யலாமா?' என்று கேட்கலாம்.

மகானாகிய நீலகண்ட தீக்ஷிதர் தம்முடைய 'ஆனந்த ஸாகர ஸ்தவ'த்தில் இதற்குப் பதில் சொல்லுகிறார்: ''அம்மா மீனாட்சி! உன்னிடம் எதையும் சொல்லவே வேண்டாம். சகலமும் தெரிந்தவள் நீ. ஆனாலும் உன்னிடம் கஷ்டங்களை வாய் விட்டுச் சொல்லாவிட்டால் மனம் புண்ணாகிறது. அதனாலேயே உனக்கு எல்லாம் தெரிந்திருந்தாலும் நான் என் குறைகளைச் சொல்கிறேன்'' என்றார்.

கஷ்டங்களைச் சொல்லிக் கொள்ளாமல் யாராலும் இருக்க முடியாது. வெளியில் சொன்னாலே அதில் ஒரு நிம்மதி பிறக்கிறது. கண்ட இடத்தில் போய்ச் சொல்லிக் கொள்ளாமல் — கேட்பவர்கள் எப்படி எடுத்துக்கொள்வார்களோ என்றில்லாமல்—பகவானிடம் கஷ்டத்தைச் சொல்லிக்கொள்ளலாம். அவன் கிருபாசமுத்திரமாயிருந்து நாம் கேட்காமலே கஷ்ட நிவிருத்தி தந்தாலும் சரி, அல்லது பலனைத் தரும் பலதாதா என்கிற முறையில் நம் பாவத்துக்குத் தண்டித்தே தீருவான் என்றாலும் சரி, அல்லது கஷ்டத்தை மாற்றாமலே அதைத் தாங்கிக்கொள்ளும் பக்குவத்தை நமக்குத் தந்தாலும் சரி, அவனிடம் முறையிட்டுக் கொள்வதே ஓரளவு சாந்தி.


ஆனால் நான் ஈசுவர பக்தி என்று சொல்வது நம் கஷ்ட நிவிருத்திக்காகப் பிரார்த்திப்பதை அல்ல. அல்லது நாம் சந்தோஷமாக இருந்தால் நமக்குச் சந்தோஷ வாழ்வைத் தந்தவனுக்கு நன்றியாக பக்தி செலுத்த வேண்டும் என்றும் சொல்லவில்லை. நான் அப்படிச் சொன்னால், ''மரம் வைத்தவன் ஜலம் ஊற்றத்தான் வேண்டும். நம்மைப் படைத்தவன் நமக்கு நல்வாழ்வு தரத்தான் வேண்டும்! அது அவன் கடமை. இதற்கு என்ன நன்றி?'' என்று யாராவது ஆட்சேபிக்கலாம்.

ஆகவே இதற்கெல்லாம் நான் பக்தியைச் சொல்லவில்லை. இப்போது கஷ்டம், சந்தோஷம் என்ற வார்த்தைகளைச் சொன்னேனே இந்த இரண்டுமே மனசைக் கலக்குபவைதாம். மனம் ஆடாமல் இருப்பதுதான் உண்மை ஆனந்தம். தூங்கும்போதும், ஜடமாகப் பிரமை பிடித்திருந்தாலும் கஷ்டம் — சுகம் இல்லைதான். ஆனால் அப்போது ஆனந்தமாக, சாந்தமாக இருக்கிறோம் என்று தெரிவதில்லை. மனசில் அலை எழாமல் இருக்க வேண்டும்; அமைதியாக இருக்கிறோம் என்ற பூரண ஞானத்துடன் இருக்க வேண்டும். அந்த நிலை வந்து விட்டால் நமக்கு ஈடு இணை இல்லை. அந்த நிலை வருவதற்கு அந்நிலையில் உள்ள ஒன்றைத் தியானித்துக் கொண்டே இருக்க வேண்டும். நாம் ஒன்றையே நினைத்துக்கொண்டிருந்தால், அந்த நினைவு நம்மை அது போலவே உருவாக்கிவிடுகிறது. இதை விஞ்ஞான ரீதியில்கூட ஒப்புக் கொள்கிறார்கள்.

பிரபஞ்சத்தை நடத்தி இத்தனை காரியங்களைச் செய்தும், கவனித்தும், பலனளித்தும் வந்தாலும் ஸ்வாமி இதனால் எல்லாம் மனம் சலிக்காமல் சாந்தமாக இருக்கிறார். ஈசுவரனை 'ஸ்தாணு' என்பார்கள். 'கட்டை மரம்' என்று அர்த்தம். உயிரோட்டம் உள்ள மரம் தான்; ஆனாலும் உணர்வில்லாமல் இருக்கிறது. இந்தக் கட்டையைச் சுற்றிக் கொண்டிருக்கும் கொடி அம்பாள். அந்தக் கொடிக்கு 'அபர்ணா' என்று ஒரு பெயர். அதாவது 'இலை இல்லாதது' என்று அர்த்தம். உயிரோட்டத்துடன் ஆனால் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள் இல்லாத பராசக்தி என்ற கொடியானது, உயிரோட்டம் இருந்தாலும் உணர்ச்சி இல்லாமலிருக்கும் பரம்பொருளைச் சுற்றிக் கொண்டிருக்கிறாள். ஸ்வாமி என்று நினைக்கும்போதே ஞானம், சாந்தம் என்ற இரண்டு பாவமும் நம் மனசிலும் வருகின்றன. எனவே ஸ்வாமியைத் தியானம் செய்யச் செய்ய இந்த ஞானம் சாந்தம் இரண்டும் நமக்கு ஏற்படுகின்றன. இதற்கே பக்தி.

நாம் கஷ்ட நிவிருத்திக்காக ஸ்வாமியிடம் போனாலும் சரி, அல்லது சௌக்கியமாக இருக்கிறோம் என்று நன்றி காட்டப் போனாலும் சரி, அவரை நினைக்கிற பழக்கம் வலுக்க வலுக்க, தானாகவே இந்தக் கஷ்டம் — சௌக்கியம் ஆகியவற்றிலிருந்து நம் மனம் விடுபடும். அவர் எப்படி நடத்துகிறாரோ அப்படி நடத்தி வைக்கட்டும் என்று பாரத்தை அவரிடமே தள்ளிவிட்டு விச்ராந்தியாக இருக்கிற மனோபாவம் உண்டாகும். ஏதோ ஓர் ஆனந்தமும் சாந்தமும் மனசில் படரத் தொடங்கும். இதுவே நம்மை அமர நிலையில் சேர்ப்பது. இதற்காகவே பக்தி.


ஒவ்வொருவரின்
மேனிக்கும்
பாதுகாப்பு தேவை
CINTHOL
DEODORANT
LUXURY
TOILET POWDER
WITH G-11
BY
வியர்வை துர்நாற்றத்-
திருந்தும், அதனால்
நுண்ணிய கிருமிகளிட
மிருந்தும் உங்களுக்கும்,
மற்றவர்களுக்கும் ஏற்படும்
சங்கடத்திலிருந்தும் பாது
காப் பளிக்கிறது.
ஜி-11 (ஹெக்ஸாக்ளோ-
ரோ:ஃபீன்) கலந்த
சிந்தால் டாய்லெட் பவுடர்
இந்தப் பாதுகாப்பைத்
தருகிறது. அதோடு...
அன்றலர்ந்த மலரின்
நறுமணத்தையும் தருகிறது.
சிந்தால்—
துர்நாற்றத்தை அறவே
போக்கிப் பாதுகாப்பளிக்
கும் டாய்லெட் பவுடர்.
Interpub/GP/3 Tam)



ஆயிரத்தைக் கண்டவர்

குடியாத்தம் தாலுக்காவைச் சேர்ந்த அக்ராவரம் கிராமத்தின் நாட்டாண்மைக்காரர் வீட்டில் ஒரு கரடி கட்டி வைக்கப்பட்டிருந்தது.

''இந்தக் காட்டுக் கரடியுடன் யாரேனும் குஸ்தி போட முடியுமா?'' என்று சவால் விடப்பட்டது. மில் தொழிலாளி ஒருவர் இந்தச் சவாலை ஏற்றார்! குறிப்பிட்ட நாளில் மில் தொழிலாளிக்கும் கரடிக்கும் சண்டை நடந்தது — ஒரு மணி நேரம்! மிருகம் வெறி கொண்டு தாக்கியது.

மனிதன் தன் ஆறாவது அறிவை இந்தக் கட்டத்தில் உபயோகித்தான்! சோர்ந்து போய்விட்ட பாவனையாகப் பின் வாங்கி, கரடியின் பின்புறமாகப் பாய்ந்து குரல் வளையை அமுக்கி, மூச்சுத் திணற வைத்து, கீழே தள்ளி விட்டான்!... தோற்ற வெறியில் கரடி காலால் பிறாண்டி மனிதன் மீது மாறாத வடுவைப் பதித்து விட்டது!

கரடியுடன் போரிட்டு, நாட்டாண்மைக்காரர் திருகந்தசாமி கவுண்டரிடமிருந்து வெள்ளிக் கோப்பை பெற்று விட்ட அந்த மில் தொழிலாளிதான் கே. கே. ரத்தினம்! அவரது இடது முழங்காலின் கீழ் கரடியின் நகம் பட்ட வடு இரண்டரை அங்குலம் அப்படியே இருக்கிறது!

ரத்தினம் தனது பதினாறு வயது முதல் உடற்பயிற்சியிலும், சிலம்ப விளையாட்டிலும் நாட்டம் கொண்டவர். குடியாத்தம் மாசிலாமணி வாத்தியார் என்பவர் ரத்தினத்துக்குச் சிலம்பம் கற்றுத் தந்த குரு.

சிலம்பத்தில் தேர்ச்சி பெற்றதும், எடை தூக்கும் பயிற்சி, குத்துச் சண்டை ஆகியவற்றிலும் விருப்பம் ஏற்பட்டு, சென்னை நகருக்கு அடிக்கடி வந்தார் ரத்தினம். 'தென்னிந்திய பாக்சிங் சாம்பிய'னாகத் திகழும் ஞானவாசி பரமசிவ நாடாரிடம் பயிற்சி பெற்றார்.

1955ல் 'வட ஆர்க்காடு மாவட்ட சாம்பியன்' பட்டமும், தங்கப் பதக்கமும் ரத்தினத்துக்குக் கிடைத்தன. ஆமாம் — குத்துச் சண்டைக்காகத்தான்.

''உங்கள் பராக்கிரமத்தையும், வீர விளையாட்டுக்களையும் முதல் முதல், எங்கே, பொதுமக்கள் முன்பு காண்பித்தீர்கள் ?'' — கேள்வி.

''வட ஆர்க்காடு கருப்புலீசுவரர் ஆலயத் திருவிழாவில்தான் காண்பித்தேன். சிலம்ப விளையாட்டு விளையாடினேன்.''

''உடற்பயிற்சிக் கருவி, பார், ரோமன் ரிங்ஸ் ஆகியவற்றுடன் சென்னையில் இருக்கிறீர்களே, எந்த வருடம் இங்கே வந்தீர்கள் ?''

''பல வருடங்களாக மில் தொழிலாளியாக இருந்து விட்டுக் கடந்த பத்து வருடங்களாகச் சுதந்திரமாக இருக்கிறேன். குடியாத்தத்தை விட்டு இங்கே குடியேறிவிட்டேன்.''


''சிலம்பம், குத்துச் சண்டை, எடை தூக்குதல் — இன்னும் பல உடற்பயிற்சிகளைக் கற்றுத் தந்து கொண்டிருக்கிறீர்களா ?''

''ஆமாம். கல்லூரி மாணவர்கள் சிலர் உடற் பயிற்சியும், எடை தூக்குதலும் என்னிடம் கற்றுக் கொள்ள வருகிறார்கள். இதைத் தவிர வட ஆர்க்காடு மாவட்டத்தில் பல கிராமங்களில் உடற்பயிற்சி அரங்கங்கள் இருக்கின்றன. என் பெயரில் இருபத்தாறு மன்றங்களில் மாணவர்கள் உடற் பயிற்சிகளும், யுத்தப் பயிற்சிகளும் பெற்றிருக்கிறார்கள்.......''

''எத்தனை மாணவர்களை நீங்கள் உருவாக்கினீர்கள்?''

''கிராமத்துக்கு இருபது பேர் வீதம் இருபத்தாறு கிராமங்களில் — அரைஆயிரம் மாணவர்கள்இருப்பார்கள்.''

கோயில் திருவிழாக்கள், அரசியல் மாநாடுகளின் கலை அரங்குகள், சங்க ஆண்டு விழாக்கள், பண்டிகை நாட்களில் நடக்கும் பந்தயங்கள்—



இவற்றிலெல்லாம் ரத்தினமும், அவர் குழுவினரும் வீர விளையாட்டுக்களை ஆயிரக் கணக்கில் நிகழ்த்தியிருக்கின்றனர். ரத்தினம், ஒரு முறை குளமொன்றில் மரத் தெப்பத்தில் பல மணி நேரம் சிலம்பம் விளையாடிச் சிலிர்க்கவைத்தார் பார்வையாளர்களை.

ரத்தினத்துக்கு வெளிநாட்டுப் போர்ப் பயிற்சிகளான ஜூடோ, ஜியூ — ஜித்ஸு, கராட்டே முதலியனவும் தெரியும். பேட்டி: ஏ. சுவாமிநாதன்



சிலிர்த்தெழும் சிலம்பம்

ராமாயணம்

ராஜாஜி

88. கும்பகர்ணன் எழுந்தான்

யுத்த பூமியில் ராவணன் கிரீடம் உடைந்து அவமானப்பட்டுக் கோட்டைக்குத் திரும்பிப் போவதைக் கண்ட தேவர்கள் சந்தோஷமடைந்து ஆரவாரம் செய்தார்கள். 'நம்முடைய கஷ்டங்கள் தீரும் காலம் சமீபித்தது' என்று ஆனந்தம் அடைந்தார்கள்.

ராவணனோ மானபங்கமடைந்து மிக்க கவலை கொண்டவனாகக் கோட்டைக்குள் புகுந்தான். ஆலோசித்து மனத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டு தம்பி கும்பகர்ணனை எழுப்பச் சொல்லி உத்தரவிட்டான்.

கும்பகர்ணன் தான் அடைந்த சாபத்தால் மாதக் கணக்காகத் தூங்கிப் போவான். ராவணன் அவமானப்பட்டுத் திரும்பிய போது கும்பகர்ணன் படுக்கப் போய்ச் சில நாட்களே ஆனபடியால், அந்த இளந் தூக்கத்திலிருந்து அவனைச் சுலபமாக எழுப்பக்கூடும் என்று ராவணன் தீர்மானித்து, "எப்படியாவது தம்பியைத் தூக்கத்தினின்று எழுப்பி யுத்தத்துக்குத் தயாராகும்படி செய்யுங்கள்" என்று தன் மந்திரிகளுக்கு உத்தரவிட்டான்.

"என் தவங்களெல்லாம் வீணாயின. ரிஷிகள் சொன்னது உண்மையாகும் போலிருக்கிறது. கோட்டையை எல்லாப் பாகங்களிலும் வீரர்கள் கவனமாகக் காவலிருந்து பார்த்துக் கொள்ளச் சொல்வீர்களாக. தம்பி சுகமாகத் தூங்குகிறான். அவன் தூக்கம் மாதக் கணக்காக இருக்குமே. அவன் படுத்து இன்று ஒன்பது தினங்கள்தானாயின. அவனை உடனே எழுப்பி விடுங்கள். அவன் யுத்தத்துக்குச் சென்றால் இந்த எதிரிகள் சிதறி ஓடுவார்கள். கும்பகர்ணனுக்கு எதிரில் யார் நிற்க முடியும்? அவன் எழுந்து போருக்கு நின்று விட்டால் எனக்கு ஒரு பயமுமில்லை. நான் கவலைப்படுகிறேன் என்பதை அவன் அறியவில்லை. தூங்குகிறான்."

இப்படி ராவணன் சொன்னதும் ஆட்கள் கும்பகர்ணனுடைய அரண்மனைக்குச் சென்றார்கள். அவன் எழுந்ததும் அவனுக்கு அடங்காத பசியாக இருக்கும் என்று ஆகாரம் தயாரித்து மலையாகக் குவித்து வைத்தார்கள். பிறகு அவனை எழுப்புவதற்காக அநேக பேரிகைகள், சங்குகள் முதலியவைகளைக் கொண்டு பெரிய சத்தம் போட்டார்கள். பல அரக்கர்கள் கூடி அவனைத் தட்டிக் குத்தித் தள்ளினார்கள். அவர்கள் போட்ட இரைச்சலும், பேரிகை சங்கம் முதலிய கோஷங்களும் ஆகாயமளாவிச் சென்றன. பறவைகளும் மிருகங்களும் பயந்து கத்தின.

கும்பகர்ணனுடைய சாப நித்திரை இதையெல்லாம் கேட்கவில்லை. தூங்கினவன் தூங்கிக் கொண்டேயிருந்தான். பல ராக்ஷசர்கள் கூடித் தூக்கத்தில் கிடந்தவனை மிக உபத்திரவப்படுத்தினார்கள். அவன் மேல் யானைகளை நடக்கச் செய்தார்கள். கம்புகள் எடுத்து அடித்தார்கள். இப்படி உபத்திரவம் செய்தபின், கும்பகர்ணன் கண்ணைத் திறந்து, தூக்கத்திலிருந்தவன் கொசுக் கடிக்காகக் கையால் தட்டுவது போல் அனைவரையும் தட்டித் துரத்திவிட்டுக் கொட்டாவி விட்டான்.

பிறகு, என்ன காரணம் தன் தூக்கத்தை இவ்வாறு கெடுத்தது என்று பெருங்கோபம் கொண்டான். விஷயம் தெரியாமலேயே தாங்காத பசிமேலிட்டு மலைக் குவியல்களாகக் கிடந்த மாமிசத்தையும் மற்ற ஆகாரப் பண்டங்களையும் எடுத்து விழுங்கி, பானைகளில் வைக்கப்பட்டிருந்த ரத்தத்தையும் மது வகைகளையும் குடித்துத் தாகம் தீர்த்துக் கொண்டான். அதன் மேல் அவன் கோபம் கொஞ்சம் தணிந்ததென்று அரக்கர்கள் அவனை அண்டி விஷயத்தைச் சொன்னார்கள்.

இராவணனுடைய மந்திரி யூபாக்ஷன் பேசினான்: "சுவாமி, யுத்தத்தில் அடிபட்டு நாம் அபாயத்தில் இருக்கிறோம். சீதையின் காரணம் அந்த யுத்தம். வானரர்களும் ரகுகுமாரர்களும் இது வரையில் நாம் கண்டிராத முறையில் நம்முடைய சேனையையும் வீரர்களையும் மாய்த்து வருகிறார்கள். லங்கா நகரத்தைச் சுற்றிக் கடல் போன்ற வானரக் கூட்டம் நிற்கிறது. ராவணேசுவரரே யுத்தத்தில் அடிபட்டுத் திரும்பி விட்டார். அவர் உயிருடன் தப்பியதே நம்முடைய அதிர்ஷ்டம்" என்றான்.

இதைக் கேட்டதும் கும்பகர்ணன் அடக்க முடியாத கோபாவேசமானான். "இந்தக் கணம் எதிரிகளை நிர்மூலம் செய்வேன். வானரச் சேனையைக் கொன்று ராம லக்ஷ்மணர்களுடைய ரத்தத்தைக் குடிக்கப் போகிறேன். காரியத்தை முடித்துவிட்டு ராவணனைப் போய்ப் பார்ப்பேன்."

இவ்வாறு ரோஷத்தோடு பேசியதைக் கேட்ட மந்திரிகள் மகிழ்ச்சி

யடைந்து. "முதலில் அரசனைக் கண்டு ஆலோசித்து அதற்குமேல் தக்கது செய்யுங்கள்" என்று கும்பகர்ணனிடம் விண்ணப்பம் செய்தார்கள்.

கும்பகர்ணன், "சரி, அப்படியே" என்று சொல்லி முகம் கழுவிக்



கொண்டு தன் பலத்தை விருத்தி செய்து கொண்டு, யமனைப் போல் பூமி அதிர லங்கேசன் அமர்ந்திருக்கும் மண்டபத்துக்குச் சென்றான். கும்பகர்ணன் போகும் பொழுது ராஜ மார்க்கத்தில் நின்று கொண்டிருந்த அரக்கர்கள் தைரியமும் மகிழ்ச்சியும் அடைந்து கைகூப்பி வணங்கினார்கள். அவன்மேல் புஷ்ப மாரி பெய்தார்கள்.

அரண்மனைக்குள் பிரவேசித்து ராவணன் சந்நிதியில் நின்றான். ராவணனும் தன்னுடைய நிகரற்ற தம்பி எழுந்து வந்து விட்டான் என்று அடங்காத மகிழ்ச்சியுடன் எழுந்து ஆசனத்திலிருந்து இறங்கி, அவனைத் தழுவி வரவேற்றான்.

"என்ன செய்ய வேண்டியது அண்ணா?" என்றான் கும்பகர்ணன்.

"ஏன் என்னை எழுப்பச் சொன்னீர்? உமக்கு என்ன பயம் ஏற்பட்டிருக்கிறது? யார் பிரேதமாய் விழுந்து போகக் காத்திருக்கிறார்கள்? சொல்லுவீர்!" என்றான்.

"தம்பி! உனக்குத் தெரியவில்லை. நீ உன்னுடைய தூக்கத்தில் ஆழ்ந்து கிடந்தாய். எனக்கு ராமனால் ஏற்பட்டிருக்கும் பயம் பெரிதாகி விட்டது. கடலைப் போல் வானர சேனை லங்கையைச் சூழ்ந்து கொண்டிருக்கிறது. நம்முடைய வீரர்கள் அவர்களை எதிர்த்துத் தோல்வியடைந்து மடிந்து விட்டார்கள்.

பெருஞ் சேனையுடன் ராமன் சமுத்திரத்தில் சேது ஒன்று கட்டி நம்முடைய குலத்தை வேரோடு அழிக்க வந்திருக்கிறான். என் செல்வம், என் சேனை எல்லாம் தீர்ந்து போயிற்று. நீதான் நம்முடைய குலத்தைக் காப்பாற்ற வேண்டும். உன்னை நம்பியிருக்கிறேன். நீ தேவர்களை யெல்லாம் யுத்தத்தில் சிதற அடித்திருக்கிறாய். என்னிடம் உனக்கு உள்ள பிரியத்தை நான் அறிவேன். யுத்தத்தில் உனக்கு உள்ள பிரியமும் உன் வீரமும் அறிவேன். உடனே சென்று இந்தச் சத்துருக்களை வதம் செய்து என்னையும் லங்கையையும் காப்பாற்றுவாய்'' என்றான் ராவணன்.

இதைக் கேட்ட கும்பகர்ணன் சிரித்தான். ராவணன் கவலைப்பட்டும், துக்கப்பட்டும் பிரலாபித்துப் பேசினதைக் கேட்டதும் முதலில் தனக்கு இயற்கையாகப் பாசத்தால் உண்டான கோபத்தின் வேகம் மறைந்து போய், விஷயங்கள் நினைவுக்கு வந்து விவேகம் மேலிட்டு அண்ணன் செய்த தவறுகளை எண்ணிச் சிரித்தான்.

''மன்னிக்க வேண்டும், அண்ணா! முன் நீர் மந்திராலோசனை செய்த சமயத்தில் நாங்கள் என்ன எச்சரித்தோமோ அது இப்போது நடந்திருக்கிறது. நாங்கள் உம்முடைய நன்மைக்கென்று சொன்னதை அப்போது நீர் உதறித் தள்ளினீர். சீதையை அபகரித்த பாப காரியத்தின் பயனை இப்போது அநுபவிக்கிறீர். ஆசையால் தூண்டப்பட்டுக் காரியத்தில் உள்ள தோஷத்தை ஆராயாமல் ஒருவன் புகுந்தால் கஷ்டத்தை அநுபவிக்கவேண்டியதுதானே! யோசனை செய்த பிறகு காரியத்தில் பிரவேசிப்பதற்குப் பதிலாக, காரியத்தில் பிரவேசித்து விட்டுப் பிறகு யோசிப்பது அறிவீனம். ராஜ நீதிக்கு விரோதம். சீதையை அபகரிக்கப் பிரியப்பட்டாலும் விரோதிகளான ராம லக்ஷ்மணர்களை வதம் செய்துவிட்டுப் பிறகு அல்லவோ சீதையை அபகரித்திருக்க வேண்டும்? தலை கீழாக வேலையைச் செய்து விட்டீர். நன்மை தீமைகளை யோசித்துச் சொல்லக்கூடிய மந்திரிகள், மித்திரர்கள், பந்துக்கள் இவர்களோடு கலந்து ஆராயாமல் அல்லது அவர்கள் சொன்னதைப் புறக்கணித்து விட்டு, செய்யப்படும் காரியங்கள் அபாயத்திலும் நஷ்டத்திலும் கொண்டு போய் விடும். இது நீர் அறிந்திருக்கவில்லையா? யார் சரியான யோசனை சொல்லுகிறவர்கள், யார் அல்ல என்பதை அறிய வேண்டாமா?''

இவ்வாறு கும்பகர்ணன் செய்த தர்மோபதேசமும் நீதி சாஸ்திர விளக்கமும் ராவணனுக்குப் பிடிக்கவில்லை. ராவணனுடைய முகத்தில் கோபக் குறிகள் உண்டாயின. ஆயினும் அபாய நிலையில் இருந்தபடியால் கோபத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு ராவணன் பேசினான்: ''தம்பி! இப்போது இந்த ஆராய்ச்சியில் ஒரு பிரயோசனமும் இல்லை. காலம் தாண்டிவிட்டது. இப்போது நான் கோருவது உன்னுடைய பராக்கிரமத்தின் வேகத்தை. நியாயமாகவோ, அநியாயமாகவோ, விவேகமாகவோ, அவிவேகமாகவோ, கர்வத்தாலோ, அறிவீனத்தாலோ ஒரு காரியம் நடந்துவிட்டால் அதைப் பற்றிக் காலம் கடந்தபின் யோசித்துக் கொண்டோ பேசிக் கொண்டோ இருப்பதில் பயன் என்ன? நடந்தது நடந்து விட்டது. இப்போது இந்தச் சங்கடத்தில் என்ன செய்வது என்பதுதான் கேள்வி. நடந்து போன தவறுகளால் நேர்ந்திருக்கும் கெடுதியை உன் வீரத்தாலும் சாமர்த்தியத்தாலும் தீர்ப்பது உன் கடமை. தவறுகள் செய்துவிட்டபடியால் அபாயத்திலும் கஷ்டத்திலும் சிக்கினவனுக்கு உதவி செய்கிறவனே மித்திரன். அவனே பந்து. என் பேரில் உனக்குப் பிரியம் இருப்பது உண்மையாயின் இப்போது எனக்கு நீ உதவுவாய். உன் சாமர்த்தியமும் பலமும் தெரிந்துதான் இப்படிப் பேசுகிறேன். கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் எனக்குத் தைரியம் சொல்லி என்னைக் கைவிடாமல் சூரனாக நடந்து கொள்வாய்'' என்றான்.

கும்பகர்ணன் சொன்னான்: ''நீர் கவலைப்பட்டது போதும். உமக்குப் பயம் உண்டாக்கியிருக்கும் சத்துருக்களை இப்போதே வதம் செய்வேன். நான் உம்முடைய தம்பி. ஒருபோதும் உம்மைக் கைவிடமாட்டேன். ராம லக்ஷ்மணர்கள் மாண்டார்கள் என்று நிச்சயமாக இருப்பீராக. இந்த வானரச் சேனையைச் சின்னாபின்னமாக அடித்து வதம் செய்வேன். சந்தேகப்பட வேண்டாம். ராமனுடைய தலையை உமக்கு எதிரில் கொண்டு வந்து போடப் போகிறேன். பயப்படாதீர். சுக்ரீவனுடைய ரத்தம் அருவி போல் பாய்வதைக் காண்பீர். என்னைக் கொன்றுவிட்டுப் பிறகு அல்லவா ராமன் உன்னிடம் வரவேண்டும்? என்னை யாரும் வென்று கொல்ல முடியாது என்பது உமக்குத் தெரியும்.''

இப்படிப் பேச ஆரம்பித்ததும் கும்பகர்ணனுடைய அகம்பாவம் பொங்கிக் கிளம்பிற்று. ''எந்தச் சத்துருவாயினும் அழிப்பேன். யமனே வரட்டும். சூரியனே வந்து எதிர்க்கட்டும். அக்னியேயாயினும் சரி, வரட்டும். அனைவரையும் கடித்துத் தின்று விழுங்கிவிடுவேன்'' என்று பலவாறாகப் பேசி அண்ணனுக்குத் தைரியம் உண்டாக்கிப் போர்க்களத்துக்குப் போகக் கிளம்பிவிட்டான்.

(தொடரும்)

கோபுரம்



நாடகம் பார்ப்பவர்களைக் கண்ணீர்விடச் செய்வது எவ்வளவு சிரமமான காரியமோ, அவ்வளவு சிரமமான காரியம் சிரிக்க வைப்பது. ஆகவே சோக ரஸத்தையும், ஹாஸ்ய ரஸத்தையும் கலந்து ஒரு நாடகத்தில் பரிமாறுவதென்பது இரட்டிப்புச் சிரமமான காரியம். அந்தக் காரியத்தைத் திறம்படச் செய்திருக்கிறார்கள் சாந்திநிகேதன் குழுவினர்.

''கோபுரம்'' என்ற நாடகம் நடிப்பு, பாத்திரப் படைப்பு, உரையாடல் ஆகிய எல்லா அம்சங்களிலும் கோபுரமாகவே உயர்ந்து நிற்கிறது. இதை எழுதியவர் பிரபல எழுத்தாளர் ''பிலஹரி.''

வேதாசலம் உபாத்தியாயராக உயர்ந்து, கண்ணியம் மிக்கவராக வாழ்ந்து, கடமையில் சிறந்து, கட்டுப்பாட்டில் நடந்து, கோபுரமாக உயர்ந்து நாடகம் முழுதும் பீடு நடை போடுகிறார். நாடக டைரக்டர் ஸ்ரீ டி. எஸ். சேஷாத்திரியை விட அந்தப் பாத்திரத்துக்குத் தகுந்தவர் கிடைக்க மாட்டார்கள் என்ற உண்மையை அவரது இயல்பான, ஆர்ப்பாட்டம் இல்லாத நடிப்பு உணர்த்துகிறது.

உபாத்தியாயர் மகன் முத்து சிரமமான பாத்திரம். நாடகத்தின் வில்லன் மாதிரி. தன்னைப் புறக்கணித்துவிட்டுத் தன் தகப்பனார் ஓர் அநாதையைப் படிக்க வைத்து ஆளாக்கினார் என்று ஆத்திரங்கொள்கிறான்; அந்தப் பாத்திரத்தை ஏற்ற நீலகண்டன் அருமையாக நடித்தார். அநாதை ராஜாவாக நடித்த வி. பி. சுந்தரின் நடிப்பு அந்தப் பாத்திரத்துக்கேற்ற அமைதியுடன் பாராட்டும்படி இருந்தது.

டைப்பிஸ்டு கோபு இல்லையென்றால் நாடகம் இல்லை. காட்சிக்குக் காட்சி அவர் தோன்றி, தம் நடையிலும் முக பாவங்களிலுமே சிரிப்பையும் சோகத்தையும், விரக்தியையும் அநாயாசமாக வெளிப்படுத்தி நாடகத்துக்குச் சுவையூட்டுகிறார். பெரியப்பாவாக நடிக்கும் ஏ. என். கண்ணனும், வேலைக்காரன் பெருமாளாக நடிக்கும் லைமனும் இல்லையென்றால் நாடகத்தில் சுவாரசியமே இல்லை. விஜயாவின் தந்தையாக வந்த டி. எஸ். பத்மநாபன் வெகு கச்சிதமாக நடித்தார்.

குமாரி எம். எஸ். சரளா விஜயாவாக வந்து பணத் திமிரை நடையிலும், உடையிலும், உரையாடல்களிலும் நன்கு வெளிப்படுத்தினார்; ஜயந்தி பாகத்தை ஏற்ற குமாரி பி. ஆர். பிரேமா புக்ககத்தில் பயத்துடன் நுழைந்து, பிறகு மாமனாரைச் சாடியபோது சரி; அதிக வாய்ப்பு இல்லை. ஆனால் பளிச் என்று மேடையில் சுடர் விடுகிறாரே!

''கோபுர''த்தில் குறையே இல்லையா என்று கேட்கலாம். இருக்கிறது. உபாத்தியாயரின் உதவியில் படித்து, பெரிய பணக்காரரின் மாப்பிள்ளையாகிவிட்ட ஏழை ராஜா, பணத் திமிர் பிடித்த தன் மனைவி விஜயாவுக்குத் தான் ஏழை என்பது தெரியக் கூடாது என்பதற்காகத் தன் திருமண அழைப்பைக் கூடத் தன்னை வாழ வைத்த உபாத்தியாயருக்கு அனுப்பவில்லை; அவர் நேரில் வந்தபோதும் தெரியாதவன் மாதிரி நடித்து அனுப்பி விடுகிறான். ஆனால் கடைசிக் காட்சியிலோ உபாத்தியாயரிடம் வந்து, ''என் வாழ்வையே துறந்துவிட்டு உங்களிடம் ஓடிவந்து விட்டேன்'' என்கிறான்!

காலஞ்சென்ற பல விகடத் துணுக்குகளை உயிர்ப்பித்து நாடகத்தில் சேர்த்திருக்கிறார்கள்! உதாரணத்துக்கு ஒன்று: ''இது என்ன, டீயா, காப்பியா? பெட்ரோல் வாசனை அடிக்கிறதே!'' — ''அப்படியானால் அது டீ தான். காப்பியாயிருந்தால் பெனயில் வாசனை அடிக்கும்.''

விறுவிறுப்பான காட்சி அமைப்புக்கள், தரமான உரையாடல்கள், நல்ல டைரக்ஷன் ஆகியவை ஒன்றுசேர்ந்து கோபுரத்தை நல்ல நாடகமாக உயர்த்தியிருக்கின்றன. — **காந்தன்**



குஷாலாகக் கிளம்பிய ஒரு 'குடும்பம்'

(பதினெட்டுப் பெண்களும் பதினெட்டு ஆண்களுமாக ஒரு குழுவினர் -- பல்வேறு மொழியினர், மதத்தினர் -- ஒரு குடும்பமாக வெளிநாட்டுப் பயணம் கிளம்பினர்.

ஈரான், துருக்கி, பல்கேரியா, யுகோஸ்லேவியா, இத்தாலி, ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி, பெல்ஜியம், நெதர்லந்து, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்கு இக்குடும்பத்தில் ஒருவராகச் சென்று வந்த திரு எஸ். ஜெகதீசன், சில சுவையான தகவல்களைச் சொல்கிறார்.)

பம்பாயிலிருந்து கப்பல் மூலமாக ஈரான் நாட்டுத் துறைமுகமான கோரன்சாஹர் என்னும் இடத்தில் வந்து இறங்கினோம். அங்கிருந்து ஏர்கண்டிஷன் பஸ்ஸை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு மற்ற நாடுகளை யெல்லாம் சுற்றிப் பார்த்தோம். இந்தக் கோச்சில் குளியலறை, சமையலறை, இசைக் கருவிகள் முதலியன இருந்தன. இந்த பஸ்ஸுக்கு ஒரு நாளைய வாடகை 35 பவுன்; அதாவது அறுநூறு ரூபாய்!

இந்த பஸ்ஸை ஓட்டியவர் ஈரான்காரர். ஆங்கிலம் தெரியாது. நாங்கள் தமிழில் பேசினால் அவர் ஈரானில் பேசுவார். சைகை மூலமே அவருக்குப் புரிய வைக்க வேண்டியிருந்தது. கண்டக்டருக்கோ சைகை காட்டினால்கூடத் தெரியாது!

நாம் வருபவர்களைக் கையெடுத்துக் கும்பிட்டு 'வாங்க! வாங்க!' என்று சொல்கிறோமல்லவா? அந்த வார்த்தையை மட்டும் அந்த டிரைவர் கற்றுக் கொண்டார். ''வாங்கி! வாங்கி!'' என்று எங்களை அழைத்தார்.

இட்டிலி, வடை, சாம்பார்!

நாங்கள் சென்னையிலிருந்து போகும்போதே அரிசி, பருப்பு, மிளகாய், இட்டிலி மாவு, ரவை, கோதுமை, சமையல் பாத்திரங்கள் முதலியன அடங்கிய ஒரு மூட்டையைக் கொண்டு சென்றோம். வெளிநாட்டில் தென்னிந்திய உணவு கிடைக்குமா? அதற்குத்தான்.

சோறு வேகும்; சாம்பார் மணக்கும்; இட்டிலி தயாராகும். அதை அங்கு பலர் வேடிக்கை பார்ப்பார்கள். எங்கள் பஸ் டிரைவருக்குச் சாப்பாடு போட்டோம். 'ரொம்ப நல்லா இருக்கிறது' என்று சைகையில் சொன்னார்.



எது எடுத்தாலும்...

இந்தியக் கைவினைப் பொருள்களான பொம்மை யானைகள், விளையாட்டுச் சாமான்கள், காலண்டர்கள், முத்துமாலைகள் முதலியன எடுத்துப் போயிருந்தோம். அங்கு அவற்றை விற்று, கிடைத்த பணத்தை அந்த நாட்டிலேயே செலவழிக்கத் திட்டம். இந்தப் பொருள்களை யுகோஸ்லேவியா, பிரான்ஸ், பிரிட்டன் நாட்டு மக்கள் மிகவும் விரும்பி வாங்கினார்கள். யானைப் பொம்மை என்றால் அவர்களுக்குக் கொள்ளை ஆசை. ஜெர்மனியில் உள்ள கோலோன் என்னும் நகரில் கடையை விரித்து வைத்து, 'போடு...போடு' என்று சைனாபஜார் மாதிரி கத்த ஆரம்பித்து விட்டோம். இங்குள்ள விலையை விட முக்கால் மடங்கு விலைக்கு இந்தப் பொருள்கள் அங்கு விற்றுப் போய்விட்டன.

ரவா லட்டு ஜோர்!

துருக்கி சுங்க இலாகாவில் உள்ள அதிகாரிகளுக்கு நாங்கள் கொண்டு வந்திருந்த ரவா லட்டு கொடுத்தோம். அவர்கள் 'ஜோர் ஜோர்!' என்று சொல்லும் வகையில் மிகவும்



விரும்பிச் சாப்பிட்டு அவர்கள் மொழியில் என்னென்னவோ பேசிக் கொண்டார்கள்.

லண்டனில் இப்படித்தான் மாங்காய் ஊறுகாயைச் சிலருக்குக் கொடுத்தோம். 'வெரி குட் வெரி குட்' என்று நாக்கில் நீர் சொட்ட (கண்களிலும்தான்!) சொன்னார்கள்.

வண்ணப் புடவைகள்...

லண்டனில் ஒரு தினசரிப் பத்திரிகையிலிருந்து நிருபர் வந்து எங்களைப் பேட்டி கண்டார். மறுநாள் காலைப் பத்திரிகையில், 'ஓர் இந்தியக் கும்பல் லண்டன் வந்திருக்கிறது' என்று செய்தி வெளி வந்திருந்தது. வண்ணப் புடவை அணிந்தவர்களும் இருந்தார்கள் என்று எழுதியிருந்தது. எங்களில் சிலர் லுங்கி கட்டியிருந்தோம். அதையும் அந்தப் பத்திரிகை எழுதும்போது சில ஆண்களும் புடவை கட்டியிருந்தார்கள் என்று குறிப்பிட்டிருந்தது!

வயர்லஸ் டாக்ஸி

நாங்கள் நால்வர் லண்டனிலுள்ள சில இடங்களைச் சுற்றிப் பார்த்து விட்டு இரவு பதினொரு மணிக்கு ஒரு டாக்ஸியில் வந்து

கொண்டிருந்தோம். காலை ஏழு மணிக்கு விமான நிலையம் போக வேண்டும் என்று பேசிக் கொண்டு வந்தோம். அதைக் கேட்ட டிரைவர் ''அப்படியா? காலையில் உங்களை அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யட்டுமா?'' என்று பணிவாகக் கேட்டார். நாங்கள் மகிழ்ந்து, ''ஓ, தாராளமாக!'' என்றோம். (அப்போது நாங்கள் சென்னையை நினைத்துக் கொண்டோம். கைதட்டினாலும், கராடியாகக் கத்தினாலும்கூட வராத டாக்சி டிரைவர்கள் எங்கள் கண் முன் வந்தார்கள்!)

டாக்சி டிரைவர் உடனே வண்டியில் பொருத்தப்பட்டிருந்த ''வயர்லெஸ்'' மூலம் தம் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டார். நாங்கள் சொன்ன இடம், நேரம் முதலிய விவரங்களை, பல மைல் தொலைவிலுள்ள தலைமை நிலையத்துக்குத் தெரிவித்தார். ''நாளைக் காலை சரியாக ஏழு மணிக்கு நீங்கள் இருக்கும் இடத்துக்கு ஒரு டாக்சி வந்து நிற்கும்'' என்றார்.


மறுநாள். சரியாக மணி ஏழு. ஒரு செடிலாக் டாக்சி ஜம்மென்று எங்கள் இருப்பிடத்துக்கு வந்து சேர்ந்தது. அதிலிருந்து ஒரு டிப்டாப் ஆசாமி இறங்கி, ''நீங்கள் விமான நிலையம்தானே போக வேண்டும்? நேற்று இரவு தலைமை நிலையத்துக்குத் தகவல் வந்தது. ஏறுங்கள் போகலாம்!'' என்றார். நாங்கள் அவர்களின் பொறுப்புணர்ச்சியை எண்ணி மிகவும் மகிழ்ந்தோம்.

ஹெலிகாப்டரும் வாங்கலாம்!

ஜெர்மனியில் மிகப்பெரிய சூப்பர் மார்க்கெட் ஒன்று உள்ளது. அது நம் நாட்டில் இருப்பதைப் போன்று நூறுமடங்கு பெரியது. அறுபது வாசல்களும் ஆறு மாடிகளும் கொண்ட இந்த சூப்பர் மார்க்கெட்டுக்கு 'லிப்ட்' இல்லை. மாறாக 'நகரும் படிக்கட்டுகள்' இருக்கின்றன. படிக்கட்டுகளில் நாம் நின்று கொண்டால் போதும். அதுவே அந்தந்த மாடிகளில் கொண்டு போய் விட்டுவிடும்.

இங்கு விற்பனை செய்யவோ, விலைகளைச் சொல்லவோ ஆட்கள் கிடையாது! பொருள்களின் மேலேயே விலைச் சீட்டுகள் பொருத்தப்பட்டுள்ளன. தேவையான பொருளை நாம் தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அங்கே உள்ள டிராலி வண்டியில் அவைகளைப் போட்டுத் தள்ளிக் கொண்டு 'கேஷியர்'இடம் போக வேண்டும். பணத்தைக் கட்டிவிட்டுப் பொருள்களை எடுத்துச் செல்ல வேண்டும். திருட்டுத்தனமாக ஏதேனும் ஒரு பொருளை எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டால்...! ஒளிக்கும் போது அங்கு ரகசியமாகப் பொருத்தப்பட்டுள்ள டெலிவிஷன் சாதனம் அப்படியே அதைப் படம் பிடித்துக் கொள்ளும்!

ஏழாவது மாடியான மொட்டை மாடியில் ஹெலிகாப்டர்களை விற்பனைக்கு வைத்திருக்கிறார்கள். அங்கு ஹெலிகாப்டர்களை வாங்கிக்



மயிலாப்பூர் அகாடெமியில் பாரதத்தின் முன்னாள் ராஷ்டிரபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களின் உருவப் படத்தை இந்நாள் ராஷ்டிரபதி ஸ்ரீ வி. வி. கிரி அவர்கள் திறந்து வைத்தார்.

கொண்டு அப்படியே ஹெலிகாப்டரில் பறந்து போய் விடலாம்!

நடுத்தெரு நாராயணன்

தாயகம் திரும்ப ஈரான் துறைமுகத்தில் கப்பல் ஏற வந்தோம். ஆனால் எதிர்பாராத விதமாகக் கப்பலில் இடம் கிடையாது என்று கையை விரித்து விட்டார்கள். ஒரு நிமிடம் எங்கள் இதயமே நின்றுவிடும் போலிருந்தது. புதிய நாடு, புதிய மக்கள், எங்கு தங்குவோம்? எப்படிச் சாப்பிடுவோம்? போனதும் கப்பலில் இடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் கையிலிருந்த காசையெல்லாம் செலவழித்துவிட்டோம். கொஞ்ச நஞ்சமிருந்த தானிய வகைகளும் தீர்ந்துபோய் விட்டிருந்தன. பெண்களும் ஆண்களுமாக நடுத் தெருவில் நின்றோம்.

அன்று நான்காம் தேதி. இரவு நேரம்.

நான், அங்கு யாராவது இந்தியர்கள் இருக்கிறார்களா என்று விசாரித்தேன். இருக்கிறார்கள் என்று தெரிந்ததும் உயிர் வந்தது.


ஜக்கரய்யா என்ற ஓர் இந்தியரிடம் எங்கள் நிலைமையை எடுத்துச் சொன்னேன். பெண்கள் அன்று இரவு மட்டுமாவது தங்குவதற்கு இடம் கொடுக்கும்படி கேட்டேன். அவர் மனமுவந்து அத்தனை பேருக்கும் தம் வீட்டிலேயே இடம் கொடுத்தார். அன்றைய இரவைக் கழித்தோம். மறுநாள் இன்னும் சில இந்தியர்களை விசாரித்துக் கண்டுபிடித்து நிலைமையை விவரித்தோம். அங்குள்ள இந்தியர்கள் எல்லாரும் ஒன்றுகூடிப் பேசி, எங்களுக்கு உதவி செய்ய முன்வந்தார்கள். நாங்கள் தங்க ஒரு பெரிய வீட்டை ஏற்பாடு செய்தார்கள்.


4ந் தேதி வந்தவர்கள் 24ந் தேதிதான் பம்பாய் போகக் கப்பல் ஏற முடிந்தது. அந்த இருபது நாட்கள், அங்குள்ள இந்தியர்கள் எங்களைக் காப்பாற்றினார்கள். இந்த இருபது நாட்களை நாங்கள் என்றென்றும் மறக்கவே முடியாது.

— பேட்டி: மலையோன்

இப்பொழுது ஒன்றல்ல, இரண்டு உள்ளன! ஒன்றை ஒன்று மிஞ்சும் இரண்டு அழகான ராவி:பேன்

டேபிள்:பேன் அறைக்கு அழகூட்டவேண்டும் என்பது எங்கள் நோக்கம். எனவே, எங்கள் :பேன்களை உங்களுக்காக அழகுற அமைக்கிறோம். உங்கள் விருப்பம்போல் தேர்ந்தெடுக்க இரண்டு வகைகள் உள்ளன. இடதுபுறம் இருப்பது, எங்கள் பிரபலமான மாடல். வலதுபுறம், புதிய டி–லக்ஸ் ராவி:பேன். இரண்டும் எடுப்பானவை; சிறப்பானவை. ராவி:பேனின் புகழ்வாய்ந்த தர உயர்வை ஒவ்வொரு அம்சத்திலும் காணலாம்.





நீண்டகாலம் உங்கள் வாழ்வோடு இணைந்து ராவி:பேன் சீரான சேவை புரிந்துவரும். சத்தமில்லாத இயக்கம், அதிகப்படியான குளிர்ச்சியூட்டும் சக்தி, விற்பனைக்குப் பின் சிறப்பான பராமரிப்புச் சேவை. நீங்கள் வாங்கும் அடுத்த :பேன், உங்கள் இல்லத்தின் அழகுக்கு அழகு செய்யும் ராவி:பேன் ஆகட்டும். ராவி:பேன் இரண்டு வருட உத்தரவாதத்துடன் கிடைக்கிறது.

அத்தியாயம் பத்து

நினைவிழந்து கிடக்கும் மஞ்சுளாவுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக மோகனாவை அழைத்துவிட்டு உள்ளே வந்த கோகிலா மஞ்சுளாவின் இரத்தத்தைக் கண்டதும் பீதியுற்று முகம் வெளுக்க, உடல் வெலவெலக்க ''ஹா'' என்று குரல் எழுப்பினாள். அந்தத் தீனமான குரலைக் கேட்டுத் திரும்பிய சேகர்; மயங்கி விழப் போன கோகிலாவைச் சட்டென்று ஓடி வந்து தாங்கிக் கொண்டான். மெள்ள அவளை அப்படியே தரையில் கிடத்தினான். ரத்தத்தைக் கண்ட அதிர்ச்சியினால் அவள் அப்படியே மயங்கி நினைவிழந்து போனாள்.

சுழிக்காற்று



சேகர் நிதானமிழக்காமல் காவேரியைப் பார்த்து, ''இவர்களைக் கவனியுங்கள்!'' என்று கூறினான்.

காவேரி பரபரப்புடன் மஞ்சுளாவிடமிருந்து கோகிலாவின் அருகே ஓடி வந்தவள், ''பெரியம்மா தைரியத்துக்குப் பெயர் போனவங்க. ஆனால் ரத்தத்தைக் கண்டால் மட்டும் அவங்களுக்கு இப்படித்தான்'' என்று கூறியபடியே கீழே உட்கார்ந்து கோகிலாவின் தலையை எடுத்துத் தன் மடி மீது வைத்துக் கொண்டு அவளது கரங்களைத் தேய்த்துச் சூடு பண்ண ஆரம்பித்தாள்.

இந்த வேளையில் நர்ஸ் மோகனா ஒயிலாக உள்ளே வந்தாள். அவள் இப்போது உத்தியோக உடையில் தோன்றவில்லை. இளம் பச்சை வர்ண சில்க் புடவையும் ஆழ்ந்த பச்சை வண்ண ரவிக்கையும் அணிந்து ஓர் அப்ஸரஸ் போலத் தோற்றமளித்தாள். வந்தவள் அங்குள்ள நிலையைக் கண்டதும் நினைவிழந்து கிடப்பவர்களுக்கு நினைவு திரும்பச் செய்வதற்குரிய சாதனமான 'ஸ்மெல்லிங் ஸால்ட்' பாட்டிலைக் கொண்டு வர அறைக்குத் திரும்பினாள்.

தலையைப் பலமாகக் குலுக்கிக் கொண்டு எழுந்து உட்கார்ந்த மஞ்சுளா கண்களைத் திறந்தாள். சேகரைப் பார்த்து, ''உறுதியான பெல்ட்டினால் இரண்டு தடவை என்னைத் தாக்கினார்கள்'' என்றவள் உடனே திகிலுடன் ''நிர்மலா எங்கே? அவளுக்கு அபாயம் ஒன்றுமில்லையே?'' என்று கேட்டாள்.

''நான் உன்னைத் தேடிக் கொண்டு உன் அருகில் வந்தபோது அங்கு நிர்மலா இல்லை'' என்றான் சேகர், உடைந்த குரலில்.

இதற்குள் கோகிலாவுக்கு நினைவு திரும்பிக் கட்டிலின் அருகில் வந்தாள்.

கட்டிலின் கால்மாட்டுக் கிராதியை அவளது இரு கரங்களும் உறுதியாகப் பற்றியிருந்தன. அந்த அழுத்தத்தில் ரத்த ஓட்டம் தடைப்பட்டு அவை வெளுப்பாகத் தோன்றின. ''இது.... இந்த விபரீதம் ஏன் என்றே எனக்குப் புரியவில்லையே மஞ்சுளா ! இந்த அநியாயத்தை உனக்குச் செய்தவர் யாராயிருக்கும்? ஏன் இப்படி உன்னை அவர்கள் தாக்க வேண்டும் ?'' கோகிலாவின் குரல் கம்பீரம் இழந்து ஒலித்தது.

சேகர் தன் கைத்தடியை ஊன்றியபடி கட்டிலின் அருகிலிருந்து முன்னால் நடந்து கொண்டே, ''எங்களுக்கும் அதைப் பற்றி ஏதும் விளங்கவில்லை, அம்மா! எப்படியோ மஞ்சுளாவுக்கு அதிர்ச்சிதான். அபாயம் ஒன்றுமில்லை. ஆனால் அவள் தோழி நிர்மலாவைக் கண்டுபிடித்தாக வேண்டும். அதுதான் இப்போது மிகவும் முக்கியமான விஷயம். டெலிபோன் எங்கே இருக்கிறது?'' என்று கேட்டவன், சுற்று முற்றும் பார்த்தான். ஒரு மூலையில் இருப்பதைக் கண்டு அதை நோக்கி நடந்தான். டெலிபோனின் அருகில் இருந்த டைரக்டரியைப் பிரித்து ஏதோ நம்பரைப் பார்த்து எண்களை 'டயல்' செய்தான். அடுத்த விநாடி டெலிபோன் குழலில் இன்ஸ்பெக்டர் ஏகாம்பரத்தின் குரல் துல்லியமாக ஒலித்தது.

''ஹலோ, நான் சேகர். முல்லை வாசல் ஜமீன் பங்களாவிலிருந்து பேசுகிறேன். சற்றுநேரத்துக்குமுன் பண்ணையார் மகள் மஞ்சுளா மோசமான முறையில் தாக்கப்பட்டாள். அதைவிட முக்கியமான விஷயம். நர்ஸ் நிர்மலாவையும் யாரோ கேவலமாகத் தாக்கியிருக்கிறார்கள். மூர்ச்சை அடைந்திருந்த அவள் திடீரென்று மாயமாக மறைந்தும் போயிருக்கிறாள். சற்று முன் இந்தப் பங்களாவுக்குச்



...இட்டால் இதமளிப்பு



டெட்டால் அரவணைப்பு

காயங்களைத் தூய்மைப் படுத்துவதோடன்றி, ஆற்றவும் துணை: டெட்டால்

பட்ட காயம் எதுவாயினும், தட்டாமல் நம்புவீர் கட்டாயம் ஆற்றுவது டெட்டால். உங்கள் டாக்டரே கூறுவார் : கிருமிகள் அணுகாமல் காயத்திற்குப் பரிபூரண ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்புத் தருவது டெட்டால்.

குளிர்க்கும் நீரிலே இட்டால்...புத்துணர்வூட்டுகிறது டெட்டால்.

ஜுவரத்திற்கான நீரிலே ... பாதுகாக்கிறது டெட்டால்.

டெட்டால் உபயோகிக்க வேறு ஏதேனும் புதிய வழி... ?

தெரிந்தால் எழுதுங்கள். நடைமுறைக்கேற்ற, புதுமையான யோசனையாக இருந்தால் ரூ. 10. அனுப்புவோம்!

எழுதவேண்டிய முகவரி: G.P.O. பாக்ஸ் 909, கல்கத்தா-1.

புதுமைக் கோல டெட்டால்-பரிபூரண ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு



சிறிது தூரத்தில் நிர்மலாவை நினைவிழந்த நிலையில் நாங்கள் பார்த்தோம். இப்போது அவளை யாரோ அப்புறப்படுத்திக்கொண்டு போய்விட்டார்கள். அந்த அவன் மூர்க்கத்தனமும் கொடுமையும் நிறைந்தவன் என்பதைத் தவிர அது யார் என்பதைப் பற்றி இப்போது எனக்கு எதுவும் தெரியாது. அந்த நபரையும் நிர்மலாவையும் தேடுவதற்கு நீங்கள் எவ்வளவு விரைவில் இங்கு வர முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது. மிக்க வந்தனம்....'' என்று கூறி டெலிபோனை அதன் இடத்தில் வைத்து நிமிர்ந்த சேகர் அசைவற்றுச் சில விநாடிகள் அங்கேயே நின்று கொண்டிருந்தான். ஆனாலும் அவன் பார்வை அப்படிச் சும்மா இருக்கவில்லை. அந்த அறையையும் தரையையும் நோட்டமிட்டபடி இருந்தது. அந்த நோட்டம் வீண் போகவும் இல்லை. சட்டென்று அவன் புருவங்கள் நெரிந்தன. மேஜையின் அடியில் கிடந்த ஏதோ ஒரு பொருளைக் கண்டுதான் அவன் முகத்தில் அப்படியொரு மாறுதல் ஏற்பட்டது. சிரமத்துடன் குனிந்து அதை எடுத்த சேகர் அதைத் தன் உள்ளங் கையில் வைத்துக் கொண்டு உற்றுப் பார்த்தான். உருட்டிப் புரட்டி, கறுப்பான அந்தப் பொருள் நவநாகரிகப் பெண்மணி அணியும், குதிகால் உயர்வான காலணியின் குதிகால் பக்கம் உள்ள ரப்பர்க் கட்டை. நர்ஸ் நிர்மலாவினுடையது தான் அது என்பதில் சேகருக்குக் கொஞ்சமும் சந்தேகம் இருக்கவில்லை. அது இங்கே வருவானேன்? வினா எழுப்பினான். விடைதான் கிடைக்கவில்லை.

* * *

சுழல் மாடிப் படிகளின் வழியே சுற்றிச் சுற்றி இறங்கிக் கொண்டிருந்தான் சேகர். அவன் கோட்டுப் பையில் சற்று முன்பு கண்டெடுத்த பெண்கள் அணியும் குதிகால் உயரமான காலணியின் பாதப் பக்கத்தில் உள்ள ரப்பர்க் கட்டை உறுத்திக் கொண்டிருந்தது. தோட்டத்தில் கால்வாய்க் குழியில் விழுந்த போது சிராய்ப்பு ஏற்பட்ட முழங்காலில் எரிச்சல் அதிகரித்திருந்ததோடு, அந்தக் காலை மடக்கவும் சிரமமாக இருந்தது. சேகர் இறங்கிக்கொண்டிருந்தது பிரதானமான மாடிப்படியல்ல. பங்களாவின் பின்பக்கத்து வழியாக மாடிக்குச் செல்லும் மற்றொரு வழி அது. அந்தப் பங்களாவைச் சுற்றிப் பார்த்துவிட வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் சேகர் கீழே இறங்கிக் கொண்டிருந்தான். கீழே வந்ததும் அவன் கவனத்துக்கு இலக்கானவை வரிசையான சில அறைகள். முதல் அறையின் கதவைத் திறந்ததும் அது பங்களாவிலிருந்து வெளியே அழைத்துச் செல்லும் ஒரு பாதையோடு நீண்டிருந்தது. கோழி மற்றும் ஆட்டுப் பண்ணைகளின் கொட்டில்களுக்குச் செல்லும் பாதை என்பது அங்கிருந்த குறிப்புப் பலகை சொல்லிற்று. அதை மூடிவிட்டு அடுத்துள்ள ஓர் அறையின் கதவைத் திறந்து உள்ளே சென்று விளக்கைப் போட்டான் சேகர். அந்த அறையில் பெரிய பெரிய ராட்சஸக் குளிர் சாதனப் பெட்டிகள் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. பெரிய தொழிற்சாலைகளில் இருக்க வேண்டிய பிரும்மாண்டமான பிரிஜிடர்கள் அவை. அதைப் பார்த்ததும் மஞ்சுளா கூறிய சில விஷயங்கள் நினைவுக்கு வந்தன. அவள் தாத்தா இரண்டாவது யுத்த காலத்தில் ராணுவத்துக்குக் காய்கறிகள் மற்றும் ஆட்டிறைச்சி, முட்டைகள் ஆகியவற்றைச் சப்ளை செய்யும் காண்ட்ராக்டராக இருந்தாராம். அதனாலேயே செல்வமும் செல்வாக்கும் அவருக்குப் பெருகியதாகக் கூறியிருக்கிறாள். அத்தகைய உணவுப் பொருள்களைச் சேமித்துக் கெடாமல் காப்பாற்றப் பயன்படுத்தப்பட்ட சாதனங்கள்தான் அவைகள். அடுத்து சேகரின் பார்வைக்கு இலக்கானது ஒரு விசாலமான நவீன வசதிகளோடுகூடிய சமையல் அறை. பெரியதொரு ஹோட்டலுக்குத் தேவையான அத்தனை பாத்திரங்கள் சாதனங்களுடன் அது கம்பீரமாக விளங்கியது.

அந்த அறையிலிருந்து வெளி வந்தபோது சேகரை நோக்கிக் கோபால் வந்து கொண்டிருந்தான் விரைவாக. 'நிர்மலா?' என்று பரபரப்புடன் கேட்ட சேகருக்கு ''அவளை எங்கும் காணவில்லை சேகர்'' என்ற பதில்தான் அவனிடமிருந்து வந்தது.

சேகரின் முகத்தில் கவலையின் ரேகைகள் மின்னலிட்டன. மௌனமாக மறுபடியும் அந்தச் சுழல் படிகளின் வழியே மேலே ஏறலானான். மஞ்சுளாவின் நிலைமையைப் பற்றிய கவலையும் அவன் உள்ளத்தைக் கனக்க வைத்திருந்தது. மடக்க முடியாத முழங் காலின் வலி மாடிப் படி ஏறுவதைப் பெரிய சாதனையாக்கிக் கொண்டிருந்தது. ஒரு வழியாக மேலே ஏறிய சேகர் மஞ்சுளாவின் அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது ஒரு கம்பீரமான குரல் அதிகாரத்துடன் அவனை ஆணையிட்டுக் கூப்பிட்டது.


'' புரொபஸர் சேகர், இங்கே வாருங்கள் !'' அலட்சியம் செய்ய முடியாத அந்தக் குரலின் ஆணைக்குக் கட்டுப்

பட்டு அவன் கால்கள் நின்றன. நின்ற இடத்துக்கு அருகிலிருந்த ஒரு இருள் சூழ்ந்த திறந்த அறையிலிருந்துதான் அவனுக்கு அழைப்பு வந்தது. சேகர் அந்த இருளில் நுழைந்ததும் அதே குரல் மேலும் ஆணையிட்டது. ''இடது கைப் பக்கம் உள்ள ஸ்விட்சைப் போடுங்கள்.''

சேகர் கை வைத்த இடத்தில் சரியாக ஸ்விட்ச் இருந்தது. விளக்கு எரிந்து அந்த அறையின் விசாலத்தை விளக்கியது. பழங்காலத்து ஜமீந்தார்களின் மாளிகையில் உள்ள கூடத்தைப் போன்றிருந்த அதன் கோடியில் ஒரு கட்டில், அதில் ஆஜானுபாகுவான ஒரு வயோதிகர் படுத்திருந்தார். உழைப்பால் உரமேறிய அந்த உடல், அப்படிப் படுத்திருப்பதேகூட ஒரு கம்பீரமாக இருந்தது. இரண்டு மூன்று தலையணைகளை வைத்து உயரமாக்கி இருந்தார்கள் தலைப் பகுதியில். அதில் அமுந்திப் பாதி மறைந்திருந்தது தலை. பாலாக நரைத்த மீசை, உறுதியான கருங்கல்லிலே செதுக்கியது போன்ற முகம். அசைய முடியாத நிலையில் கிடந்த அவர் ஒற்றைக் கண்ணினால் சேகரை உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். மற்றொரு கண்ணின் இமை மூடிக் கிடந்தது. இடது பக்கத்து வாயும்கூட இயங்க இயலாத நிலையில் போய்க் கோணிக் கிடந்தது. உடலின் இடப் பகுதியை உணர்வற்றதாக்கி இருந்தது அவரைப் பீடித்திருந்த நோய். சவரம் செய்யப்படாததினால் அந்தமுகத்தின் முரட்டுத் தன்மை அதிகமாகி யிருந்தது. இறுகிப் போயிருந்த முகத்தில் உறுதியான தாடை எலும்புகள் உயர்ந்து வெளிச்சத்தில் பளபளத்தன. பார்ப்பவர்களுக்கு அச்சம் ஏற்படும்படியான தோற்றத்துடன் காணப்பட்டார் அவர்.

ஆனால் சேகர் அவரைக் கண்டதினால் எவ்வித சலனமும் அடையாமல் சிரித்துக் கொண்டே கட்டிலை அணுகினான்.

கனைத்துக் குரலைச் சரியாக்கிக் கொண்டார் அந்தப் பெரியவர். பாரிச வாயுவினால் குரல் வளையின் இடது பகுதியும் பாதிக்கப்பட்டிருந்ததினால் அவரது



குரலே விநோதமாக ஒலித்தது. ''என் பேத்தி தன் வருங்காலக் கணவனைத் தேர்ந்தெடுத்துள்ள வாலிபன் நீதானா?'' என்று கேட்டார் அந்தக் கிழவர்.

''முல்லைவாசல் ஜமீந்தாரும் மஞ்சுளாவின் தாத்தாவுமான புகழ் பெற்ற தர்மலிங்கம் அவர்கள் தானே நீங்கள்?'' என்று அருகில் சென்று கிழவரின் இரு கரங்களையும் பற்றிக் கொண்டான் சேகர்.

அந்தக் கைகளின் இருக்கத்திலே அன்பு, நட்பு, பாசம், நம்பிக்கை இவைகளை இருவரும் பரஸ்பரம் உணர்ந்து கொண்டார்கள்.

கம்பீரமான அந்தக் கிழவரின் பார்வை எந்த உள்ளங்களையும் படித்தறியும் ஆற்றல் பெற்றவை என்பதைச் சேகர் தெரிந்து கொண்டான். தமது பார்வையால் அவனை அளந்து கொண்டே ''உட்காருங்கள்'' என்றார்.

சேகர் அவரது படுக்கையின் விளிம்பில் மயில் வாகனத்திலே உட்காரும் முருகனைப்போல் அமர்ந்து கொண்டான்.

''மஞ்சுளா எங்கே?'' என்று கேட்டார் கிழவர்.

''இதோ, வந்து கொண்டே இருக்கிறேன்'' என்று கூறிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் மஞ்சுளா. குழப்பமும் சோர்வும் கலவையிட்டிருந்த அந்த முகத்தில் தர்மலிங்கத்தைக் கண்டதும் மகிழ்ச்சி பூத்தது. ஓடி வந்தவள் தர்மலிங்கத்தின் கழுத்தைச் சிறு குழந்தையைப்போல் கட்டிக் கொண்டாள்.

கிழவரும் படுத்துக் கிடந்த அதே நிலையில் உணர்வோடு இயங்கிக் கொண்டிருந்த ஒரு கையினால் அவளைத் தம் மார்போடு அணைத்துக் கொண்டார். அவர் கண்களில் கசிவு கண்டது. உணர்ச்சி வசப்பட்ட அவர் பேச முடியாத நிலையில் கனைத்துக் கொண்டார். ஆனால் அந்தக் கனைப்பு மஞ்சுளாவின் சிற்றன்னை கோகிலாவுக்காகத்தான் என்பதைப் பிறகுதான் சேகர் அறிந்து கொண்டான். மஞ்சுளாவைத் தொடர்ந்து வந்த கோகிலா அந்த அறையின் வாயிற்படியிலேயே நின்று கொண்டிருந்தாள். அடுத்த வினாடி அவர் முகம் சுருங்கிக்

சோப் ஒன்று-பலன் மூன்று!

நிகோ *கிருமிநாசினி* சோப்

மற்றெந்த சோப்பையும் விட உங்கள் சருமத்திற்கு மிகுந்த பாதுகாப்பளிக்கிறது

1 நிகோ சருமக் கிருமிகளைக் கொல்லுகிறது

2 நிகோ உடல் துர்நாற்றத்தைப் போக்குகிறது

3 நிகோ உடலைத் துப்புரவாக்கிப் பாதுகாப்பளிக்கிறது

நீங்கள் ஆரோக்கியமான சருமத்தைப் பெற, நாள்தோறும் நிகோ சோப் தேய்த்துக் குளியுங்கள். நிகோவின் நச்சுநாச நுரைவளம் சரும நோய்க் கிருமிகளைக் கொன்று, உங்கள் சருமத்திற்கு ஆரோக்கியமளிக்கிறது. நிகோவிலுள்ள மருந்துப் பொருள்கள் வியர்வையினால் ஏற்படும் துர் நாற்றத்தைப் போக்குகின்றன. நிகோ சின்னஞ்சிறிய சருமத் தொற்றுகளையும் எதிர்த்துப் போராடி, சருமத்துக்கு மென்மையளிக்கிறது. அதோடு மினுமினுப்பும் புதுமையும் தருகிறது. இது மட்டுமல்ல; முகப் பருக்கள் மற்றும் வேர்க்குருவிலிருந்தும் உங்கள் சருமத்துக்குப் பாதுகாப்பு தருகிறது நிகோ. ஷாம்புவாகக்கூட இதைப் பயன்படுத்தலாம். இதனால் பொடுகு விழாமல் தடுக்கிறது நிகோ. எனவே, இன்று முதலே, நிகோ சோப் உபயோகிக்கத் தொடங்குங்கள்.



TRIPLE ACTION

NEKO

The Original Germicidal Soap

PARKE-DAVIS

JAISONS 72 Tam

சுரந்தது. கோகிலாவின் அருகே நர்ஸ் மோகனாவும் அப்போது வந்து நின்றது தான் அவருடைய கோபத்துக்குக் காரணம்.

''இங்கிருந்து போங்கள்'' என்று கடுகடுத்தார் தர்மலிங்கம் அவர்களைப் பார்த்து.


'' இம்மாதிரிச் செயல்களெல்லாம் உங்கள் உடல் நிலைக்கு ஏற்றதல்ல. அமைதியாகத் தூங்க வேண்டும்'' என்ருள் கோகிலா, கிழவரைப் பார்த்து.

''என் அருமைப் பேத்தி வந்திருக்கும் போது நான் தூங்கிக் கொண்டிருக்க வேண்டுமா ? என் மஞ்சுளாவுடன் பேசிக் கொண்டிருப்பதால் என் உடல் நிலை மோசமாகுமாளுல் அதையே நான் மகிழ்ச்சியோடு வரவேற்பேன். என்னைக் கருத்தோடு கவனித்து வருவதாக நீ நினைத்துக்கொண்டிருக்கிருயே கோகிலா, அது சாதிக்க முடியாததை என் பேத்தி யின் வரவு சாதித்துவிடும் தெரிந்ததா? ஏய், மோகனு! நர்ஸ் அல்ல நீ; மயக்கு மோகினி, நல்ல பாம்பு தெரிந்ததா ? என்னை நீ கண்காணிக்கவோ கவனித்துக் கொள்ளவோ இங்கு வரவேண்டாம். போ, வெளியே!'' என்று கிழவர் தம் கட்டைக் குரலில் தடுமாறியபடியே உத்தரவிட்டார்.

நர்ஸ் மோகனு ஒயிலும் ஒய்யாரமு மாக ஆடி அசைந்தபடி அங்கிருந்து நகர்ந்தாள்.

'' அவளைக் கண்டாலே எனக்குப் பிடிக்கவில்லை'' என்ருர் தர்மலிங்கம், கோகிலாவைப் பார்த்து. ''நிர்மலாவை வேலையிலிருந்து நீக்கியதன் மூலம் உன் சர்வாதிகாரத்தைக் காட்டிக் கொண்டு விட்டாய் இல்லையா கோகிலா? அவளை நிறுத்துவதற்குமுன்பு என்னைக் கலந்து கொண்டிருந்திருக்க வேண்டும். நிர்மலா கண்ணியமான பெண். கடமையைச் செய்வதில் அன்பும் மனிதத் தன்மை யும் கொண்டவளாக இருப்பாள். இந்த மோகனுவை விரட்டி விட்டு மறுபடி யும் நிர்மலாவை இங்கு நர்ஸாக நிய மனம் செய். ஆமாம்!''

ஆனல் கோகிலா கிழவரின் வார்த்தை யைக் காதில் வாங்கிக் கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. அவர் முகத் தைப் பார்க்கவும் இல்லை. கர்வமும் அகம்பாவமும் கொண்ட தன் பார் வையை மஞ்சுளாவிடம் திருப்பி, ''மஞ்சுளா, உன் தாத்தாவின் நல்லதுக் காகத்தான் சொல்கிறேன். அவருடன் சில நிமிஷங்களுக்கு மேல் தங்கியிருக்க வேண்டாம். அவருக்குப் பூரணமான ஓய்வு தேவை'' என்று கூறிவிட்டு விருட் டென்று திரும்பி நடந்தாள்.



அகம்பாவத்துடன் செல்லும் கோகி லாவையே பார்த்துக் கொண்டிருந்த கிழவர், ''உன் அப்பா இன்னொரு கல் யாணம் செய்து கொண்டிருக்கவே கூடா தம்மா'' என்றவர் மஞ்சுளாவின் விழி களைச் சந்தித்தவாறே, ''உன் சித்தியை வெறுப்பதாக நினைக்காதே, அவளை விரும்பி சகஜமாகப் பேச வேண்டும் என்றுதான் நானும் முயற்சி செய்கி றேன். ஆனல் ஏனே அவளைக் கண்டதும், இல்லை அவள் நடத்தைகள் என்னை அவ ளிடம் வெறுப்புக் கொள்ளும்படி செய்து விடுகின்றன.... ம்.... அது சரி... நீ என்னவோ போலிருக்கிருயே! வழக்க மான குறும்பும் குறுகுறுப்பும் உன் னிடம் காணுேமே!'' என்று கேட்டார்.

மஞ்சுளா தன் தாத்தாவிடம் தான் வந்தது முதல் நடந்தவைகளைக் கூறி அவரது அமைதியைக் கெடுக்க விரும்ப வில்லை. ஆகவே அவர் எதிர்பார்த்த குறும்பைக் காட்ட, ''என்னை மனைவி யாக்கிக் கொள்ளப் போகிறவர் என்னை அடித்தாரப்பா'' என்று செல்லமாகச் சிணுங்கிக் கண்ணைக் கசக்கிக் கொண்டே தாத்தாவின் தோளிலே முகம் புதைத்துக் கொண்டு அவர் காதருகே மெள்ள, ''அவரை உங்களுக்குப் பிடித்திருக்கி றதா தாத்தா?'' என்று கேட்டாள்.

''பரவாயில்லை'' என்று கூறியபடி கனைத்துக் கொண்ட தர்மலிங்கம், ''உன் உரிமையாக்கிக் கொண்ட பிறகு உனக்கு ஏற்றவனுகி விடுவான்....'' என்று பேத்திக்கு மறுமொழி கூறினர். பிறகு சேகரைப் பார்த்து, ''வாலிபனே! என் பேத்தி கண் கலங்கும்படி நடந்து கொண்டாயாளுல் நான் சும்மாவிட மாட்டேன். ஆமாம்! அவள் உன்னைச் சரியாக மதிக்காவிட்டாலும்கூட நான் என் பேத்தியின் பக்கம்தான் பேசுவேன். தெரிந்ததா?'' என்று கோணலாகச் சிரித்த கிழவரின் கண்களில் குறும்பு ஜ்வலித்தது. தன் மார்பில் சாய்ந்து கொண்டிருக்கும் மஞ்சுளாவின் தலை யைப் பாசத்துடன் வருடியபடியே,


LIFEBUOY
for health
லைப்பாய்
இருக்குமிடம்: அதுவே
ஆரோக்கியம்
இருக்குமிடம்
புத்துணர்ச்சி தருவதிலே ஈடிணையற்றது
லைப்பாய் ஸ்நானம். உற்சாகப் பெருக்கு,
உல்லாச ஊற்று. ஆரோக்கிய மிதப்பு.
நல்ல சோப்புக்குரிய தன்மைகள்
யாவும் பெறுவீர், மேலும் பெறுவீர்
லைப்பாய் துணையால்...
அழுக்கிலுள்ள கிருமிகளைக்
கழுவிக் களைவது
லைப்பாய்

'உன் கணவன் என்னைப் புரிந்து கொண்டுவிட்டான் மஞ்சுளா. நான் என்ன சொல்கிறேன் என்பதை அவன் கேட்கவில்லை. நான் என்ன நினைக்கிறேன் என்பதை அவன் உணர்ந்து கொண்டு விட்டான். என் செயல்களைப் பார்க்கவில்லை. என் உள்ளத்தில் உள்ள பாசத்தை அவன் படிக்கிறான். நீங்கள் பொருத்தமான ஜோடிகளாகச் சந்தோஷமாக வாழுவீர்கள்.'' கிழவரின் குரல் கரகரத்தது. விழிகள் நீரில் மிதக்கலாயின. சட்டென்று தம்மை நிதானப் படுத்திக்கொண்டார். உறுதியும் அழுத்தமும் மறுபடியும் அவர் தோற்றத்தில் வந்து புகுந்து கொண்டன. ''உன் அப்பா கந்தசாமியின் படுக்கையைக் கோகிலா மேலக் கோடிக்கு மாற்றிவிட்டாள்'' என்றார் எங்கோ பார்த்துக் கொண்டு. அவர் தோளிலிருந்து நிமிர்ந்து உட்கார்ந்தாள் மஞ்சுளா. ''உங்களிடமிருந்து ரொம்ப தூரத்துக்குக் கொண்டு போய் விட்டார்களே அப்பாவை'' என்றாள்.

''ஆமாம். என்னிடமிருந்து என் மகனைப் பிரித்தே விட்டாள் உன் சித்தி. நான் அவனுடன் வெறுமனே பேசிக் கொண்டே இருக்கிறேனாம். அதனால் அவனுக்கு ஓய்வு கிடைப்பதில்லையாம். உன் சித்தி இப்படிக் காரணம் காட்டி அவனை அந்தக் கோடிக்குக் கொண்டு போய் விட்டாள்.''

''ஆனால் அப்பா உங்களுடன் பேசிக் கொண்டிருப்பதைத்தானே ரொம்பவும் விரும்புவார். எனக்குத் தெரியும் அவரை.''

''எனக்கும் தெரியும். ஆனால் இப்போது ஜமீனைக் கோகிலாதானே நடத்துகிறாள் மஞ்சுளா? அவள் விருப்பம் தானே எல்லாமே. உன் அப்பாவுக்கு என்னால் அமைதி இல்லாமல் போகிறது என்ற காரணம் பச்சைப் பொய் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால் நாங்கள் இருவருமே அந்த ராட்சசியின் கைபார்த்துத்தானே வாழ வேண்டியிருக்கிறது? எங்கள் நிலைமை, உடல் நிலை அப்படியாகி விட்டதே! உன் அப்பாவுக்கு என்னைவிட மோசமாகத் தாக்கியுள்ளது இந்த வியாதி. உண்மை தான். ஆனால் அதற்காக என் மகனை என் அருகிலிருந்து இப்படிப் பிரிக்க வேண்டுமா? மூன்று வாரங்களாயிற்று அவனை வேறு இடத்துக்கு மாற்றி. அந்தக் கோரமான புயல் வீசிற்றே அன்று இரவுதான்.''

புயலைப் பற்றிக் கேட்டதும் மஞ்சுளாவின் முகம் சோபை இழந்தது. 'புயல்... புயல். — மறுபடியும் அந்தப் புயல் வீசிய இரவு' என்று தவித்தது அவள் உள்ளம். ''தாத்தா... நாங்களிருவரும் மறுபடியும் நாளைக் காலையில் வருகிறோம். நீங்கள் இப்போது அமைதியாகத் தூங்குங்கள்'' என்று கூறி எழுந்தாள்.

''வருகிறோம்; வணக்கம்'' என்று சேகரும் கரம் குவித்தான்.

''வணக்கம்; போய் வாருங்கள்'' என்றார் கிழவர் தர்மலிங்கம். அறை வாசலின் அருகே வந்ததும் சேகர் அந்த அறையின் விளக்கை அணைத்து விட்டு அதை இருள் சூழ்ந்ததாகச் செய்தான்.

வராந்தாவின் வழியாக மஞ்சுளாவுடன் நடந்து கொண்டிருக்கும்போது சேகர் தன் கோட்டுப் பையிலிருந்து ரப்பரினாலான 'ஹை ஹீல்ஸ் ஷூ'வின் கட்டையை எடுத்து அவளிடம் நீட்டினான். அதை அவளிடமிருந்து வாங்கிப் பார்த்த மஞ்சுளா திடுக்கிட்டாள். இதற்குள் அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்த நடு ஹாலை அடுத்துள்ள ஒரு வராந்தாவுக்கு வந்திருந்தார்கள். சேகர் போலீஸுக்கு அங்கிருந்துதான் டெலிபோன் செய்தான். ''இதை நான் இங்கே, இந்த மேஜையின் கீழே தான் கண்டு எடுத்தேன்'' என்றான்.

மஞ்சுளா சேகர் சுட்டிக் காட்டிய இடத்தைப் பீதியுடன் வெறித்துப் பார்த்தாள். ''சேகர்...! அப்படியானால்... அப்படியானால்.... ஐயோ! அப்படி இருக்கக் கூடாது'' என்று குரல் நடுங்கக் கூறினாள்.

''அப்படித்தான் இருக்க வேண்டும் மஞ்சுளா! அவள் காலிலிருந்து இது பெயர்ந்து விழும்போது நிர்மலா இந்த வராந்தாவில் இருந்திருக்கிறாள்.'' மஞ்சுளாவிடமிருந்து அதை வாங்கித் தன் விரல்களுக்கிடையே உருட்டிப் பிடித்தபடியே ''பலாத்காரம், போராட்டம் இதையே இது சுட்டிக் காட்டுகிறது'' என்றான் சேகர்.

''ஆனால் — நாம் அப்படி எதையும் கேட்கவில்லையே!''

''சமையல்காரி காவேரி கேட்டிருக்கிறாள். நாம் உணவருந்திக் கொண்டிருக்கும்போது அவள் இரண்டு மூன்று தடவை ஏதோ சத்தம், கதவைத் திறந்து மூடுவது போலக் கேட்டதாகக் கூறவில்லையா? டெலிபோனில் யாரோ அழைப்பதாகச் சொல்லவில்லையா?''


''சேகர்....!'' வெளிறிய முகத்துடன் மஞ்சுளா பேச்சற்ற நிலையில் அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள்.


''ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்கிறது'' என்றான் சேகர் எங்கோ பார்த்துக் கொண்டு.

(தொடரும்)

புதிய கோத்ரெஜ் ஸ்டோர்வெல்

கொண்டுள்ள குணநலன்கள்





சுவிட்ஸர்லாந்து.

பல மலைச் சிகரங்களுக்கு அப்பால் உள்ள க்ரின்டன்பால்ட் என்னும் இடத்தின் இயற்கை எழிலைக் காணப் புறப்பட்டான் சரவணன். 'சேர்வே' ஸ்டேஷனில் கூட்டமே இல்லை. சேர்வே என்பது கம்பி இணைப்பு மூலம் ஆகாய மார்க்கமாக மின்சார சக்தியில் நகர்ந்து செல்லும் ஒரு நாற்காலி. அதிலே இரண்டு பேர் உட்காரலாம்.

ஸ்டேஷனில் ஒரு நாற்காலி தயாராக நின்று கொண்டிருந்தது. அதிலே ஓர் இளம் பெண் மட்டும் அமர்ந்திருந்தாள். இன்னொருவர் வந்து உட்கார்ந்தால் அது புறப்படும். சரவணனைக் கண்டதும் ஸ்டேஷன் சிப்பந்தி அந்த நாற்காலியில் அவனை உட்காரச் சொன்னான்.

சரவணன் தயங்கினான். சுமார் மூன்று மணி நேரம் செல்ல வேண்டிய பயங்கரமான அந்தப் பயணத்தில் ஓர் இளம் பெண்ணுடன் தனியாக இருப்பதா?

அந்தப் பெண்ணைப் பார்த்தான் சரவணன்.

குளிரிலே படபடக்கும் அழகிய இமைகள், சற்றே நீல நிறமுடைய விழிகளை, அந்த விழிகளின் கூரிய ஒளி வீச்சை மூடி மூடித் திறந்தன. பொன்னிற மான சுருண்ட கேசக் கற்றைகள், தலையிலே கட்டியிருந்த மப்ளரையும் மீறி ஓரிரு இடங்களில் எட்டிப் பார்த்துச் சிரித்தன. குளிராக இருந்தால், கம்பளி ஆடைகளை மேலும் அணிந்து, தன் அழகுப் பொன்னுடலை மேலும் மறைத்து விடுவாளோ என்று அஞ்சி, காற்றுக்கூட வீசாமல் நின்று அவளுடைய மேனி அழகை ரசித்துக் கொண்டிருப்பது போல் சரவணனுக்குத் தோன்றியது.

இத்தகைய அழகியோடு அவன் தனியாகப் போவதா?

ஸ்டேஷன் சிப்பந்தி அவசரப்படுத்தினான். சரவணனோ தயங்கிக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்தப் பெண்ணே அவனை நேரே பார்த்தாள்.

ஓ!... அந்தப் பார்வை!... நீல வானத்தில் வெண்ணிலவிலிருந்து விகசிக்கும் தண்ணிய கதிர்போல் அவளுடைய நீல நிறக் கண்களின் ஒளி நிறைந்த பார்வை, சரவணனுடைய உள்ளத்தில் ஆழப் பதிந்து நின்றது.

அவனுடைய தயக்கத்தை அவள் புரிந்து கொண்டாள் போலிருக்கிறது.

''ப்ளீஸ், கமான்..... டேக் யுவர் ஸீட்....''
என்று அவளே முன்வந்து கூப்பிட்டாள்.

சரவணன் இன்னும் தயங்கமுடியுமா? அவளே பேசிய பிறகு மறுப்பது நாகரிகமில்லையே!

சேர்வே புறப்பட்டது.

அது நகரும்போது, பனி படர்ந்த மலைகள் ஒன்றன் பின் ஒன்றாய் மறைந்து சென்

ம. செல்வன்



சுடாத செருப்பு

அய்க்கண்

றனை. தூரத்தே பசுமையான பழச்சோலைகளும் பூந்தோட்டங்களும்... கண்ணுக்கு எட்டியவரை ஒரே பசுமை: வளமை: குளுமை.

கண்ணுக்கு அருகிலே இருக்கும் அந்தப் பெண்ணைப் பார்க்க அவனுக்குத் துணிச்சல் ஏற்படவேயில்லை. ஆனால் இப்படி எவ்வளவு நேரம் உம்மென்று இருப்பது? மூன்று மணி நேரமும் இப்படியே இருந்துவிடமுடியுமா?

கடைசியில் அவளே தான் பேச்சை ஆரம்பித்தாள்.

''எக்ஸ்க்யூஸ் மீ... ஐ திங்க் யூ ஆர் ஃப்ரம் இண்டியா.''

எப்படி இதை அவள் கண்டு பிடித்தாள் என்று ஆச்சரியப்பட வேண்டியதில்லை. இப்படி ஒரு பெண்ணுடன் தனியே உட்கார்ந்திருப்பதற்குத் தயங்குகின்றவன் இந்தியனாகத்தானே இருக்க வேண்டும்?

''ஆம். நான் இந்தியன்தான். தமிழ்நாட்டிலே பிறந்தவன்'' என்று ஆங்கிலத்தில் கூறினான் சரவணன். இதைக் கேட்டதும் அவள் ஆச்சரியத்துடன் துள்ளினாள்.

''ஓ! டமில் நாட்!...'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூவியவள், ''நீங்கள் தமிழரா?..வெரி குட்.. எனக்கு ரொம்ப ரொம்ப மகிழ்ச்சி'' என்றதும் அவன் ஆச்சரியத்துடன் துள்ளினான்.

''ஆச்சரியப்படாதீர்கள். யுனிவர்ஸிடி - லாங்வேஜ் சென்டரில் நான் தமிழ்ப் பாடம் எடுத்துப் படித்திருக்கிறேன். சென்னையில் நடந்த உலகத் தமிழ் மகாநாட்டுக்கும் நான் வந்திருக்கிறேன். சிறந்த புலவர்களுக்கும் பெரியோர்களுக்கும் சிலைகள் எழுப்பி மரியாதை செய்திருப்பது என்னை மிகவும் கவர்ந்தது. வாழ்ந்து மறைந்த பெரியோர்களின் சிலைகளை மட்டுமல்ல; ஒரு இலக்கியப் பாத்திரத்துக்கும் பெருமை அளித்துச் சிலை செய்திருந்ததுதான் என்னை மிகவும் உணர்ச்சி வசப்படச் செய்தது.... ஓ! கண்ணகி சிலை! வாட் எ ஒண்டர்ஃபுல் ஐடியா!......'' என்று தன்னை மறந்து ஆங்கிலத்தில் கூறியவாறு கண்களை மூடிக் கொண்டாள். அந்தச் சிலையை மானசீகமாகக் கண்ணுக்குள்ளே பார்த்து அவள் மகிழ்கிறாளோ?

''எனக்கொரு சந்தேகம் — கண்ணகிக்குச் சிலை எடுத்தது போல ஏன் மாதவிக்கும் எடுக்கவில்லை?.. கண்ணகியாவது குடும்பப் பெண். ஆனால் மாதவி ஒரு கணிகைக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவள் கற்பரசியாக வாழ்ந்தது தானே சமுதாயத்துக்கே

ஓர் எடுத்துக்காட்டு? சேற்றில் முளைத்த செந்தாமரையான அவளுக்கு ஏன் சிலை வைக்கவில்லை? அவளை ஏன் கற்புத் தெய்வமாக நீங்கள் நினைக்கவில்லை?''

அவளுடைய கேள்வியைக் கேட்டுச் சரவணன் திகைத்தான்.

மாதவியை ஏன் கற்புத் தெய்வமாகக் கருதிச் சிலை எடுக்கவில்லை? மதுரையை எரித்த வீரத் துக்காகவா கண்ணகியைப் போற்றுகிறோம்? ஒருவேளை கோவலனோடு மாதவி மதுரைக்கு வந்திருந்தாலும் இதே மாதிரி மதுரையை எரித்திருப்பாள் என்று வாதிடலாமே! ஊரையே கொளுத்திக் காட்டுவது போன்ற செயற்கரிய வீரச் செயல்களைப் புரிந்ததற்காகவா சீதையையும் பாஞ்சாலியையும், அருந்ததியையும் நளாயினியையும் கற்புத் தெய்வங்களாக வணங்குகிறோம்? இல்லையே!... பின் ஏன் மாதவியைக் கற்பரசியாகப் போற்றவில்லை? — சரவணனுக்கு விளங்கவில்லை.

''மன்னிக்க வேண்டும். நான் சிலப்பதிகாரத்தை அவ்வளவு நுட்பமாகப் படிக்கவில்லை....'' என்று உண்மையை ஒப்புக் கொண்டான் சரவணன்.

''நான் அடுத்த தடவை தமிழ் நாட்டுக்குப் போகும்போது இதுபற்றி விளக்கம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். யாராவது ஒரு தமிழாசிரியரிடம் கேட்டால் சரியான விளக்கம் கிடைக்கும்.''

''யாராவது தமிழாசிரியர் என்ன? என்..''

சட்டென்று நாக்கைக் கடித்துக்கொண்டான் சரவணன். பேச்சை மாற்றி அவளுடைய பெயர், ஊர் விவரங்களைக் கேட்க ஆரம்பித்தான்.

நீனு ஸ்மித், லண்டனில் ஒரு கல்லூரியில் சைகாலஜி புரொபஸரான வின்ஸெண்ட் ஸ்மித்தின் ஒரே மகள். பட்டம் பெற்று ஒரு தொழிற்சாலை மானேஜரிடம் ஸ்டெனோவாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாள். இரண்டு வாரங்களுக்கு முன்பு வாராந்திர விடுமுறையைக் கழிக்க வின்ஸெண்ட் ஸ்மித், மனைவியுடன் காரில் செல்லும்போது விபத்துக்குள்ளாகி இருவரும் ஸ்தலத்திலேயே மாண்டு விட்டனர். நீனு ஒரே நாளில் தாய் தந்தையரை இழந்து அநாதையாகி விட்டாள். பெற்றோரை இழந்த சோகத்தை மறப்பதற்காகத்தான் அவள் 'காண்டினெண்டல் டூர்' புறப்பட்டு வந்திருக்கிறாள்.

''நான் மிகவும் வருந்துகிறேன், மிஸ் நீனு ஸ்மித்! ஒரே சமயத்தில் பெற்றோர் இருவரையும் இழந்து நீங்கள் அனுபவிக்கும் துயரம் தாங்க முடியாததுதான். ஆனாலும் அதைத் தாங்கிக் கொள்ளும் தைரியம் உங்களுக்கு வரக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்'' என்று அவளுக்கு ஆறுதல் கூறினான் சரவணன்.

சென்னையில் மீனு கெமிக்கல் ஒர்க்ஸின் மானேஜிங் பார்ட்டனரான சரவணன் லண்டனில் உள்ள ஒரு கம்பெனியிடம் புதிய ரஸாயனத் தயாரிப்பு சம்பந்தமான ஃபார்முலாவும் லைசென்சும் பெறுவதற்காக வந்தான். வந்த வேலை வெற்றிகரமாக முடிந்து விட்டதால் அந்த மகிழ்ச்சியை அனுபவிப்பதற்காகவும் ஐரோப்பாவில் உள்ள வேறு சில ரசாயனத் தொழிற்சாலைகளைப் பார்ப்பதற்காகவும் அவன் சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தான்.

சரவணன் தன்னைப் பற்றிக் கூறியபோது முக்கியமான ஒன்றை மறைத்து விட்டான். ஒரு மனிதனுடைய வாழ்விலே 'அது' முக்கியமான ஒன்றுதான்! ஆனால் அவனுடைய வாழ்விலே அது கசப்பான ஒன்றாக ஆகிவிட்டதே!

'அதை இப்போது சொல்லாவிட்டால் என்ன?... தேவைப்பட்டால் பிறகு சொல்லிக்கொள்ளலாமே?'

அன்று முதல் இருவரும் சேர்ந்தே சுற்றுப் பயணம் செய்தார்கள்.

பார்ஸிலோனாவில் 'அம்யூஸ்மெண்ட் பார்க்'கில் இருவரும் சேர்ந்து சுற்றினார்கள். மின்சார பஸ்ஸில் ஒன்றாகப் பயணம் செய்தார்கள். மெடடோர்களின் காளை மாட்டுச் சண்டையைப் பார்த்தார்கள்.

மறுநாள் இருவரும் பாரீஸுக்கு வந்தனர். இன்பத்துக்கும் களியாட்டத்துக்கும் பொழுது போக்குக்கும் பெயர் போன பாரீஸில்தான் அவர்கள் வாழ்க்கையிலும் ஒரு முக்கிய திருப்பம் ஏற்பட்டது.

பாரீஸில் ஒரு நாள் இனிமையான குளிர்ச்சி தவழும் மாலை நேரம். ஈஃபெல் டவரின் உச்சியில் நின்று கொண்டிருந்தார்கள் சரவணனும் அவளும்.

முந்நூறு மீட்டர் உயரமுள்ள அந்த 'டவரி'லே நிறையக் கூட்டம். வில்லி ரோஜா பூச்செண்டுகளைக் கையில் ஏந்திய காதலர்கள், ஆங்காங்கே, ஜோடி ஜோடியாக...

சுற்றிலும் நிறைந்திருந்த இனிய எழில் காட்சிகள்: இங்கிதமான காற்று; கைகளைக் கோத்து, உடலைத் தழுவி, இதழ்களைப் பொருத்தி... குளிரை விரட்டும் முத்தக் காட்சிகள்...

இந்த இனிய உணர்ச்சியூட்டும் காட்சிகளைச் சுற்றிலும் பார்த்துக் கொண்டிருந்த நீனுவின் வலது கை, தானாகச் சரவணனுடைய இடது கையை ஸ்பரிசிக்கிறது.

ஓர் இனிய அதிர்ச்சி: சுவையான ஆச்சரியம் அவனுக்கு.

நீனுவின் கைப்பிடி மேலும் இறுகுகிறது. அவளது இடது கை அவனுடைய இடுப்பிலே பாந்தத்துடன் சுற்றி வந்து, தோள் மட்டத்தை எட்டி, கழுத்திலே வளைத்துக் கொண்டு—

அடுத்த விநாடி, சரவணனின் உடலெங்கும் ஓர் இன்பத் துள்ளல்.

மேல் நாடு ஜெயித்து விட்டது: இந்தியா தோற்றுவிட்டது!

ஓ! சூழ்நிலைதான் எவ்வளவு தூண்டுதலாக இருக்கிறது! அவனுடைய தோளிலே மலர்ச் செண்டாக மயங்கிச் சாய்ந்து கிடந்தாள் நீனு. இனி அவள் அநாதையல்ல!

சட்டென்று அவன் நெஞ்சிலே நெருப்புக் கனலிட்டது.

நெஞ்சிலே 'அவள்' இருந்து சுடுகிறாளா?... இல்லை; அவள் சுடமாட்டாள். அவளுக்குச் சுடத் தெரியாது; குளிரத்தான் தெரியும். அவனுடைய பண்பையும் நல்ல குணத்தையும் நம்பித்தானே அவள் நீனுவிடம் பழகி


1 PAISA
1967
நான்கு சட்டைகள்
அல்லது இரண்டு
சேலைகள் பனிபோல்
வெண்மை பெறுகின்றன.
செலவு
ஒரே ஒரு காசுதான்!
maxim
மாக்ஸிம்
கடைசி அலசலுக்கு முன்.
நீரில் 10—15 துளிகள்
மாக்ஸிம் கலக்கவும். அதில்
துணிகளை 15 நிமிடம் ஊற
வைக்கவும். பிறகு பிழியா
மல் அப்படியே உலர
விடவும்.
ULKA-GMM-6 TAM

ளுன்; பேசினான்; நெருங்கினான்; தொட்டான்; அணைத்தான் — கடைசியில் இன்னொரு 'கோவலன்' ஆனான்?

அன்று இரவு ஹோட்டல் அறையில் உட்கார்ந்து பக்கம் பக்கமாக அவனுக்குக் கடிதம் எழுதினான். அவன் நீண்ட நேரம் கடிதம் எழுதுவதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள் நீனு ஸ்மித்.

"யாருக்கு இவ்வளவு பெரிய கடிதம் எழுதுகிறீர்கள்? உங்கள் பார்ட்னருக்கா?"

"ஆம்; என் பார்ட்னருக்குத்தான்" என்றான் சிலேடையாக.

'அவள்' அவனுடைய வாழ்க்கைக்குப் பார்ட்னராக வந்தவள்தான்: ஆனால் பார்ட்னராக வாழ்பவள் அல்ல!

பாரீஸிலிருந்து சரவணனும் நீனுவும் புறப்பட்டு லண்டன் வந்ததும், அவன் எதிர் பார்த்தபடியே அவனுக்குச் சென்னையிலிருந்து கடிதம் வந்திருந்தது. அந்தக் கடிதத்தைப் படித்ததும் சிறிது நேரம் உணர்ச்சி வசப்பட்டு நின்றான் அவன்.

அந்தக் கடிதம் அவன் வாழ்க்கையிலே எவ்வளவு முக்கியமானது?

"நீனு! நம் கல்யாணத்தை எப்போது வைத்துக் கொள்ளலாம்?" என்றான் சரவணன்.

"உங்கள் பெற்றோரிடம் சொல்லிச் சம்மதம் கேட்க வேண்டாமா?"

"சம்மதம் வாங்கி விட்டேன். ஊரிலிருந்து கடிதம் வந்து விட்டது. இனி உன் சம்மதம் தான் பாக்கி... நான் உன்னைக் காதலிக்கிறேன். நீ என்னை மணப்பாயா நீனு?" என்று குறும்பாகக் கேட்டான் அவன்.

அவனுடைய பேச்சைக் கேட்டதும் மகிழ்ச்சியால் பூரித்து நின்றாள். அழகுக்கு அழகு செய்வது போல் நாணம் அவள் பெண்மைக்கு எழிலூட்டியது.

பெண், பெண்தான் — மேல் நாடோ, கீழ் நாடோ, எங்கிருந்தாலும் பெண் பெண்தான்!

"லண்டனிலேயே கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யலாமா?" என்று கேட்டான் சரவணன்.


"நோ, நோ...இனிமேல் எனக்கு உறவு, சொந்தம், வீடு, வாழ்வு எல்லாம் தமிழ் நாட்டிலேதான். என் கல்யாணமும் அங்கே தான்; இந்திய முறைப்படிதான் நம் கல்யாணம் நடக்க வேண்டும்."

"ஆகா! என் நீனு நீனுதான்!" என்று மகிழ்ச்சியால் அவளைப் பூப் பந்தாகத் தூக்கி விளையாடினான் அவன். "நாளையே நாம் மெட்ராஸுக்குப் புறப்படுகிறோம். விமான டிக்கெட் 'புக்'பண்ணி விடுகிறேன்" என்று புறப்பட்டான்.

"சீக்கிரமே வந்து விடுங்கள். இன்று ஒரு தமிழ்ப் படம் மேட்னி இருக்கிறது. நாம் பார்க்கப் போக வேண்டும்" என்றாள் நீனு.

அந்தத் தமிழ்ப் படம் சிலப்பதிகாரம் தான்! நீனு மிகவும் ரசித்துப் பார்த்தாள். அவனால் அவ்வளவு ரசிக்க முடியவில்லை. எப்படி முடியும்? 'மூலக் கதை' அவன் 'கதை' யாக இருக்கிறதே!

"ரொம்ப உருக்கமான கதைதான். ஆனால் என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை."



"நீச்சல் குளத்தில் குளிக்க இரண்டு டிக்கெட் தாங்க சார்!"

சரவணன் மனத்துக்குள் சிரித்துக் கொண்டான்.

நீனு தமிழ்நாட்டில் முதன் முதலாகச் சந்திக்கப் போகிற பெண்ணும் மீனு என்ற ஒரு அபாக்கியவதிதான்!

சென்னை விமான நிலையம்.

சரவணன் நீனு பின்தொடர, விமானத்திலிருந்து இறங்கியதும் முதலில் அவர்களை வரவேற்றது 'அவள்'தான்.

"வாங்க அத்தான்!... வா நீனு! பயணம் சௌக்கியமா யிருந்ததா?"

'என்னை எப்படி இவளுக்குத் தெரியும்? யார் இவள்?' என்று கேட்பதுபோல் நீனு சரவணனைப் பார்த்தாள்.

"நீனு! இவள்தான் மீனாட்சி; என் மனைவி— முதல் மனைவி!"

நீனு திடுக்கிட்டாள். "என்ன?... நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

அவனுக்குப் பதில் சொல்லுமுன், கெமிகல் ஒர்க்ஸ் பார்ட்னரும் மானேஜரும் மற்றச் சிப்பந்திகளும் அவனுக்கு மாலை அணிவித்து வரவேற்றார்கள்.

தனியே நின்றிருந்த நீனுவிடம் பரிவோடு நெருங்கிப் பேசிக் கொண்டிருந்தாள் மீனாட்சி.

"நீனு! உன்னைப் பற்றி எல்லாம் அவர் எழுதியிருந்தார். உன்னைப் பார்த்ததும் எனக்கு ரொம்ப மகிழ்ச்சி; திருப்தி!"

நீனு திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தாள்.

"நீனு! வா, வீட்டுக்குப் போய் எல்லாம் பேசிக் கொள்ளலாம்... மீனாட்சி, வா."

இருவரையும் அழைத்துக் கொண்டு காரில் ஏறினான் சரவணன்.

வீடு வந்ததும், "மீனாட்சி! நீனுவை வீட்டுக்குள் அழைத்துப் போ... நான் ஆபீசுக்குப் போய் வியாபாரத்தைப் பற்றி விவரம் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று புறப்பட்டுவிட்டான்.

'கண்ணகி'யும், 'மாதவி'யும் 'கோவலன்' வீட்டுக்குள்ளே நுழைந்தார்கள்.

"நீனு! உன்னுடைய குழப்பம் எனக்குப் புரிகிறது. என்னைப் பற்றி அவர் உன்னிடம்

எதுவுமே சொல்லியிருக்க மாட்டார். நானே எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன்'' என்று ஆரம்பித்தாள் மீரா.

''என் அப்பா ஏழைத் தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம்பித்துச் சுய முயற்சியால் முன்னேறி லட்சாதிபதியானவர். அவருக்கு ஆண் குழந்தையே இல்லை. நான் ஒரே ஒரு மகள்தான். எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் மாகாணத்திலேயே முதல் மார்க் வாங்கிய ஓர் ஏழைப் பையனைத் தம் வீட்டுக்கு அழைத்து வந்து, கல்லூரியில் படிக்க வைத்து எம்.எஸ்ஸி. பட்டம் பெற்றதும் மேல்படிப்புக்காக அமெரிக்காவுக்கு அனுப்பி, பிறகு தமது கெமிகல் ஒர்க்ஸிலேயே ஜெனரல் மானேஜராக நியமித்தார். அவரையே என் காதலராகவும் கணவராகவும் எண்ணிப் பழகினேன். ஆனால் என்னை அவர் விரும்பி மணந்து கொள்ளவில்லை என்பது பிறகு தெரிந்தது....''

''இவ்வளவு நல்ல பண்புள்ள உங்களை ஏன் சரவணன் விரும்பவில்லை?''

''என்னையும் அவரையும் சிறிது ஒப்பிட்டுப் பார். சிவந்த மேனியும் அழகான முகமும், கம்பீரமான தோற்றமும் நிறைந்த அவர் எங்கே? கறுப்பாய், மிக மிகச் சாதாரண அழகியான நான் எங்கே? நான் அவரைப் பார்த்துக் காதலித்தது எவ்வளவு இயற்கையோ, அதைப் போல் அவர் என்னைப் பார்த்துக் காதலிக்காததும் இயற்கைதான். நான்தான் முட்டாள்தனம் செய்துவிட்டேன். நாம் காதலிக்கிறவரை மணந்துகொள்வதை விட நம்மைக் காதலிப்பவரை மணந்து கொள்வதுதான் புத்திசாலித்தனம். அந்தப் புத்திசாலித்தனம் எனக்கு இல்லாமல் போய் விட்டது. இருந்தாலும் உன்னால் அவர் மீண்டும் மகிழ்ச்சியோடு இருப்பதைக் காண நானும் மகிழ்ச்சியடைகிறேன்...''

''இல்லை... உங்களுடைய வாழ்வில் நான் குறுக்கிட மாட்டேன். ஒரு மனைவியின் கணவனைக் காதலிப்பது பாவம். நான் நாளையே இங்கிலாந்து திரும்பி விடுகிறேன்'' என்று நீரு எழுந்து நின்றாள்.

மீனாட்சி புன்முறுவலோடு அவள் கரங்களைப் பிடித்துத் தன் அருகே உட்கார வைத்துக்கொண்டாள்.

''என் அன்பே, நீரு! என் வாழ்வுக்கு ஏற்பட்ட குறுக்கீடாக நான் உன்னை நினைக்கவேயில்லை. அவர் என்னுடன் வாழவே மாட்டார் என்ற நிலை ஏற்பட்ட பிறகு, அவருக்கு வேறு யாராவது ஒருத்தி மனைவியாக வந்துதானாக வேண்டும் என்ற அவசியம் ஏற்பட்ட பிறகு அந்த வேறு யாரோ ஒருத்தி உன்னைப் போன்ற நல்லவளாக அமைந்தது உண்மையில் என் அதிர்ஷ்டம்தான், நீரு!''

''எனக்காக நீங்கள் உங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்ய வேண்டுமா?''

மீனாட்சி சிரித்தாள். ''தியாகமாவது? இருப்பதை விட்டுக் கொடுப்பதுதான் தியாகம்; இங்கே எனக்கு என்ன இருக்கிறது, விட்டுக் கொடுக்க? எனக்குக் கிடைக்காதது உனக்குக் கிடைக்கிறது. அவ்வளவுதான். இதிலே தியாகத்துக்கே இடமில்லை, நீரு!''

''உங்களிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன். ...! உங்களுக்கு அப்பாவின் சொத்து நிறைய இருக்கிறது! படிப்பு இருக்கிறது! எனவே, சோஷல் செக்யூரிடி இருக்கிறது. உங்கள் வாழ்க்கையை ஏன் வீணாக்கிக் கொள்ள வேண்டும்? நீங்கள் சரவணனை விவாகரத்து செய்துவிட்டு, உங்களை விரும்புகிற வேறொருவரை மணந்து கொண்டு.....''

மீரு உடனே சிரித்து விட்டாள்: ''பெண்கள் உள்ளங்களால் வாழ்பவர்கள். கணவராக ஒருவரை மனத்திலே வைத்துப் பூஜித்த பிறகு, அந்த இடத்திலே வேறொருவரை நினைக்கக்கூட முடியாதம்மா!''

மீனாட்சியின் வாதத்தை நீரு ஒப்புக் கொள்ளவில்லை.

''அதெல்லாம் அந்தக் காலத்தில் சரி. இப்பொழுது, பெண்களுக்குச் சுதந்திரமும் சம உரிமையும் சட்டப்படி கிடைத்திருக்கிறதே!''

''இருக்கலாம். ஆனால் கோவலனோடு வாழ்ந்த மாதவி சம உரிமை எண்ணம் கொண்டதால்தான், புகாரில் கோவலனை இழந்தாள்.''

நீரு ஆவலுடன் குறுக்கிட்டாள்: ''என்ன மாதவி சம உரிமை எண்ணத்தால் கோவலனை இழந்தாளா ?''

''புகார் கடற்கரையில், கோவலன் கானல் வரி பாடிய போது, அவன் வேறு யாரோ ஒரு பெண்ணிடம் காதல் கொண்டது போல் பாடுகிறானே என்பதை எண்ணித் தானும் வேறு ஒருவனுடன் காதல் கொண்டதுபோல் பாடியதால்தானே, கோவலன், 'என்ன இருந்தாலும் மாதவி கணிகைதானே' என்று நினைத்து அவளை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் வந்தான் ? கண்ணகி, கணவன் மீது வெறுப்புக் கொள்ளாதது மட்டுமல்ல: தன் கணவர் பிரிவுக்குக் காரணமான மாதவியைக்கூட வெறுக்காமல் வாழ்ந்தாள்.''

நீருவுக்கு இப்போது தெளிவாகியது : மாதவியைவிடக் கண்ணகி ஏன் கற்புக்கரசியாகப் போற்றப்படுகிறாள் என்பது.... ஐரோப்பாவில் அவளுக்கு ஏற்பட்ட சந்தேகத்துக்கு விளக்கம், தற்செயலாகவே கிடைத்து விட்டது — அதுவும் இன்னொரு கண்ணகியின் வாயிலாக!

மீனாட்சியின் குரோதமற்ற பேச்சையும், களங்கமற்ற முகத்தையும் பார்த்து, ஒன்றும் பேசத் தோன்றாமல் உணர்ச்சி வசப்பட்டு நின்றாள் நீரு.

''ஸிஸ்டர்! உங்களைப் போன்ற பெண் திலகங்கள் வாழ்கின்ற இந்தத் தமிழ் மண்ணிலே நான் கால் வைத்து நிற்பதற்கே வெட்கமாயிருக்கிறது.''

''நீரு ! திருமணம் என்பது, வெறும் உடலுறவுக்காக ஏற்படுகிற பந்தமல்ல : அது ஆத்மாக்களின் சங்கமம். பெண்ணும் ஆணும் ஆத்மாக்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வது அல்ல: ஆணுக்குத் தன் ஆத்மாவையே பெண் சமர்ப்பணம் செய்யும் புனிதமான வாழ்க்கை அது.'' — நீருவுக்கு வலியுறுத்திச் சொல்வதற்காக இதை ஆங்கிலத்திலே சொன்னாள் மீனாட்சி.

சரவணனுக்கும் நீருவுக்கும் திருமணத்தை நடத்தி வைத்துவிட்டு, திருச்சிக்குப் புறப்பட்டு விட்டாள் மீரு, ஆசிரியையாகப் பணி பார்க்க.

மு.கு:- ஜாக்கிரதை! இந்தக் கதையின் கடைசியில் ஒரு 'ஷாக்' இருக்கிறது.

தினந்தோறும் எதிரில் இருக்கும் மைதானத்தில் ஸ்கூட்டர் கற்றுக் கொள்ளும் ஒல்லியான, சிவப்பான, உயரமான வாலிபருக்கு,

வணக்கம் பல.

கொஞ்ச நாட்களாகத் தினமும் மாலை ஐந்தரை, ஆறு மணிக்கு எனக்கு ஓர் அரிய காட்சி தென்படுகிறது. ஏதோ ஒரு பெரிய 'விமானம்' ஓட்டுவது போல, தாங்கள் ஒரு படு பழசான ஸ்கூட்டருடன் அடாத பாடுபடுவதும், கூட ஒரு நண்பர், ''மெள்ள மெள்ள! கியரை மாற்று! த்ராட்டில்! த்ராட்டில்!'' என்று அலறியபடியே அறிவுரை தருவதுமான காட்சியைத்தான் சொல்கிறேன். இன்னும் சில நாட்களில், விடியற்காலை வேளையில் வேறு, சத்தம் காதைத் துளைக்கிறது. என் தூக்கம் கெட்டு, ஏதோ பயங்கரச் சொப்பனம் கண்டது போல் அலறியடித்துக் கொண்டு எழுந்து பார்த்தால், தாங்கள் வண்டி விடும் 'ஸீன்' காட்சியளிக்கிறது.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்துத்தான் இந்தக் கடிதம் எழுதுகிறேன். என்னுடைய சில கேள்விகளுக்கு முதலில் விளக்கமாகப் பதில் சொல்லுங்கள் :

1. ஏன் இவ்வளவு சத்தம் போடுகிறது, உங்கள் ஸ்கூட்டர் ?
2. வேறு இடம் கிடைக்கவில்லையா, என் வீட்டு எதிரில் உள்ள மைதானத்தைத் தவிர ?
3. ஸ்கூட்டர் கற்றுக் கொள்வதற்கு இத்தனை நாட்களா! இவ்வளவு சிரமமா! 'என்று தணியும் உங்கள் ஸ்கூட்டர் ஒலி'கள் !

இனியும் நீங்கள் முன் போலவே தொந்தரவு கொடுத்துக் கொண்டிருந்தால் போலீஸ் கமிஷனருக்குப் புகார் செய்ய வேண்டியிருக்கும், ஜாக்கிரதை !

உண்மையுள்ள உமா

* * *

உ. உ.வுக்கு,

தங்கள் கடிதம் கண்டேன். கோபம் மிகக் கொண்டேன்.

எதிரேயிருக்கும் மைதானம் நகரசபைக்குச் சொந்தமானது என்று அறிகிறேன். அது பொது இடம்தானே? அங்கே ஸ்கூட்டரும் ஓட்டலாம்; 'பைக்'கும் விடலாம்; காரும் கற்கலாம். நீங்கள் யார் கேட்க ?

மற்றச் சிறு கேள்விகளுக்கு என் பதிலும் விளக்கமும் :

எனக்குப் புது வண்டியொன்று (வெஸ்பா) 'அலாட்' ஆகியிருக்கிறது. அதை ஓட்டும் முன்னால் நன்றாகப் பழக்



கம் ஏற்பட வேண்டுமென்ற காரணத்தால்தான், என் நண்பனின் பழைய வண்டியில் கற்றுக் கொள்கிறேன். அதன் சத்தத்துக்கு நானா பொறுப்பு?

"இத்தனை நாட்களா?" என்றும் கிண்டலாகக் கேட்டிருக்கிறீர்கள். என்னைப் பொறுத்தமட்டில் இது பெரிய காரியம்தான்—குழந்தை தவழுவதும், பிடித்துக் கொண்டு நிற்பதும், பிறகு நடப்பதும், ஓடுவதும் அதன் தாயாருக்குப் பெரிதாயிருப்பது போல! இப்போதுதான் நான் தவழும் நிலையை எட்டியிருக்கிறேன். ஒருத்தர் துணையின்றி, 'தானாக நடக்க' இன்னும் பல நாட்களாகலாம் என்பதையும் முன்கூட்டியே தெரிவித்துக் கொள்கிறேன். அது வரைக்கும் நீங்கள் கேட்கும் சத்தம் ஓயாது!

பணிவுள்ள பத்மநாபன்

பின் குறிப்பு: தங்கள் கடிதத்தை இன்னொரு தரம் படித்த போது பாரதியார் பாடலில் மோகம் உள்ளவரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அவர் பாணியில் சொல்லப் போனால், 'ஸ்கூட்டர் ஒன்றைக் கை பிடித்தே, அதன் ஓட்டம் யாவினும் இணை



கொடுப்பதுதான்' என்னைப் போன்ற புதுமை ஆண்களின் ஜபம்! ஞாபகம் இருக்கட்டும்!

* * *

ப.ப.வுக்கு உமா எழுதிக் கொண்டது.

தங்கள் கடிதம் பார்த்தேன். விஷயங்கள் அறிந்தேன்.

சரி. இப்போது 'குழந்தை' எப்படியிருக்கிறது? பிடித்துக் கொண்டு நிற்கும் பருவத்தை அடைந்து விட்டதா இல்லை, தவழ்ந்து கொண்டேதான் இருக்கிறதா?

உங்களுக்கு இன்னொரு விஷயம் தெரியுமோ? குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவது போல், வெறுமனே ஆளில்லாத சமயம் பார்த்து மைதானத்தில் ஓட்டினால் மட்டும் போதாது மிஸ்டர்! வெளியே வந்து, தார் ரோட்டிலும் மவுண்ட் ரோடு ஆறு வழிப் பாதையிலும் ஓட்டினால்தான் புதுமை ஆண் என்று சொல்லிக் கொள்ளலாம். தற்போதைய புள்ளிவிவரப்படி, சென்னை நகரத்தில் மட்டும் 40,000 வண்டிகள் ஓடுகின்றனவாம். அவைகளுள் 'சேர்ந்து' போவதற்குத் தங்கள் ஸ்கூட்டருக்குத் தைரியம் இருக்கிறதா? மேலும் இன்னொன்று —

ஸ்கூட்டர் ஓட்டுவதற்கு லைசென்ஸ் வேறு வாங்க வேண்டும். அது கிடைப்பது இலேசான காரியமல்ல. தீக்குளிப்பது போல; பரீட்சை உண்டு. தெரியுமோ?

விஷயங்கள் பல அறிந்த உமா

பின் குறிப்பு: பத்துக்குள் எட்டு போடுவது என்றால் தெரி

உமாவுக்கு,

தங்கள் கடிதாசைப் படித்ததும் ஏதோ கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போன்ற உணர்வு தோன்றியது. ஒன்றும் புரியவில்லை!

'டெம்பரரி, 'எல் போர்ட்' வைத்துக் கொண்டே காலம் ஓட்டலாம் (என் ஸ்கூட்டரையும்தான்) என்று என் நண்பன் சொன்னானே? அவ்விதம் ஓரிரண்டு ஆண்டுகள் ஓட்டியவுடன் தானாக நிரந்தர லைசென்ஸ் தந்து விடுவார்கள் என்றல்லவா கேள்விப்பட்டேன்! ஆனால், நீங்கள் ஏதோ பரீட்சை என்று பயமுறுத்துகிறீர்களே? ஆபீஸ் இண்டர்வ்யூவுக்கே நடுங்கினவன் நான். போலீஸ் ஆபீசில் பல பேர் முன்னிலையில் 'டெஸ்ட்' என்றால்? நினைத்துப் பார்க்க நடுக்கமாயிருக்கிறதே?

அப்புறம் ஏதோ விடுகதை போட்டிருக்கிறீர்களே, 'பத்துக்குள் எட்டு' என்று?... அப்படி என்றால். இதற்கும் ஸ்கூட்டர் விடுவதற்கும் என்ன சம்பந்தம்?

ஸ்கூட்டரை விற்று விடலாமோ என்று யோசித்துக் கொண்டிருக்கும்,

குழப்பத்துடனும்
கலங்கிய மனத்துடனும்
பத்மநாபன்

ஹ ஹ் ஹா! அப்படி வாருங்கள், வழிக்கு மிஸ்டர் பத்மநாபன்!

ஸ்கூட்டரை விற்றுவிடப் போகிறீர்களா! விற்றீர்களானால் போலீஸ் லாக்கப்புக்குள் தள்ளி விடுவார்கள். வண்டி வாங்கின இரண்டு ஆண்டுகளுக்குள் வேறொருவருக்கு விற்பது சட்டப்படி குற்றம்; தெரியுமோ?

நேற்றுத்தான் உங்களை நட்ட நடு ரோட்டிலேயே ஸ்கூட்டர் ஓட்டும்போது பார்க்க நேர்ந்தது. (குழந்தை பிடித்துக் கொண்டு நிற்கிறதாக்கும்!) ஒரு சின்னத் திருப்பம் திரும்புவதற்குள் என்ன பாடுபட்டீர்கள்! நீங்களாவது, பத்துக்குள் எட்டுப் போடுவதாவது! நிரந்தர லைசென்ஸ் இந்த ஜன்மத்தில் உங்களுக்குக் கிடைக்காது.

'பத்துக்குள் எட்டு' என்பதன் விளக்கம்:

போலீஸ் அதிகாரி ஒருத்தர் நீங்கள் நிற்கும் இடத்திலிருந்து பத்தடி தள்ளி இருப்பார்.

காட்ட வேண்டும்.—ஸ்கூட்டர் சக்கரங்களினுலேயே! முடியுமோ? பரீட்சையில் தேற முடியுமோ? யோசித்துப் பாருங்கள்.

உங்கள் நலனில் அக்கறையுள்ள உமா.

பி.கு.: உங்கள் நிலைமை பரிதாபகரமானது தான். எனக்கும் மிகவும் பரிச்சயமான ஒருத்தர் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு ஓட்டச் சம்மதித்திருக்கிறார். அதாவது உங்கள் பெயரில் அவர் ஓட்டுவார்-லில் காலத்துக்கு! கூட ரூபாய் ஐந்நூறும் தருவார். சம்மதமா?

ரிமைண்டர் கடிதம்

மிஸ்டர் பத்மநாபன்,

என்ன பதிலையே காணோம்? ஸ்கூட்டரைத் தந்துவிடுகிறீர்களா அல்லது போன வாரம் நடந்த சம்பவத்தை அவிழ்த்து விடட்டுமா? என்ன சொல்கிறீர்கள்?

அந்தக் காட்சியை நான் காண நேர்ந்தது போன புதனன்று. ஸ்மித் ரோட்டில் நீங்கள் ஸ்கூட்டரில் 'தளர்நடை பயின்று' கொண்டிருந்தீர்கள். பக்கத்தில் வெகு வேகமாக ஒரு ஃபியட் கார் மோதுகிறதுபோல வந்த சமயம் நீங்கள் பயந்து போய் ஸ்கூட்டரை இடதுபுறம் திருப்ப, தற்செயலாக அங்கு வந்த சிறுவன் மேல் மோத — நீங்களும் உங்கள் நண்பரும் எப்படியோ நிலைமையைச் சமாளித்து விட்டீர்களே?

அந்தச் சிறுவன் போலீசுக்குக் 'கம்ப்ளெண்ட்' எழுதினால் என்ன ஆகும் தெரியுமோ? நினைவிருக்கட்டும். எதற்காக இந்த வம்பெல்லாம் உங்களுக்கு? பேசாமல் ஸ்கூட்டரைக் கொடுத்து விடுங்கள்.

உங்கள் பதிலை எதிர்பார்க்கும் உமா.

உமாவுக்கு.

நான் அன்று ஸ்மித் ரோடில் போனதும், சிறுவன் மீது ஏற்றிக் காயப்படுத்தியதும் உண்மைதான். அன்று முழுதும் பயங்கரக் கனவுகள் பல கண்டு தூக்கமே வராது படுக்கையில் புரண்டதும் வாஸ்தவம்தான். யாருமே அதைக் கவனிக்கவில்லை என்றல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்?

இப்போதெல்லாம் நான் ஸ்கூட்டர் விடும் போது ஸ்கூட்டரைவிட என் இதயம் அடித்துக்கொள்ளும் ஓசையே அதிகம். அதுவும் உங்கள் கடிதத்தைக் கண்ட பிறகு, இதயம் இன்னும் வேகமாக (60 கி.மீ. வேகத்தில்) படபடவென்று அடித்துக் கொள்ளுகிறது.

ஸ்கூட்டரைத் தந்துவிடச் சம்மதந்தான். யார் அந்தத் தெரிந்தவர்? அழைத்து வாருங்கள்; 'டீலை' முடித்துவிடலாம்.

பத்மநாபன்.

ஸ்ரீ பத்மநாபன் அவர்களுக்கு,

என்னை மன்னித்துவிடுங்கள். மன்னித்தேன் என்று வாயாரச் சொன்னால்தான் என் மனம் ஆறும். நீங்கள்தான் எனக்கு எப்படிப்பட்ட உதவி செய்திருக்கிறீர்கள்!

நேற்று வீட்டில் நாங்கள் எல்லோரும் ஊரிலிருந்து வந்திருக்கும் அத்தானுடன் சினிமாவுக்குப் போனோம் — வீட்டைப் பூட்டிக் கொண்டு. அப்போது என்ன ஆயிற்று தெரியுமா? திருடன் ஒருத்தன் வந்திருக்கிறான். ஜன்னலைத் திறந்து அதன் வழியாகக் கம்பியைச் செருகிப் புத்தம் புது ஸ்லாக் ஷர்ட், டெரிலின் பாண்ட் (என் அத்தானுடையவை) நான் அவசரத்தில் வெளியே எடுத்துப் போட்ட 'ரிவர்ஸிபிள்' புடவை, இன்னும் கைக்கு (அல்லது கம்பிக்கு) கிடைத்தவைகளைச் சுருட்டி ஓடிவிட யத்தனித்திருக்கிறான். ஆனால் அவன் போதாதவேளை அந்தச் சமயம் பார்த்து ரோட்டில் வந்த ஒரு ஸ்கூட்டர் தெருவோடு போன மாட்டின் மீது மோத, அந்த மாடு மிரண்டுபோய்த் திருடன் மேல் பாய்ந்து விட்டது! உடனே கூட்டத்தினர் சேர்ந்து அவனைப் பிடித்துப் போலீசில் ஒப்படைத்து விட்டார்கள். மாலையில் எங்கள் வீட்டுக்குப் போலீசார் வந்து தகவல் சொன்னவுடன்தான் விஷயம் புரிந்தது. அந்த ஸ்கூட்டரை ஓட்டி வந்தது தாங்கள்தானாமே! என் மனப்பூர்வமான நன்றி மிஸ்டர் பத்மநாபன்! உங்களால்தானே விலை உயர்ந்த பொருட்கள் திருட்டுப் போகாமல் இருந்தன?

உங்களைப் போய் நான் இதுவரை பயமுறுத்தி வந்தேனே? 'என்ன புதிர் இது' என்று விழிக்காதீர்கள். விளக்கம் இதோ:

என் அத்தானை நான் காதலித்து வருகிறேன். கல்யாணம் செய்துகொள்ள மட்டும் ஒரு நிபந்தனை போட்டேன். புது ஸ்கூட்டர் வாங்கி என்னையும் அதில் ஏற்றிச் செல்ல வேண்டும் என்பதே அது. இப்போது அது கிடைக்கிற வழியாயில்லை அவருக்கு. உங்களைப் பார்த்ததும் நீங்கள் பயந்த சுபாவம் உள்ளவர் என்று அறிந்து, பல விஷயங்களைக் கொஞ்சம் மிகைப்படுத்திச் சொல்லி உங்களை மேலும் பயமுறுத்தினேன். எல்லாவற்றுக்கும் என்னை மன்னித்து விடுங்கள்.

உங்களை என்றும் மறவாத உமா

பி.கு.: அத்தானுக்கும் எனக்கும் கல்யாணம் நடக்கவிருக்கிறது - தை மாதத்தில். (அவர் இப்போது மோட்டார் சைக்கிள் வாங்கிவிட்டார்) நீங்கள் அவசியம் வரவேண்டும் கல்யாணத்துக்கு.

மிஸஸ் ஆகப்போகும் மிஸ் உமாவுக்கு.

நானும் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். நாலைந்து நாட்கள் முந்தி போலீஸ்காரர் என் வீட்டுக்கு வந்துவிட்டுப் போனார். என்ன சேதி தெரியுமோ? அந்தத் திருடன் மிகப் பொல்லாதவனாம். அவனைப் பிடித்ததன்மூலம் பல துப்புக்கள் கிடைத்திருக்கின்றனவாம். எனக்குத் தனியாகச் சன்மானம் கிடைக்கப் போகிறதாம்! இதைவிட வேறென்ன பாக்கியம் வேண்டும் எனக்கு?(என் ஸ்கூட்டருக்கு?)

ஒரு தன்னம்பிக்கையும் புத்துணர்ச்சியும் இப்போது எனக்குத் தோன்றிவிட்டன. அந்த உற்சாகத்தில் நேற்று யார் 'பின் பலமுமின்றி' மவுண்ட் ரோட் நாற்சந்தி வரைக்கும் ஸ்கூட்டர் ஓட்டிவிட்டேன். (குழந்தை தானாகவே நடக்க ஆரம்பித்து விட்டது!) உங்கள் கல்யாணம் எங்கு நடந்தாலும் சரி, ஸ்கூட்டரிலேயே என் மனைவியையும் உடன் ஏற்றிக் கொண்டு அவசியம் வருகிறேன்.

நன்றியுடன் பத்மநாபன்.

* * *

பி.கு.: கோக்கி என்ன என்கிறீர்களா? பிரமாதமாக எதுவுமில்லை! கடிதக் கதை என்றால் காதலர்களாகத்தான் இருக்க வேண்டும், அவர்கள் கல்யாணத்தில்தான் (கதை) முடிய வேண்டும் என்ற நியதி இருக்கிறதா என்ன?


RENEWED GROWTH
WITH
DALMIA
REFRACTORIES
உஷ்ணத்தின் அடிப்படையிலே இயங்கும் தொழிற்சாலைகளுக்கு "ரிஃப்ராக்டரீஸ்" (சுட்ட கற்கள்) இன்றியமையாததாக இருப்பதால் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நமது தொழில்களுக்கு "ரிஃப்ராக்டரி"களின் தேவையும் பெருகி வருகிறது.
ஆசியாவிலே "ரிஃப்ராக்டர்" உற்பத்தியாளர்களில் முதல் ஸ்தானம் வகிக்கும் டால்மியாவின் இரண்டு நவீன தொழிற்சாலைகளில், சுட்ட கற்கள், ரசாயன முறையில் இறுக்கப்பட்ட கற்கள், மித, அதிக, மிக அதிகமான உஷ்ணத்தை தாங்கவல்ல செங்கற்கள்; மணற் சத்துள்ள செங்கற்கள், கையனைட், ஸிலிமினைட் மற்றும் திராவகங்களைத் தாங்கக்கூடிய செங்கற்களையும் தயாரிக்கிறார்கள். வாடிக்கையாளரின் விசேஷ தேவைக்கேற்பவும் தயாரிக்கிறார்கள்.
ஒரிஸா சிமெண்ட் லிமிடெட்
ராஜ்கங்பூர், ஒரிஸா
பூரண விற்பனை ஏஜண்டுகள் :
M/s. S. G. சப்ளை ஏஜன்ஸி
48-D, முக்தாராம் பாபு தெரு, கல்கத்தா
உலைக் கற்கள் தயாரிப்பவர்கள் :
டால்மியா ஸெராமிக் இண்டஸ்ட்ரீஸ்
டால்மியாபுரம் (தமிழ்நாடு)
M. O. 4, ஸிந்தியா ஹவுஸ், புதுடில்லி-1
DALMIA ENTERPRISES
GOVAN/112

உரோமத்தைத் துச்சமாக எண்ணுநீர். உரோமத்தின் திறன் அற்புதமானது. ஓர் உரோமத்தின் நீளமும் பரும னும் உள்ள காரியக் கம்பி, துத்தநாகக் கம்பி, அலு மினியக் கம்பி, பிளாட்டினம் கம்பி ஆகியவை தாங்கக் கூடிய எடையைவிட உரோமம் அதிக எடையைத் தாங்க வல்லது !

தகவல்: பாகன்

வெந்நீர்ப் பாசனம்



நீராவியால் இயங்கும் மின்விசை உற்பத்திப் பொறிகள் (ஜெனரேட்டர்கள்) உள்ள மின்விசை நிலையங்கள், பெரும் அளவுகளில் சூடான கழிவுநீரை அருகில் உள்ள ஏரிகள் அல்லது ஓடைகளில் கொண்டு போய்ச் சேர்க்கின்றன. இது, நீர்வாழ் உயிரினங்களுக்கு ஊறு செய்கிறது. ஆனால் அமெரிக்காவில் தற்பொழுது நடை பெறும் சில சோதனைகளில் இந்தக் கழிவுச்சுடுநீரில் ஒரு பகுதியை வெந்நீர்ப் பாசனத்துக்குப் பயன்படுத்துகிறார்கள். ஆம், வேளாண்மைக்குத்தான்! மேலிருந்து தெளிக்கப்படும்வெந்நீர், பயிர் வளர்வதற்குத் துணை செய்வதுடன் பனிபிறல் பழமரங்கள் பட்டுப் போவதைத் தடுக்கவும் செய்யும் என்று காட்டுவதற்கு 475,000 டாலர் செலவில் ஆரிகான் மாநிலத்தில் உள்ள யூஜின் நகரில் தண்ணீர் மின்விசை வாரியம், ஒரு மூன்றாண்டுச் சோதனைத் திட்டம் வகுத்துள்ளது. உள்ளூர்க் குடியானவர்களின் உதவியுடன் இந்தத் திட்டம் ஏற்கனவே பல வெற்றிகள் கண்டுள்ளது.

மின்சாரப் பாசனம்

அரிகான் அரசுப் பல்கலைக் கழகத்தில் நிலத்தில் பதித்த மின்விசைக் கேபின் கம்பிகளின் உதவியுடன் வெப்பப்படுத்திய நிலத்தில் பயிர்ச்சாகுபடி செய்கிறார்கள். சாகுபடி காலத்தை நீடிக்க முடியுமா? அதன் மூலம் விளைச்சலைப் பெருக்க முடியுமா என்று கண்டறிவதே நோக்கம்.

--யு.எஸ்.ஐ.எஸ்.

விஞ்ஞானச் செய்தி



"என்னுடைய செருப்புக்குப் பாலிஷ் போடுவது, என் சட்டைகளைத் துவைப்பது, எனக்குச் சமையல் செய்து போடுவது யார் தெரியுமா? ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி" என்றார் நிக்குரிசி சுகுமாரன் நாயர். அவரது தங்கை ஓர் ஐ. ஏ. எஸ். அதிகாரி !

பிலிம் பேர் -- பாபு

சோவியத் யூனியனில் உள்ள பள்ளிகளில் மாணவர்களுக்குப் படிப்போடு, 'செஸ்' ஆட்டமும் ஆடக் கற்றுத் தருகிறார்கள்! ஆம், 'செஸ்' ஆடுவதால் மூளை தீவிரமடைந்து, கணக்கு நன்றாகப் போட முடியும் என்று இவர்கள் நம்புகிறார்கள்! அதனால்தான் பிள்ளைகளுக்கு வகுப்பிலேயே 'செஸ்' ஆட அனுமதி அளிக்கிறார்கள் !

ஆதாரம்: சோவியத்யூனியன்

தகவல்: சம்பத்குமாரி



காந்திஜி 'யங் இந்தியா' என்ற ஆங்கில இதழை ஆரம்பித்ததும், அதை ஆங்கிலத்திலே நடத்த வேண்டியதற்குக் காரணம் கூறும் போது "இப்பத்திரிகையை மதராஸ் மாகாணத்திலுள்ளோர் படிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அதற்காகத்தான் ஆங்கிலத்தில் நடத்துகிறேன்" என்று விளக்கம் கூறினாராம்.

ஆதாரம்: 'மைஇந்தியா'

-தகவல்: "முபீன்"

'கன்னி முயற்சி' என்பது ஆங்கிலத்தில் வழங்கும் Maiden Effort என்பதன் தமிழாக்கம்தான். இம்மாதிரிச் சொல்லாட்சி தமிழில் முன்னர் இருந்ததில்லை என்று சிலர் நினைக்கின்றனர். இது தவறு. கண்ணப்பனுடைய முதல் வேட்டையை, கன்னி வேட்டையென்று சேக்கிழாரும், இராமனுடைய முதல் போரைக் கன்னிப் போர் என்று கம்பரும் குறிப்பிடுகிறார்கள்.

"கோடை" -- (பி. ஸ்ரீ. சொல்லுவது)

மஞ்சள் காணி

ஏ.எஸ்.ராகவன்

இதைச் சுந்தாச்சு எதிர்பார்த்தவர் போல் உரக்கச் சிரித்தார். "சரிதாண்டா, வீம்பு பிடிக்காமல் விட்டுத் தொலே... நிலத்தை என் பேச்சையும் கேளாமல் வாங்கித் தொலைச்சுட்டான்...அப்பவே தலையாலே முட்டிண்டேன். கேட்கல்லே... இப்ப வந்து என் கழுத்தை அறுக்கிறான்....." என்றார்.

துரைசாமி ஒன்றும் சொல்லவில்லை. சுந்தாச்சு மாமாவிடம் அவனுக்கு எல்லையற்ற மதிப்பு உண்டு. அவர் வார்த்தையை இதுவரை மீறியதில்லை. ஆனால் இப்போது நிலைமை வேறு. அவன் குத்தகைக்கு எடுத்திருந்த நிலத்தை வெங்காச்சு விலை பேசி வாங்கி விட்டார், ஒன்றுக்கு இரண்டாக உயர்த்தி. அவரிடம் காசு இருக்கிறது. அதை என்ன செய்வதென்று அவருக்குத் தெரியவில்லை. அவனை மதித்து இந்த விவகாரத்தில் ஆலோசித்தே இதை அவர் செய்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் கோர்ட் உத்தரவுடன் அவனை வெளியேற்றிவிட முஸ்தீபு செய்கிறார் அவர். இதைத் துரைசாமியால் பொறுக்க முடியாது. அவன் என்ன இலேசுப்பட்டவனா? கண்ணை அசைத்தால், ஐம்பது ஆட்கள் சட்டியும் கம்புமாகத் தயாராக இருக்கிறார்கள், அவன் வசம். ஊருக்குள்ளே துரைசாமிக்கு நல்ல செல்வாக்கு உண்டு. திருவாரூக்கு வருகிற எந்த மந்திரியானாலும் அவனுக்கு ஆள்

வாய்க்கால் மேட்டிலிருந்து சுந்தாச்சு இறங்கி வரப்பினூடே நடக்கிறார்.

வெய்யில் ஏறி விட்டது. கிருகிருவென்று. சுள்ளென்று உறைக்கிறது உடம்பில். காலையில் தலையில் சுற்றிய மூண்டாசை இன்னமும் அவர் அகற்றவில்லை. அந்த வரப்பின் சேறு படிந்த மேட்டிலே சர்க்கஸ் வீரனைப்போல் அவர் நடப்பது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. பின்னே இருக்காதா? கொஞ்ச வயதா, குறைந்த வயதா? எழுபதைத் தாண்டியவர் ஆயிற்றே. சுந்தாச்சு என்கிற சுந்தரராஜாச்சாரியார்!

நீங்கள் ஒரு பத்திரிகை நிருபராக இருந்து, அவருடைய வயதை மீறிய இளமைக்கு என்ன காரணம் என்று அறிய விரும்பினீர்களானால், மாமா கூறுகிற பதில் இதுதான். 'எல்லாம் எங்கள் ஊர் புஷ்கரணி தீர்த்தத்தின் மகிமை. அதிலே முழுகிப்பாருங்கோ... பாவம் தொலையும்... இளமை விருத்தியாகும்.'

அந்தப் புஷ்கரணி — கோயிலுக்கு எதிரிலே திருவாரூர்க் கமலாலயம் போலப் பரந்து கிடக்கிறதே, அதுதான் — அவரைப் பொறுத்த வரை மானஸரோவர்!

மாமா மூலைக் கொல்லையருகே வந்துவிட்டார். நடையை இப்போது நிதானமாகவே போடலானார். அதற்குக் காரணம் இருந்தது. எதிரே துரைச்சா — துரைசாமி — வந்து கொண்டிருந்தான். அவனிடம் அவருக்குக் காரியம் இருந்தது.

"பயலே, நானே உனக்கு ஆள் விடணும்னு இருந்தேண்டா..நீயே வந்துட்டே" என்றார்.

"என்ன விஷயம்,மாமா?" என்று கேட்டான் அவன்.

"ஏண்டா, உன் வயசுக்கு ஒத்தவர்களோட நீ கட்டி ஆடினால் அது நன்றாயிருக்குமா, என்னைப் போல் ஆற்றங்கரை போனவர்களோட போராடுறது அது நன்றாயிருக்குமா?... அந்த வெங்காச்சு வந்து மூக்காலே அழுறான்...." என்றார் அவர்.

துரைசாமிக்கு முகம் சிவந்து விட்டது. "மாமா! இதிலே நீங்க தலையிடாதீங்கோ" என்றான் பட்டென்று



அருப்பி ஒரு வார்த்தை பேசாமல் போகிறதில்லே. நேற்று முன் தினம்கூட டி. பி.யிலிருந்து ஆள் வந்திருந்தான்.

கந்தாச்சு தொடர்ந்தார். ''இதோ பாரு. ஊர் நிலவரம் தெரியாமல் வெங்காச்சு எண்ணெயிலிட்ட அப்பளம் மாதிரிக் குதிக்கிறான். கால மெல்லாம் வடக்கே இருந்துவிட்டு வந்தவன்தானேடா அவன்? வெள்ளேக்காரன் கிட்டே வேலே பார்த்து, கெடுபிடி பண்ணியே பழகிட்டவன் தானேடா?...'' குரலைச் சற்றுத் தணித்துத் துரைசாமியின் அருகே நெருங்கினார் கந்தாச்சு. ''எனக்கு இதிலே ஏன் அக்கறை தெரியுமோடா, பயலே?.... அந்த ஜானுக் குட்டிக்கு மஞ்சக் காணியாக இந்த அரைக்காலே விசத்தை எழுதி வைக்கப் போகிறான் வெங்காச்சு. அதிலே போய் நாம் போராட வேண்டாமென்னுதான் நான் உனக்குச் சொல்றேன்.''

துரைசாமி தலையை நிமிர்த்தினான்.

கந்தாச்சு மிகுந்த ஆவலோடு அவனையே பார்த்தார்.

''மாமா, நீங்க சொல்றதுக்காக விட்டுக் கொடுக்கிறேன்.... ஆனா எனக்கு நஷ்டஈடு தந்துவிட வேண்டும்'' என்றான் அவன்.

''கட்டாயம்.... ஊர் வழக்கம் அதுதானே? தரச் சொல்றேன்டா, பயலே....!'' என்றார் கந்தாச்சு.

''நல்லது மாமா.... நான் வரேன்.''

அதற்கு மேல் கந்தாச்சு வரப்பின் மீது நடக்கவில்லே; ஓடினார். துரைசாமி இவ்வளவு விரைவில் மசிவான் என்று அவரே எதிர்பார்க்கவில்லே.


குளித்துவிட்டு ஈரவேஷ்டியுடன் கோயிலுக்குள் நுழைந்தவர் பெருமாளைச் சேவித்து விட்டு வீடு நோக்கித் திரும்பினார்.

வெங்காச்சு திண்ணையில் உட்கார்ந்திருந்தார். அவருடைய இயற் பெயர் வெங்கடாச்சாரி. இந்த ஊரில் எல்லாப் பெயர்களுமே வழக்கில் 'ச்சு'வாகி விடுகின்றன.

''துரைச்சாமியைப் பார்த்தேன்டா.......சரின்னு சொல்லிவிட்டான்....'' என்றார் கந்தாச்சு.

''உம்... உம்....'' என்றார் அவர்.

''நஷ்டஈட்டைக் கொடுத்துக் காரியத்தை முடித்துக் கொள்.''



வெங்காச்சு சிரித்தார்.

''என்னடா, சிரிக்கிறே ?''

'' கோர்ட்டிலே உத்தரவு வாங்கி யிருக்கேன்டா, உத்தரவு.... அவனுக்கு நஷ்டஈடு கொடுக்க வேண்டிய அவசியமில்லே. தெரிந்ததா ?'' என்றார் வெங்காச்சு.

''அப்படியா ?''

''பின்னே என்ன? மயிலே, மயிலேன்னா இறகு போட்டுவிடுமா ?''

கந்தாச்சு ஈர வேஷ்டியைக் கொடியில் உலர்த்தினார். உலர்ந்த வஸ்திரத்தை எடுத்துப் பஞ்ச கச்சம் வைத்துக் கட்டிக் கொண்டார். திருவாராதனையை முடித்து விட்டுச் சாப்பிட உட்கார்ந்தார்.

'' உங்களுக்கு ஏன் வீண் பொல்லாப்பு ? சொன்னாலும் கேட்க மாட்டேன்... கெடறதெல்லாம் உங்களால்தான்னு பக்கத்து வீட்டுக்காரர் குதிக்கிறார்'' என்றாள் அவருடைய சகதர்மிணி.

''அப்படியா?''

''அந்தத் துரைச்சாவோட அவரே முட்டிக்கட்டும், மோதிக்கட்டும். நீங்க யார் கட்சிக்கும் வக்காலத்து வாங்க வேண்டாம்'' என்று எச்சரித்தாள் அவர் மனைவி.

''ஓஹோ....!''

'' என்னவோ எனக்குத் தோன்றியதைச் சொன்னேன் !''

''ஏண்டா, நேத்து வரைக்கும் என்னிடம் வந்து ராசி பண்ணுறுன்னு இவன்தானே தொங்கினுன்? இப்போ உத்தரவு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன் என்கிறுனே, இது என்ன பித்தலாட்டம்? எனக்கு வேறே வேலே கிடையாதா? அந்தத் துரைச்சாகிட்டே இவனுக்காக, பல்லேக் காண்பிச்சேண்டி இன்னிக்கு.... சரி... சரி... பார்த்துக் கொள்ளட்டும். நான் துரைச்சாவிடம் சொல்லிப்பிடறேன்..... என் பேச்சு எடுபடவில்லேடா, நீயே பார்த்துக் கொள் என்று.....''

சுந்தாச்சு வாசல் திண்ணைக்கு வருவதற்குள் அங்கு வழக்கமான கூட்டம் கூடிவிட்டது. சாம்பு வாத்தியார், புரோகிதம் அப்புச்சா, ரிஜிஸ்தார் ரெங்கண்ணு, கனபாடிகள் எல்லோரும் சீட்டுக் கட்டுடன் 'கவா, கவா' என்று காத்திருந்தார்கள். இப்போது ஆரம்பித்தால் சூரியன் மறைகிற வரையில் கச்சேரி ஓயாது.

நேரமாக ஆக ஆட்டம் களை கட்ட ஆரம்பித்தது.

பக்கத்து வீட்டு வாசலில் வில் வண்டி வந்து நின்றது. வெங்காச்சு கோட்டை மாட்டிக் கொண்டு, அங்கவஸ்திரம் தரையில் புரள, வெற்றிலேப் பெட்டி சகிதம் ஏறிக் கொள்ளவும், வண்டி ஜல் ஜல் என்று புறப்பட்டது.

'' எங்கேடா போறுன் வெங்காச்சு ?'' என்று அப்புச்சா கேட்டார்.

''அவன் எங்கே போனுல் உனக்கென்ன ? ஆடுதன் ராணி இறங்கியிருக்கு.... ஜாதி இருந்தால் போடு. இல்லாவிட்டால் வெட்டு'' என்றுர் ரெங்கண்ணு.

''அதுக்கில்லே, ரெங்கண்ணு.... ஏதோ காதிலே விழுந்தது. அந்த அஞ்சு மா நிலத்தை வாங்கியிருக்கானே இல்லேயோ, அதுக்காக கோர்ட் உத்தரவு இவன் வாங்கப் போக, துரைச்சா 'ஸ்டே' வாங்கி விட்டாளும்....'' என்றுர் அப்புச்சா.

''நெஜமாவா ?'' என்று துள்ளிஞர் சுந்தாச்சு.

''ஆமாம், மாமா....''

சரி.... சரி... அவருடைய கடமை முடிந்து விட்டது. துரைச்சாவிடம் சொல்லு..... சொல்லு என்று வெங்காச்சு தொண தொணத்ததற்கு அவரும் சொன்னுர். அவனும் சரி என்று சொன்னுன். அதற்குமேல் படியாமல் போனுல் அவரா பொறுப்பு?

இருட்டுகிற நேரத்தில் வில் வண்டி திரும்ப வந்தது. வெங்காச்சு இறங்கிஞர். அங்கவஸ்திரத்தால் முகத்தைத் துடைத்த வாறே குறடு ஏறிஞர். நடையில் மிடுக்கைக் காணேம்.

''ஆட்டத்தை நிறுத்துவோமா?'' என்றுர் அப்புச்சா.

''நிறுத்தாம வேற வழி ? நீ ஊருக்குள்ளே போய், தகவல் சேகரிக்க வேண்டாமோ?... வெங்காச்சு எங்கே போனுன், விஷயம் என்ன ஆச்சுங்கிற கவலே எங்களுக்கும் இருக்கு..... தெரிஞ்சுண்டு வந்து ஒன்பது மணி திரும்பிலே சொல்லு. போ....'' என்றுர் ரெங்கண்ணு.

சிரித்தபடியே சபை கலைந்தது.

சுந்தாச்சு புஷ்கரணிப் பக்கம் போய்ச் சந்தி, ஜப, தபங்களே முடித்துக் கொண்டு கோயிலுக்குப் போய்விட்டு வந்தார்.

என்னமோ அவருக்கு மனசே சரியாக இல்லே. அன்று இரவு பலகாரம் அவருக்கு.

திண்ணையில் சபை மறுபடியும் ஒன்பது மணிக்குக் கூடும். இது வழக்கம்.

வெளியே கல்லபட்சத்து நிலவு டாக்கா மஸ்லின் போல் ஒளி பாய்ச்சியிருந்தது. பந்தற் காலில் கட்டியிருந்த கன்றுக்குட்டி, அடிக்கொரு முறை காதுகளைப் படபடத்துக் கொண்டு, அசை போட்டவாறே, 'தூங்கலாமா, வேண்டாமா?' என்று சிந்தித்துக் கொண்டிருந்தது.

சுந்தாச்சு படுக்கையை விரித்தார்.

அவருக்கு ஏனே எதிலும் இன்றைக்குச் சுரத்தாக இல்லே. ஒன்பது மணிச் சபைகூட ஒத்திப் போக வேண்டியதுதான். இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தார்.

''-என்ன ஓய், படுத்து விட்டீர்?'' என்ற வாறே வந்தார் அப்புச்சா.

''உடம்பு சரியில்லே'' என்றுர் அவர்.

'' உமக்குக்கூடவா? ஏன், என்ன செய்கிறது ?''

''வயிறு சரியாக இல்லே.....''

ரெங்கண்ணுவும் சாம்பு வாத்தியாரும் வந்து இதேபோல் விசாரித்துவிட்டுத் திரும்பிப் போனுர்கள்.

நடு நிசி இருக்கும். சுந்தாச்சு எழுந்தார். உண்மையிலேயே வயிறு சரியில்லே போலிருந்தது. என்னவோ கடமுடாவென்று உளைச்சல். போர்வையை உதறிவிட்டு, கண்ணைக் கசக்கிக் கொண்டு, உட்புறம் திரும்பிப் பார்த்தார். முன் வாயிலிலிருந்து கொல்லே வரை திறந்தே கிடந்தது. 'நாசமாய்ப் போச்சு.... கதவைத் தாழ் போடமாட்டாளோ? மட ஜென்மம்!' என்று திட்டியவாறே பின்புறம் போனவர், தோட்டப் பக்கம் பார்வையை நீட்டிஞர்.

அந்த நிலவொளியில் திணைற்றடியிலிருந்து பின்புறம் வால் போல் நீண்ட தோட்டம் சுவர்க்கலோகத்து நந்தவனம் போல் காட்சி அளித்தது. வாழை மரங்களின் வரிசை, பவழமல்லி, கருவேப்பிலே மரங்கள், அவரை, புடலேக்கொடி படர்ந்த பந்தல்கள், மிளகாய்ச் செடிகள் எல்லாமே ஒரு ரசவாதத்துக்கு ஆட்பட்டு மயக்கம் ஊட்டின.

சுந்தாச்சு இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை நடந்தார்.

அப்போதுதான் அது நடந்தது. அடுத்த கொல்லேப் பலா மரத்தடியில் சலசலப்பு கேட்கவே அவருடைய கவனம் திரும்பியது. ஓர் உருவம் மெள்ள நடந்து, பின்புறத்து வயல் ஓரம் நின்றது. சுற்றுமுற்றும் பார்த்தது. யார் என்று பார்த்தார் சுந்தாச்சு. துரைச்சா! சந்தேகமில்லே. அவனேதான். கதிர் முற்றி அறுவடைக்குத் தயாராக இருக்கும் அந்த நிலத்தை — விவகாரத்துக்கு ஆதி காரணமான அந்தப் பூமியை — திருட்டுத்தனமாகப் பார்வையிட அவன் வந்திருக்கிறுன் !

அவருடைய வியப்பு அடங்குவதற்குள், துரைச்சா மளமளவென்று நழுவி விட்டான் !

சுந்தாச்சு பரக்கப் பரக்க வாசல் பக்கம் வந்தார்.

''வெங்காச்சு!'' என்று கூப்பிட்டார்.

''என்ன?... என்ன?'' என்று அலறிப் புடைத்துக் கொண்டு அவர் எழுந்தார்.

''டேய், இனிமேல் வாசல் பக்கம் படுக்காதே.... உன் வயல் பிழைக்கணும்னு, கட்டிலைக் களத்துமேட்டிலே போட்டுக்கொள். துரைச்சா வந்துவிட்டு இப்போதுதான் போகிறான். என் கண்ணாலே பார்த்தேன்'' என்றார் சுந்தாச்சு.

'' அப்படியா?... என்ன திமிர் பார்த்தாயா அவனுக்கு?... என் நிலத்தில் கால் வைப்பானோ அவன், பார்த்து விடுகிறேன்.''

''எதற்கும் போலீசிலும் புகார் கொடுத்து வை........''

''போலீஸ் எதுக்குடா, இந்தச் சுண்டைக் காய் பயலுக்கு? இந்த வெங்காச்சு யார்னு அவனுக்குத் தெரியாது போலிருக்கு!... இருக்கட்டும், பேசிக் கொள்கிறேன்.''

இவ்வாறு சூள் உரைத்துவிட்டு வெங்காச்சு படுத்துவிடவே, சுந்தாச்சு பெருமூச்சுவிட்டவாறே வெற்றிலைச் செல்லத்தை எடுத்து ஒரு ஆவர்த்தனம் தாம்பூலம் தரிக்கலானார். — விச்ராந்தியாக. துரைச்சா இலேசில்விடமாட்டான் என்பது அவருக்குத் தெரியும். வாசல் திண்ணையில் இழுத்துப் போர்த்திக் கொண்டு படுத்தவாறே சூள் உரைப்பதோடு இந்த வெங்காச்சுவின் சாமர்த்தியம் முடிந்துவிடப் போகிறது.

மறுநாள் வழக்கம் போலத் தலையில் முண்டாசைக் கட்டிக் கொண்டு சுந்தாச்சு ஒரு 'ரவுண்டு' புறப்படவில்லை. உடல் நிலைதான் காரணம். போர்த்திக் கொண்டே உட்கார்ந்திருந்தால் தேவலை போலிருந்தது. புஷ்கரணியில் குளிப்பதும் சாத்தியமாக இல்லை. ஏதோ கஷாயம் போட்டுச் சாப்பிட்டார். முனகிக் கொண்டே திண்ணையில் வீற்றிருந்தார்.

அப்போது வெங்காச்சு ஈர வேட்டியுடன் புஷ்கரணி ஸ்நானத்தை முடித்துக் கொண்டு வரவே, சுந்தாச்சுக்கு ஆச்சரியம் தாளவில்லை. ஆயுசிலே ஒரு நாள்கூட புஷ்கரணிக்குப் போனவன் இல்லையே, இந்த வெங்காச்சு ? இன்றைக்கு என்ன திடீரென்று இந்த மாறுதல்?

''டேய், மழை வரும்டா இன்னிக்கு!'' என்றார் அவர், சிரித்தவாறே.

''ஏன்?.... புஷ்கரணியில் குளிப்பதற்கு எனக்குப் பாத்தியம் இல்லையோ ?'' என்றார் வெங்காச்சு. எதிலும் 'லா பாயிண்டு' தான் அவருக்கு !

''பாத்தியம் என்று சொல்லாதேடா, அது ஒரு பாக்கியம்டா.... அது சரி... ஏது இன்றைக்குத் திடீரென்று புஷ்கரணி ஸ்நானம்?''

''காரணமாகத்தான்.....''

''விளக்கமாகச் சொல்லேன்.''

''இப்போது சொல்ல மாட்டேன்....உனக்குத் தன்னாலே அது விளங்கும், போகப் போக.'

''புதிர் போடுகிறாயே !''

''இல்லே.... புதிரை அவிழ்க்கிறேன்.''

''என்னடா சொல்லறே நீ ?''

'' நான் எதுவும் சொல்லப் போறதில்லேடா, சுந்தாச்சு.... நீயே புரிஞ்சிப்பே....'' வெங்காச்சு சிரித்தார். பிறகு சொன்னார்: '' என்னவோ இன்னிக்குப் புஷ்கரணிக்குப் போக வேணும்னு மனசிலே பட்டுது..... நாமும் காலத்திலே சிலதை எல்லாம் முழுகித் தொலைக்க வேண்டியிருக்கிறதோ இல்லையோ? பார்க்கப் போனால், இந்த ஆசை, கோபம், தாபம் எல்லாத்தையுமே தலை முழுகிவிட்டால் எத்தனையோ நல்லது.... இல்லையா, சுந்தாச்சு ?.... மனசிலே சுமந்து கொண்டு திரியாமல், தீர்த்தத்திலே கரைத்துவிட்டு.... வந்துவிடலாமே... என்ன சொல்றே ?''

சுந்தாச்சுக்குக் காதுகள் புடைத்துவிட்டன. வெங்காச்சு பேசுகிறான். வீம்பும் முன்கோபமும் பூண்டு, சட்டத்தின் துணையுடன் ஊரையே மிதித்து ஏறி விடலாம் என்று கொடி கட்டும் வெங்காச்சுவா பேசுகிறான் ! அவனுடைய இயல்புக்கு மாறுபட்ட பாணியாக இருக்கிறதே !

வெங்காச்சு போய் விட்டார். ஆனால் சுந்தாச்சுவின் கண்ணிலிருந்து அவர் அகலவே இல்லை. தெருவிலேயேதான் நிற்கிறார். அந்த ஈரத் துண்டை உதறிச் சொடக்கியபடியே தத்துவம் பேசுகிறார். புஷ்கரணி மகிமை, ஸ்வாமீ, புஷ்கரணி மகிமை! ஒரு நாள் தலை முழுகினதிலே இத்தனை ஞான வெளிச்சமா ?

அவர் எழுந்து விட்டார். பின்கட்டில் மாடு குரல் கொடுத்தது.



சீனாவில் குடும்பத் தலைவன் மறைந்துபோனால் ஒரு காகித வீடு செய்து, அதில் காகிதங்களினாலேயே அலங்காரப் பொருள்களைச் செய்து வைத்து, அந்த வீட்டைக் கொளுத்துவது வழக்கம். அப்படிச் செய்தால் இறந்த குடும்பத் தலைவனுடைய ஆத்மா சாந்தியடையும் என்பது அவர்கள் நம்பிக்கை. பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் குடியிருந்த வீட்டையே கொளுத்தும் பழக்கம் இருந்து வந்ததாம். ஆனால் அந்தப் பழக்கம் மாறிக் காகித வீட்டில் வந்து முடிந்திருக்கிறது. ஒருவனின் ஆத்மா இரண்டு வருஷங்களுக்கு இறந்த பிறகு சுற்றிக்கொண்டிருக்கும் என்று சீனர்கள் நம்புகிறார்கள். அந்த ஆத்மா கடைத்தேறி, சொர்க்கம் அடையவே இந்த விநோத சம்பிரதாயத்தைக் கடைப்பிடிக்கிறார்களாம்! மறைந்த மனிதனின் புதல்வன் இந்தக் காகித வீடு முழுதும் எரிகிறதா என்று பார்த்து, முழுதும் எரிந்த பிறகே அந்த இடத்தை விட்டுத் திரும்பியோடு நகருவான்.

ஆதாரம் : உலகின் மிகப் பெரிய மதங்கள்

தகவல் : பி. எஸ். எம்.

பின்கட்டில் ஜானுக்குட்டி கேட்டாள் : "தாத்தா! பிறத்தியார் நிலத்திலே புகுந்து அறுவடை செய்ய லாமோ?"

"கட்டாயம் விடக் கூடாது. உன் புருஷனாக வரப்போகிறவனிடம் சொல்லி தடுத்து நிறுத்தச் சொல்லு!"

இப்படிச் சொன்னதும் அவள் முகம் குங்குமமாகச் சிவந்துவிட்டது. தலையை ஒரு திருப்பு திருப்பிக் கொண்டு உள்ளே ஓடிவிட்டாள். பதி னெட்டு வயதுக்கு நல்ல வளர்ச்சி, வாளிப்பு! அம் மாவை அப்படியே உரித்து வைத்திருந்தாள் ஜானு.



பையன் : 'ஹோம் ஒர்க்'கிலே கடைசியா இன்னும் ஒரு கேள்வி பாக்கி இருக்கிறதப்பா!

தகப்பனார் : என்ன அது?

பையன் : இந்த நோ கேள்வி களுக்கும் பதில் சொல்லிக் கொடுத் தது உன் அப்பாதானே?

சுந்தாச்சு சிரித்தபடியே மாட்டிக் கொட்டி லுக்குப் போனார். அவர் திரும்பி வந்த போது வேலிக்காலில் வெங்காச்சு நின்று கொண்டி ருந்தார். அவனே ஆரம்பித்தார்.

" சுந்தாச்சு, உன்னிடம் சொல்றதுக் கென்ன? புஷ்கரணிக்குப் போனதே, இந்த ஜானுக் குட்டிக்காகத்தான்...." என்றார் வெங்காச்சு, வேதனையுடன்.

" என்னது?.... நீ என்னடா சொல்றே?"

"இது உருப்படாதுடா, சுந்தாச்சு..... பிறந்ததுமே தாயை உருட்டிப்பிட்டாள்.... இப்போ என்னை உருட்டப் பார்க்கிறாள்."

சுந்தாச்சுவுக்கு எதுவும் புரியவில்லை. பேச் செல்லாம் மர்மமாகவே இருக்கவே, "சரி... சரி...இங்கே நாம் நின்று இதை யெல்லாம் பேச வேண்டாம்... வாசல் பக்கம் என் அறைக்கு வா...." என்றார்.

"நடுத் தெருவுக்கே விஷயம் வந்துவிட்ட பிறகு, ரகசியம் வேறேயா இதிலே?" என்றார் வெங்காச்சு.

"இங்கே வேண்டாம்" என்று அழுத்துக் கொண்டு சுந்தாச்சு நகர்ந்தார். அவருக்கு எதுவும் புரியவில்லை.

முன் அறையில் அவர்கள் உட்கார்ந் தார்கள். வெங்காச்சு முகத்தைத் துடைத் துக்கொண்டார். வியர்வை கட்டியிருந்தது முகமெல்லாம்.

" நேத்து ராத்திரி நீ துரைச்சாவைப் பார்த்ததாகச் சொன்னாய். இல்லையா?" என்று ஆரம்பித்தார்.

"ஆமாம்.... அவனேதான். சந்தேக மில்லை" என்றார் சுந்தாச்சு.

"நீ என்னை எச்சரித்து விட்டுப் படுத்ததும், எனக்குத் தூக்கம் பிடிக்கல்லே.... கொஞ்ச நேரம் கழிச்சு, நான் எழுந்து பின்பக்கம் போனேன்....."

"அவன் இருந்தானா ?"

" இருந்தான்... பலாமரம் இருக்கு பார். அதன் கீழே உட்கார்ந்திருந்தான்... அவன் மட்டும் இல்லே, கூடவே இன்னொரு ஆத்மா வும் இருந்தது."

"யார்டா அது, இன்னொரு ஆசாமி?"

" சுந்தாச்சு, நான் இப்படி ஆகும்னு நினைக்கவே இல்லேடா... எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியல்லே. அதனால்தான் புஷ்கரணிக்கு ஓடினேன், காலங்கார்த் தாலே......."

"விவரமாச்சொல்லேன்."

"என்னத்தைடா சொல் றது ?.... எனக்கு அழகான பேத்தி ஒருத்தி பிறந்திருக் கிறாள், பார், அவள்தான்.."

வெங்காச்சு முடிக்கவில்லை. சுந்தாச்சு திகைத்து விட் டார். " என்ன ? என்ன?... ஜானுவா துரைச்சாவோடு பலா மரத்தடியிலே உட்கார்ந் திருந்தாள் என்கிறாய்?... நன் றாகப் பார்த்தாயாடா ?" என்று கேட்டார்.

"நன்றாக, இந்த இரண்டு கண்களாலும், பார்த்தேன்டா, சுந்தாச்சு... தலை முழுகி விட்டேன்டா அவளை இதோடு! புஷ்கரணி யிலே போய் முழுகி விட்டு வந்திருக்கிறேனே. போதாதா ?" வெங்காச்சுவின் கண்ணில் நீர் வழிந்தது.

சுந்தாச்சுவின் அதிர்ச்சி அவ்வளவு எளிதில் தீர்வதாக இல்லை. சற்றும் எதிர்பாராத திருப்பம் இது !

வெங்காச்சு பேசலானார். "போகட்டும்... நான் முடிவு பண்ணிப்பிட்டேன்.... என் கட்சி தோற்றுப் போனாலும், ஒரு வகையிலே இது எனக்கு ஜெயம்தான்.... அந்த மஞ்சக் காணியை அவன் அறுவடை செய்து கொண்டு போகட்டும்... அத்து மீறிக் கொள்ளை அடித்த கெட்ட பெயர் எனக்கு வராது. இதிலே அவமானமும் இல்லே....."

"நீ என்ன சொல்றே, வெங்காச்சு?" புரிந்தும் புரியாததுமாகத் தொக்கி நின்ற கேள்விக்கு விடையை நாடிச் சுந்தாச்சு வினவினார்.

" டேய், பெருமாள் தீர்த்தத்திலே முழுகிவிட்டு வந்து பேசறேன். குலம் தழைக் கிறதுக்குச் செய்த ஸ்நானமாக அது இருக் கட்டும்" என்றார் வெங்காச்சு.


சுந்தாச்சுவின் கண்கள் இப்போது புஷ்கரணியாகி விட்டன. "வெங்காச்சு, எனக்கு என்ன சொல்றதுன்னே புரியல்லேடா கடைசியிலே நீ ஜெயிச்சுட்டே...." என்றார்.

வெங்காச்சு சிரித்தார். பிறகு பேசினார்: "இதோ பார், அந்தக் குட்டியும் ஆசைப்பட றாள்.. நிலமும் விவகாரப் பூமியாகப் போச்சு. காதும் காதும் வைத்தாற் போல் முடித்து விட்டு....நிலத்தோடு பெண்ணைக் கொடுப் பேன். அவ்வளவுதான்.... மேற்கொண்டு சீர், செனத்தி என்று பேசக் கூடாது."

"பேசினால், கோர்ட்டிலே போய் 'ஸ்டே' வாங்குவாய்.... அப்படித்தானே?" என்றார் சுந்தாச்சு.

இருவரும் சிரித்தனர்.

நெடிதுயர்ந்த கோபுரம் விண்ணை அளாவிக் கொண்டு நின்றது. அதன் நிழலைத் தன்னுள் வாங்கிக் கொண்டு அகலப் பரந்து கிடந்தது புஷ்கரணி.



□ இக்குறியிட்ட கடிதம் ரூ. 15 பரிசு பெறுகிறது.

பரிசுச் சீட்டு நடத்துவதை மூதறிஞர் ராஜாஜி கடுமையாக எதிர்ப்பதை நாடு அறியும். ராஜாஜி அவர்கள் இதமாகவும் பதமாகவும் எவ்வளவு சொல்லியும் கள்ளுக் கடையைத் திறக்க என்னும் அரசு கேட்காது என்பது தெளிவு. ஆனால் ஓர் உதவி மட்டும் கோர விரும்புகிறோம். பரிசுச் சீட்டு அலுவலகம் ராஜாஜி மண்டபத்தில் இருக்கிறது. அது காந்தி இல்லத்தில் சாராயக் கடை இருப்பதற்கு ஒப்பாகும். அதையாவது வேறு கட்டடத்துக்கு மாற்றிவிடுமாறு வேண்டுகிறோம்.

சென்னை
28–4–71 ''நளபாகன்''

□ **ம**துவிலக்குக் கொள்கையைத் தமிழ்நாடு அரசு கைவிட்டுவிடக் கோரித் தி. மு. கழகத்தின் செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். முப்பது வருடங்களுக்கும் மேலாகக் கட்டிக் காக்கப்பட்டுவந்த கொள்கையை — அண்ணல் காந்தி அவர்களால் உருவாக்கப்பட்டு, மூதறிஞர் ராஜாஜி அவர்களால் முதன் முதலில் அமுல் செய்யப்பட்ட, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கொள்கையை — வருமானத்தில் நஷ்டம் என்ற ஒரே காரணத்துக்காகக் கைவிட நிச்சயித்திருப்பது மக்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள எல்லோருக்கும் அதிர்ச்சியை அளிக்கும்.

வருமானம் அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காக, எதை வேண்டுமானாலும் அரசாங்கமே செய்யலாமா ?

உண்மையிலேயே ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண அரசு விழையுமானால், மதுவிலக்குக் கொள்கையை அரசு எக்காரணம் கொண்டும் கைவிடக் கூடாது.

சென்னை
26–4–71 ரா. ஜெயராமன்

கடந்த வாரம் நான் ஸ்ரீரங்கம் கோயிலுக்குச் சென்றிருந்தேன். நான் சென்றிருந்த சமயம் பாரிஸிலிருந்து சுற்றுலா கோஷ்டி ஒன்று வந்திருந்தது. நம் ஊர் 'கைட்' அவருக்கு ஏதேதோ சொல்லி வந்தார். அப்படி அவர் விளக்கியதில் ஒன்றை அவர் கூறிய ஆங்கிலத்தில் அப்படியே தருகிறேன்:

This is Lord Krishna. He is playing with Ladies. They are without sarees. This is a social play.

கோபுரத்தில் உள்ள கோபி கிருஷ்ணனின் சிற்பத்துக்கு அந்த 'கைட்' தந்த விளக்கம் இது.

இதைக் கேட்டு நான் மிகவும் வேதனை அடைந்தேன். நமது சாஸ்திரங்களின் உண்மையான தத்துவங்களை எடுத்துச் சொல்லத் தெரியாத இவர்களெல்லாம் 'கைட்' ஆகப் பணி புரிந்து, நம் பண்பாட்டைக் குலைக்கிறார்களே என்று வருந்தினேன்.

நாட்டில் படித்த பட்டதாரிகள் பலர் உளர். அந்தப் பட்டதாரிகள் பகுதி நேர வழிகாட்டியாக (Part time guide)ப் பணிபுரிய முன் வந்தால் அது எவ்வளவோ பயன் உள்ள தொண்டாக அமையுமே என்று தோன்றியது.


அதற்கென்று கோயில்கள், வரலாற்றுச் சிறப்புமிக்க நகரங்கள் இவை பற்றிய அறிவை அவர்களுக்குக் கொடுக்கக் குறுகிய காலப் பயிற்சி நிலையம் ஒன்று அமைக்க வேண்டும். அப் பயிற்சி நிலையத்தில் பயின்றவர்களே 'கைட்' ஆகப் பணிபுரிய வேண்டும் என்ற ஒரு நிலையையும் உண்டாக்க வேண்டும். தேவையானால் அவர்களுக்கு ஓர் அடையாளச் சின்னமும் வழங்க வேண்டும்.

திண்டுக்கல்
29–4–71 மா. கமலவேலன்

நண்பர் ஒருவர் மேற்கு ஜெர்மனியில் தயாரான டேப் ரிகார்டர் — ரேடியோகிராம் ஒன்று அமெரிக்காவிலிருந்து வாங்கி வந்திருந்தார். அமெரிக்காவில் வீடுகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்த மின்சார வோல்டேஜுக்குத் தக்கபடி தயாரிக்கப்பட்ட கருவியைச் சென்னையில் கிடைக்கும் மின்சார அளவுக்கேற்ப மாற்றி அமைத்து இயக்குவதற்கான கருவியின் பகுதியொன்றை வாங்கும்போது தரத் தவறி விட்டார்கள் என்று எஞ்சினீயர்கள் தெரிவித்தார்கள். அதைக் குறிப்பிட்டு மேற்கு ஜெர்மானிய நிறுவனத்துக்கு எழுதியதும் சில நாட்களிலேயே விமானப் பார்சலில் அனுப்பி விட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னர் சென்னையில் புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றில் பிரம்பு நாற்காலிகளை நாங்கள் வாங்கினோம். ஒரு நாற்காலியின் கால்களில் மட்டும் அடியில் பொருத்தப்பட வேண்டிய ரப்பர் வில்லைகள் அடிக்கத் தவறிவிட்டதை வீட்டுக்கு வந்தபின் கவனித்தோம். மறு நாள் இது பற்றிக் குறிப்பிட்டுக் கேட்டதற்கு, ''இப்போது தர முடியாது. அப்போதே பார்த்து எடுத்துச் சென்றிருக்க வேண்டும். ஒரு ரூபாய் கொடுத்தால் நான்கு ரப்பர் வில்லைகளையும் நான்கு ஆணிகளையும் தருகிறோம்'' என்றார்கள். உள்ளத்தில் கசப்போடு ஒரு ரூபாய் கொடுத்து வாங்கி வந்து பொருத்தினோம். இந்நிகழ்ச்சிகளை ஒப்பிட்டுப் பாராமல் இருக்க முடியவில்லை.

சென்னை — 45
10–5–71 எல். கமலவேணி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam


டாடா டெக்ஸ்டைல்ஸ் வெளியீடு!
பேட்டிஸ்ட்
இலட்சோப லட்சம் ரசிக
பெருமக்களின் இதயங்களை
கொள்ளை கொள்ளும்
வரலாறு காணாத படைப்பு.
டெரீன் / காட்டன் ஷர்ட்டிங்.
குறுக்கிடும் சுருக்கங்களை வென்று வீழ்த்தி, இஸ்திரி பெட்டிகளை எட்டி உதைத்து எத்தனை பழசானாலும் என்றும் வெண்மை பளிச்சிட, ஏறுநடை போடும் எழுச்சிமிக்கத் தயாரிப்பு. இப்படியொன்று இதுவரை துணிவானில் சுடர்விட்டதில்லை என பார்த்தவர் பாராட்டுகிறார்கள்! கோர்டல் ஷர்ட்டுகள் பேட்டிஸ்ட்டின் கைவண்ணமே
தயாரிப்பாளர்கள்:
டாடா டெக்ஸ்டைல்ஸ்
ULKA-TT, 94 TM.
கண்டு களியுங்கள் பேட்டிஸ்ட் இப்போது உங்கள் அருகமைந்த கடைகளில் கிடைக்கின்றன

REGISTERED No. M. 4392

Registered as a Newspaper in Ceylon